

# ஞானச்சுடர்

கார்த்திகை

2011



முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள்வழி



**முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்.**

பொருள் : தருமம் என்று சொல்லப்படுவது விருந்தினரைத் தூரத்தில் கண்டவுடன் முகம் மலர்ந்து பார்த்துப் பின் அவர் மனத்தில் எழுகின்ற அன்பு உணர்ச்சியினால் இனிய சொற்களைச் சொல்லுதலாகும். (93)

**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு.**

பொருள் : எவரிடத்தும் இன்பத்தை அதிகம் கொடுக்கும் இனிய சொல்லைப் பேசுகின்றவர்களுக்கு வருத்தத்தைத் தருகின்ற வறுமை வராது. (94)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை
## தங்கமே! எல்லாஞ் சிவ மயமே

**சுட்டாமல் சுட்டிடடி சோதிசிவ ரூபமடி**
**கிட்டாத பொருளென்று - தங்கமே**
**கீழ்நோக்கிப் பாராதே** 09

**எட்டாத கொப்பினிலே இருக்குதடி தேனமிர்தம்**
**தட்டாமல் சாப்பிடடி - தங்கமே**
**சமனாவார் ஒருவரில்லை** 10

**பத்தும் படிப்போர்க்குப் பாக்கியமுஞ் சிலாக்கியமும்**
**இத்தரையி லுண்டாமடி - தங்கமே**
**எல்லாஞ் சிவமயமே** 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞானச்சுடர்



வெளியீடு - 2 சுடர் - 167

2011 கார்த்திகை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மாதங்களில்....... | இ. ஸ்ரீதரன் | 01- 02 |
| வித்தகா! உன் ஆடல்..... | திருமதி பா. சிவனேஸ்வரி | 03- 05 |
| விநாயகர் வழிபாடும்.... | த. சுகந்தன் | 06- 07 |
| கந்தனே கலியுகத்..... | கே.வி. குணசேகரம் | 08- 09 |
| பெண்ணின் பெருமை | இ. சிவராசா | 10 - 14 |
| பட்டினத்தார்..... | முருகவே பரமநாதன் | 15 - 17 |
| மனிதனென்பவன்..... | கா. கணேசதாசன் | 18 - 19 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 20- 22 |
| கல்வியே கருந்தனம் | கு. சோமசுந்தரம் | 23- 24 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 25 -27 |
| வாழ்க்கை உங்கள்.... | ஜக்கி வாசுதேவ் | 28 -29 |
| பரிபாடல் பகரும்..... | சிவ. சண்முகவடிவேல் | 30 -32 |
| புகலிட வாழ்வில்.... | க. கனகராசா | 33 -34 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 35 -36 |
| சிறுவர் கதைகள் | - | 37 -38 |
| காரைக்கால்..... | T. நாகராசா | 39 -41 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 42 -43 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 44 -46 |
| நித்திய அன்னப்பணி | - | 47 -48 |
| அஞ்ஞான இருள்.... | - | 49 -51 |
| இலிங்கத்தை..... | ஆ. மகேசு | 52 -54 |
| அருணகிரிநாதரும்... | கு. நவரத்தினராசா | 55 -57 |
| வாசகர் போட்டி | - | 58 -59 |
| தமிழகத் திருக்கோயில்...... | வல்வையூர் அப்பாண்ணா | 60-64 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 0213219599

அச்சகம்- சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஐப்பசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஐப்பசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை திரு சி. பத்மநாதன் J.P அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில், ஆற்றங்கரை வேலவனின் அருள் நிறைந்திருக்கும் இவ்வாச்சிரமம் கந்தப்பெருமானின் அருளோடு பல்வேறுபட்ட சமய, சமூகப் பணிகளை ஆற்றிவருகின்றது. இப்பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றது என்பதை ஆச்சிரம மண்டபச் சுவரில் மாட்டப்பட்டுள்ள படங்களே எடுத்துக்காட்டுகின்றது என்றும், வாராந்த வெள்ளி நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்விற்கு ஓரிடத்தைக் கொடுத்து சமய ரீதியாக மாணவ சமுதாயத்தை வளர்க்கும் பணி மகத்தானது என்றும், மேலும் இம்மலர் தொடர்ந்து வெளிவருவது சைவ மக்களுக்கு அரிய பொக்கிஷமாக அமைந்துள்ளது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

ஐப்பசிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை சைவப்புலவர் க. நித்திய கவீந்திரன் (ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது மதிப்பீட்டுரையின்போது, "சந்நிதியான் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தினது செயற்பாடுகள் யாவும் மேலைத் தேசக் கலாச்சாரம், நடை, உடை, பாவனைகள் யாவும் மேலோங்கி நிற்கின்ற தற்காலச் சூழ்நிலையிலும்கூட உலக மனித விழுமியங்களைக் கடைப்பிடிக்காதது வருவதோடு கடமை உணர்வு, ஒழுக்கங்கள், சைவ சமயப் பண்புகள் போன்றவற்றை நன்நெறிப்படுத்துவதாகவே காணப்படுகின்றது" என்றார்.

மேலும் இம்மலரில் நல்லவர்களாக ஆசைகளை அடக்கி அமைதியாக வாழ்ந்தால் வாழ்க்கையில் வெற்றிகொள்ள முடியும் என்பதற்கு பல்வேறு ஒழுக்க விதிகளை எளிய மொழிநடையில் இலகுவில் வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடியவாறு கட்டுரைகள், சிந்தனைகள், சுடர் தரும் தகவல், பொன்மொழிகள் போன்றன அமைந்துள்ளது என்பதை சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு இரத்தினச் சுருக்கமாக விளக்கிக் கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்



இம்மாதத்துக்கான சுடர் தரும் தகவல் திருமுறை ஓதல் பற்றியதாகும். புராண படனங்கள் பண்ணோடு கூட்டி நிகழ்த்தவேண்டியிருப்பது போலவே திருமுறை ஓதுதலும் பண்ணோடு இசைக்கப்பட வேண்டியதாகும். எமது சமயகுரவராகிய நாவுக்கரசர் அருளிய தேவாரப் பதிகங்கள் சரியையோடு தொடர்புடையன; சம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்கள் கிரியையோடு தொடர்புடையன; சுந்தரரின் தேவாரப் பதிகங்கள் யோகத்தோடு தொடர்புடையன; மாணிக்கவாசகரின் திருவாசகம், திருக்கோவையார் என்பன ஞானத்தோடு தொடர்புடையன. இந்த நோக்கில் சம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டமை கொண்டு சம்பந்தரின் தேவாரம் பாடிய பின்பே, நாவுக்கரசர், சுந்தரரின் தேவாரங்களைப் பாடவேண்டும் என்ற கருத்தைச் சைவ உயர் பீடங்கள் சிந்திக்க வேண்டுமென்பதே எமது வேணவா.

எம்பெருமான் எமது சமய குரவர்களைத் தோற்றுவித்த ஒழுங்குமுறையில் நாவுக்கரசரே முதல் தோன்றியிருக்கிறார். இங்ஙனமாக நாவுக்கரசரின் தாண்டகத்தினை முதலில் இசைப்பது ஏற்புடையதாகலாம்.

புராணம் ஓதும்பொழுது, பெரிய புராணமே ஓதப்பட வேண்டும், பிற புராணங்கள் ஓதப்படத்தக்கவையல்ல என்னும் கருத்தும் எழுவதைக் காண்கிறோம். எழுந்தருளி மூர்த்தி விநாயகரேனின், அவருக்குரிய புராணத்தை ஓதுதல் ஏற்புடைத்தாம் என்பதும் எமது எண்ணம்.

மார்கழி மாதம் தேவர்க்குரிய விடியற்புறக் காலமாதலினால் அம்மாதத்தில் திருவாசகமே ஓதப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பதையும் உளங்கொள்ளலாம். இக்காலத்தில் ஏனைய திருமுறைகள் எல்லாவற்றையும் கட்டிவைத்து, திருவாசகத்தை மட்டுமே ஓதுகின்ற வழக்கத்தை, யாழ்ப்பாணத்திலுள்ள சமய அறிஞர்கள் கைக்கொள்ளாதாகவும் அறியக்கிடக்கின்றது. ஆகவே அவ்வவ் மூர்த்திக்கான புராணம் பாடுவது பொருத்தமுடையதென்று ஞானச்சுடர் கருதுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதியானை ஏத்திப் பணிமினே



ஆதி நாயகன் அருட்செல்வச் சந்நிதி யமர்ந்த
சோதி நாயகன் துயர்களைந் துயமவர்க் கெல்லாம்
நீதி நாயகன் நெஞ்சிலே நினைப்பவர்க் கெல்லாம்
ஓது நாயகன் உயர்வழி வேற்படை யோனே.

தலையி னாலவன் திருவடி சென்னிசேர்த் தார்
நிலையி னாலவன் செயலெலாம் நினைந்து நெஞ்சார
கலையி னாலவன் திருப்புகழ் பாடியே நாவார
உலகை யாமவன் ஒளிகண்டு உருககண்டு உணர்ந்தேத்துவீரே

செய லெலாம் அவன் செயலென்ன அவன்துணை யறிவீர்
அய லெலாமவன் அன்றிவே றின்றென்பதும் அறிவீர்
மய லெலாமொரு மயக்கமே அவனன்றிப் பிறிதில்லை
முயலுங் காரியமனைத்திலும் முன்னிற்பான் முருகோனே.

ஆவ லாகியே சந்நிதி சென்றுமின் ஆர்வத்துடனே
காவ லாகவே துணைக்கொண்டு கருதிநீர் நெஞ்சால்
நாவலை அவன் திருப்புகழ் பாடியே நயந்தேத்தி
தேவ தேவனை அவனது சேவடி பணிந்தேத்துமினே.

அடுத்துக் கோயிலை வலம்வந்து அழகனைக் கண்டு
எடுத்துக் கைகளைக் கூப்பியே என்னையா என்று
முழுத்தலை வைத்து முகத்திலும் அகத்திலு மேத்தி
தொழுது சரவண பவவென்று ஓதிச்சிந் திப்புமே.

வள்ளி மாமயில் வீரனை புகழ்புரி சந்நிதி யானை
வெள்ளி குஞ்சரி மணாளனை வணங்கியே வரங்களைக் கேட்டால்
அள்ளி யள்ளியே அகமெல்லாம் மலர்ந்திட அருள்வான்
கொள்ளை இன்பமாய் என்றுமே விளங்கலாம் குறிப்பிட்டே.

முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**S. சதாசிவமூர்த்தி**
(கனடா)
**K. கனகசபேசன்**
(கனடா)
**உரிமையாளர்**
(V.S. பேரம்பலம் அன்சன்ஸ், யாழ்.)
**K. கனகேஸ்வரன்**
(ஆணையாளர், தொழில் அலுவலகம், யாழ்.)
**ந. தங்கராசா**
(சட்டத்தரணி, புலோலி மேற்கு)
**அறங்காவல் சபை**
(வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்)
**ச. வைத்தியநாதக்குருக்கள்**
(கந்தவனக்கடவை, பொலிகண்டி)
**இ. இராஜகோபால்**
(கிளை. முகாமையாளர், நாவலடி, உடுப்பிட்டி)
**T. நந்தகுமார்**
(உடுவில் றோட், மானிப்பாய்)
**ஐ. சிவானந்தம்**
(கிராமசேவையாளர், இராசவீதி, நீர்வேலி)
**மா. ஞானலிங்கம்**
(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)
**க. தங்கராசா**
(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)
**சி.வ. முருகையா**
(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)
**கந்தையா சிவப்பிரகாசம்**
(ஸ்ரீ அம்பாள் குறோசறி, பண்டத்தரிப்பு)
**க. உருத்திரேஸ்வரன்**
(செட்டித்தெரு, நல்லூர்)
**அ. அரவிந்தன்**
(G.P.S. றோட், கல்வியங்காடு)
**மார்க்கண்டு சற்சிதானந்தம்**
(பிரதானவீதி, நாவற்காடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**K.V. சிவனேசன்**
(சத்ய சாயி நிலையம், கொக்குவில்)
**ம.க. ஸ்ரீதரன்**
(சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்)
**இ. தம்பிரத்தினம்**
(முருகேச பண்டிதனார் வீதி, சுன்னாகம்)
**திருமதி P. குகதாசன்**
(K.K.S. வீதி, இணுவில்)
**கணேசமூர்த்தி மோகனதாஸ்**
(ஆறுமுகம் வீதி, நுணாவில் மேற்கு)
**வ. செல்லத்துரை**
(சங்கீத கலாபூஷணம், அச்சுவேலி)
**சி. கண்ணன்**
(படப்பிடிப்பாளர், மாசியப்பிட்டி)
**சி. விஜயகுமார்**
(சந்திரன்கடை, உரும்பராய்)
**தா. சிவநாமம்**
(வீரமாகாளி அம்மன் கோயிலடி, தும்பளை)
**த. சிவசுப்பிரமணியம்**
(லீலா வெதுப்பகம், சங்கானை)
**செல்வநேசன் கஜன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
**க. பரராஜவிருந்தம்**
(காவில், கரணவாய்)
**க. புவனேந்திரன்**
(கண்டாவத்தை, அல்வாய்)
**கந்தசாமி கதிர்காமத்தம்பி**
(மல்லியோடை, வல்வெட்டி)
**K. மகேந்திரம் J.P.**
(நவநீதபதி, இமையாணன்)
**க. கோபாலசுந்தரம்**
(வசந்தவாசா, பொலிகண்டி)
**பத்மா**
(கொழும்புத்துறை றோட், சுண்டுக்குளி)
**R.V. கந்தசாமி**
(மருத்துவமனைவீதி, யாழ்ப்பாணம்)
**ம. பேரின்பநாதன்**
(செட்டித் தெரு, நல்லூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. கரீந்திரன்**
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
**ச. தட்சணாமூர்த்தி முதலியார்**
(கஜபதி, இணுவில்)
**செ. பாலச்சந்திரன்**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**சுபத்திரா விவேகானந்தன்**
(அளகொல்லை, அளவெட்டி)
**து. சிவகுமாரன்**
(கணேசன் சென்ரர், K.K.S. வீதி, இணுவில்)
**கந்தலிங்கம் கிருபானந்தகிருஷ்ணன்**
(குப்பிளான் தெற்கு, ஏழாலை)
**ச. வதனி**
(நீர்வேலி மேற்கு)
**நா. கார்த்திகேசு**
(புத்தூர் கிழக்கு)
**நீ. மயில்வாகனம் J.P.**
(வருணன், அச்சுவேலி)
**T.N. இராஜா**
(பொன்கிளர், சங்கானை)
**சோதிரட்ணம் அனுஷியா**
(அரசடி சந்தி, நவாலி)
**S. மகேந்திரம்**
(ஒஸ்காலேன், உரும்பராய்)
**செ. உமாபதி**
(பிராமண வீதி, தும்பளை)
**V. சந்தனத்தேவன்**
(தூதாவளை, கரணவாய்)
**ஐயாத்துரை நடராசா**
(சிவசிதம்பரம் வளவு, கரவெட்டி)
**S. செந்தூரன்**
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
**செல்வி அருளம்பலம் சுசிகலா**
(கொத்தியகாடு, தொண்டைமானாறு)
**S. கந்தையா**
(மாணிக்க வளவு, கரணவாய்)
**ப. நா. தம்பிராசா**
(K.K.S. வீதி, இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A. பிரதாபன்**
(சந்திரபுரம், உடுவில்)

**ந. இராசேந்திரம்**
(சோதிவாசா, இணுவில்)

**செல்வி செ. நாகமுத்து**
(சிதம்பரம், மட்டுவில் வடக்கு)

**திருநாவுக்கரசு ஜெயக்குமார்**
(செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு)

**K. கந்தராஜ்**
(கதிர்காம வசந்தம், இணுவில் கிழக்கு)

**திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்**
(சுகவனம், உரும்பராய்)

**V.S. மருதலிங்கம்**
(அரசடி சந்தி, மானிப்பாய்)

**வ. பாலேஸ்வரி**
(கதிரிப்பாய், அச்சுவேலி)

**த. கணபதிப்பிள்ளை**
(சாயி இல்லம், கொல்லோலை, இமையாணன்)

**மு. நவரெத்தினம்**
(வீரப்பதிராஜன், கரணவாய்)

**பொ. ஞானப்பிரகாசம்**
(சித்தம்பாதி, கரணவாய்)

**சிவகுரு குகதாசன்**
(செல்வமதி, ஆவரங்கால்)

**வ. தம்பையா**
(கலட்டி வளவு, புலோலி மத்தி)

**குமாரதாசன் கீர்த்தனன்**
(வல்லிபுரம், புலோலி)

**திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம்**
(செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கு)

**வைத்திலிங்கம் பிரபாகரன்**
(துரைவீதி, கொக்குவில்)

**சி. இளம்பூரணன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதங்களில் சிறந்த மார்கழி

திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

சைவ சமயிகளுக்கு மார்கழிமாதம் ஒரு தனித்துவமான சிறப்பு வாய்ந்த மாதமாகும். இந்த மார்கழி பிறந்துவிட்டாலே கொண்டாட்டந்தான். மார்கழி முதல் நாளிலிருந்து இறுதிநாள் தை வரும்வரைக்கும் ஒவ்வொரு நாளும் வீட்டு வாசலில் மாக்கோலம் போட்டுப் பிள்ளையார் பிடித்து வைத்து தெய்வீக மணங்கமழும் இல்லச் சிறப்பே தனி.

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற தனிப்பெருமை வாய்ந்த மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் இந்த மார்கழி மாதத்திலேயே முற்றோதல் செய்யப்படுகின்றது. அது மாத்திரமன்றி ஆண்டாள் பாடிய திருப்பாவையும் இம்மாதத்தில்தான் பாடப்படுகின்றது. தேனினும் இனிய தித்திக்கும் திருவாசகமான திருவெம்பாவைப் பதிகமும் இந்த மார்கழியில் ஓதப்பெறுவதனால் மார்கழிமாதம் மகத்துவமானதே. வருஷத்தை நாளாகப் பிரித்தால் உத்தராயணத்துக்கு முந்திய உஷத் காலத்தில் மார்கழி வருகிறது.

தேவர்களுக்கு ஆடிமாதம் முதல் மார்கழி முடிய இரவும் தை முதல் ஆனி முடிய பகலுமாக ஒரு நாளாகும். எனவே, தேவர்களுக்கு மார்கழி இரவின் இறுதிக்காலம். இதனால் மார்கழி சிறப்புப் பெறுகின்றது.

சூரியோதயத்துக்கு முன் எழுந்து நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து சிவாலய தரிசனஞ் செய்தால் முத்திப் பேறடையலாம். மார்கழி முழுநாளும் மற்றப் பாடல்களைத் திருக்காப்பிட்டு வைத்துவிட்டுத் திருவாசகம் மட்டும் ஓதுகின்ற வழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. "மார்கழியில் நீராடி மகிழ்ந்திருக்க வாராய்" என்று பெண்கள் ஒருவரையொருவர் துயிலெழுப்பி அதிகாலை வேளையில் ஆலய தரிசனத்துக்குச் செல்வதாகச் சிதம்பர மான்மியம் கூறுகிறது.



மார்கழியில் நீராடி மகேஸ்வரனைத் தியானித்தால் பிறவித்துயர் நீங்கும். "ஆர்த்த பிறவித்துயர் கெட நாமார்த்தாடுந் தீர்த்தன்" என்பது மணிவாசகர் திருவாக்கு. "உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்; உன் அடியார் தாள் பணிவோம். ஆங்கவர்க்கே பாங்காவோம்; அன்னவரே எங்கணவராவார் அவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்" எனும் வரிகள் முற்காலப் பெண்களின் வாழ்க்கைச் சிறப்பினை எடுத்துக்காட்டி நிற்கின்றன. ஆகவே, மார்கழி மகிமையும் மகத்துவமும் புனிதமும் புண்ணியமும் நிறைந்த ஒரு மாதமாகும். நம் முன்னோர் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டிப் போயிருக்கின்றார்கள். அவர்கள் வாழ்ந்து காட்டிய பாதையிலேயே எமது வாழ்க்கைப் பயணமும் தொடரவேண்டும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கூட தமது பகவத்கீதையில் மாதங்களில் தாம் மார்கழி என்று குறிப்பிடுகின்றார். மார்கழி மாதம் முழுக்க அதிகாலைவேளைப் பொழுதான வைகறையிலே வீதி பஜனை செய்து பக்தி மணங்கமழ வலம் வரும் அடியார் திருக்கூட்டம் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியில் விபூதி துலங்க கழுத்திலே உருத்திராட்சம் இலங்க பக்திப் பரவசத்துடன், "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!" என்று பாடிக்கொண்டு வருகின்ற பக்தர் திருக்கூட்டத்தை இந்த மார்கழி அதிகாலை வேளையிலே பரக்கக் காணலாம்.

மார்கழித் திருவாதிரை தில்லை நடராஜருக்குரிய தினமாகும். சிவனடியே சிந்திக்கும் சிவனடியார் கூட்டம் "ஆருத்திரா தரிசனம்" காண அதிகாலை வேளையிலே கூடிவிடும். "அப்பனுக்கு அரோகரா! தில்லை ஐயனுக்கு அரோகரா" என்று கோஷம் எழுப்பிய வண்ணம் பக்தர் குழாம் சூழ்ந்துவர சிதம்பரத்திலே கனக சபையிலே பொன்னம்பலவாணர் திருநடனம் ஆடித் தில்லைத் தாண்டவம் புரியும் "தரிசனம்" காண நாம் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

அடியார் புடைசூழ ஆனந்தத் தாண்டவம் புரியும் தில்லை நடராஜனுக்கு இந்த மார்கழியே சிறந்த விழாக் காலமாகும். பக்குவமடைந்த ஆன்மாக்கள் ஆணவமல இருளில் கிடந்து உழலாமல் சிவபிரானின் எல்லையில்லாத திவ்ய பேரருட் கடாட்சத்தில் மூழ்கித் திளைக்க இந்த மார்கழியே உகந்தமாதமாகும்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங்கிய உவமையிலாக் கலை ஞானத்தைச் சென்றடைய இந்த மார்கழியே தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஆதலால் மகத்துவமும் மகிமையும் மாண்புமுடைய மார்கழியில் மகாதேவனான தில்லைச் சிற்றம்பலத்தான் அடிபணிந்து அருள் மழையில் நனைய நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக. செய்வீகளா!

## "மனம்போல் மாங்கல்யம்" என்று பெரியவர்கள் சொல்வதன் தாற்பரியம் என்ன?

**நூறு வருடம் பழமையான ஒரு கதை சொல்கிறேன். கப்பலேறி வெளிநாடு சென்ற ஒருவர், அங்கு கடற்கரை நகர் ஒன்றில் கடுமையாக உழைத்து பணக்காரர் ஆனார். சாகும் முன் சொந்த நாட்டுக்குத் திரும்பிவிடவேண்டும் என்பது அவரது உறுதியான ஆசை.**

**ஆனால், திடீரென்று அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. மரணத் தறுவாயில், இறந்த பிறகு தம்மைச் சொந்த மண்ணில் புதைக்கவேண்டும் என்று தன் பிள்ளைகளிடம் கேட்டுக்கொண்டார். அப்போதைக்கு "சரி" என்ற பிள்ளைகள், அவர் இறந்த பிறகு "செத்தவனுக்கு என்ன தெரியவா போகிறது" என்று அங்கேயே கடற்கரை ஓரமாகப் புதைத்து விட்டனர்.**

**இரவு பெரும் புயல் அடித்தது. கடல் சீறி கரை தாண்டியதில், புதைத்திருந்த இடம் கரைந்தது கடலில் மிதந்த பிணம் எதிர்பாராமல் சொந்த நாட்டில் கரை ஒதுங்கியது. ஏதோ அநாதைப் பிணம் என்று கருதி, அங்கு வாழ்ந்த மீனவர்கள் தங்களால் இயன்ற சடங்குகள் செய்து சொந்த மண்ணிலேயே புதைத்தார்கள். ஆம், இறந்த பிறகுகூட எண்ணம் நிறைவேறும், ஒருவரது எண்ணம் திண்ணமாக இருந்தால்!**

**இதைத்தான் "மனம் போல வாழ்வு" என்கிறார்கள்- பெரியோர்கள். பெண்களுக்காகச் சொல்லும்போது மட்டும் "வாழ்வு" என்பதை "மாங்கல்யம்" என்று மாற்றிக் கொண்டார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்**

முருகப் பெருமான் நமக்கு வாழ்வைத் தருபவன். அவனை மனம், மொழி மெய் கொண்டு வணங்குபவர்களுக்குத் தீராத நோய் எல்லாம் தீரும். பிறவிப் பிணியும் தீரும். நமக்கு ஆறுதலைத் தருபவன் ஆறுமுகப் பரமன். மலைதோறும் குடிகொண்ட மால் மருகன் மலைவு எல்லாம் போக்குவான். அடைந்தவரை "அஞ்சேல்" என்று அபயம் கொடுப்பான். அப்பெருமானை, செந்தில் முருகனை திருத்தணிகையில் பார்க்கிறார் வள்ளலார்.

"குழகனை அழியாக்குமரனை அட்டகுணத்தனைக் குறித்திடலரிதாம்" என்ற திருவருட்பாவில் பாடுகிறார்.

நமக்கு வேண்டியது இறவாத இன்ப அன்பு. அந்த அன்பு வாய்க்கப்பெற்றால் பிறவாமை தானே வரும். திருவடிப் பேறன்றி வேறு குறிக்கோள் இல்லாது வாழ்ந்தால் மரணமில்லாப் பெருவாழ்வு வராமல் போகாது. இறைவன் திருவடியில் மனம் வேலும் மயிலும் துணை என்றிருந்தால் காலனுக்குச் சவால் விட்டு மரணமில்லாப் பெருவாழ்வு பெறும் வழியை வள்ளலார் அழகாகச் சொல்கிறார்.

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்தன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நம் வம்மின் உலகியலீர்
மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.

இப்படி இராமலிங்க சுவாமிகள் பாடினால் "மரணப்பிரமாதம் நமக்கில்லையாம் என்றும் வாய்த்ததுணை கிரணக் கலாபியும் வேலும் உண்டே" என்கிறார் அருணகிரிநாதர். வேலும் மயிலும் நெஞ்சிலே நீங்காத இடம்பிடித்தால் மரணப்பிரமாதம் நமக்கு இல்லை. மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம்.

இறைவன் திருநாமங்களை மனங்கனிந்து சொல்லும்போது, மனத்துக்குள் மெள்ள மெள்ள இன்பம் சுரந்து, மனக்கவலை அகன்று, வாழ்வின் நோக்கம் கடவுள் பக்தியே என்பது புரிகிறது. தன் பெயரை இவ்வளவு பக்தியுடன் சொல்கிறானே என இறைவனும் அவனை நேசித்து அருள் புரிகிறான். இறைவன் திருநாமச் சிறப்புக்களை பக்தர்கள் பலரும் வியந்து பாராட்டியுள்ளனர். இராமலிங்கம் என்னும் இயற்பெயர் பெற்ற திரு அருட்பிரகாச வள்ளல் பெருமானும் "ராம" நாமச் சிறப்பைப் பாடுவது இயல்பே அல்லவா! உன் நாமம் என் நாவுக்கு என்ன ருசியோ? அவர் அருளிய அருட்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காராயவண்ண மணிவண்ண கண்ணா கனசங்கு சக்ரதரநீள்
சீராய தூய மலர்வாயநேய ஸ்ரீராமராம வெனவே
தாராய வாழ்வு தரு நெஞ்சு சூழ்க தாமோதராய நமஓம்
நாராயணாய நம வாமனாயநம கேசவாய நமவே"

கார் என்றால் மேகம். அதாவது கருக்கொண்ட மேகம். மழை பொழிய இருக்கும் கருணை மேகம். கார் மேகத்தைக் கண்டால் மயில்கள் கலாபம் விரித்தாடும். வாடிய பயிர்கள் வான்முகம் நோக்கி வருமோ, மழை தருமோ சுகம் எனத் துளிர்விடும். துடிப்போடு அசையும். உலக உயிர்கள் நிலைகுலைந்து வாடும்போது கருணைமயமாய் வந்து அருள் பொழியும் பெருமான் என்பதால் வள்ளலார் "காராயவண்ண மணிவண்ண" என்கிறார். அவன் உயிர்களுக்குக் கண்ணாக இருக்கிறான். மேன்மையுடைய சங்கு சக்கரம் தரித்தவனாக இருக்கிறான். நெடிய புகழ், தூய்மை, செந்தாமரை போன்ற சிவந்த இதழை உடையவன். ஆருயிர் அனைத்திற்கும் அன்பன் அவனுடைய திருப்பெயர்களில் மிகவும் சிறந்ததான "ராம, ராம" எனும் நாமத்தைச் சொல்லுங்கள் என்கிறார். இப்படி அவன் திருப்பெயரைச் சொல்லிக்கொண்டிருந்தால் உங்கள் வாழ்க்கை உயர்வானதாக அமையும் என்பதை "தாராய வாழ்வு தரும்" என்று அருளுகிறார். ஆகவே மனமே, தாமோதரா, நாராயணா, வாமனா, கேசவா என்று வணங்கி அவன் நாமங்களைச் சொல்லி அவன் நினைவாகவே வாழ்வாயாக என்பதை, "நெஞ்சு சூழ்க தாமோதராய நம, ஓம் நாராயணாய நம, வாமனாயநம, கேசவாய நமவே" என்று பாடி அருள்கிறார். சொந்த அனுபவம் சந்த வண்ணமுடன், இசைப் பின்னலுடன், கன்னலுமினிய தமிழில் கற்கண்டுச் சொற்கொண்டு, திருமாலின் திவ்வியக் காட்சியுடன் அருட்பாவில் கலந்து வருகிறது. இந்த அருட்பாவில் வரும் "ராம" மந்திரச் சிறப்பாய் ஸ்ரீராம நாமத் திருப்பதிகம்" என்று பெயர்.

காட்டு வேடன், ஆதிகவி வான்மீகி ஆகி மாறி இதிகாச உலகில் வளர்ந்து, மலர்ந்து, புகழ்வாசம் வீசும் வண்ணம் செய்தது ராமநாமம்.

கம்பம் கொல்லையைக் காத்து நின்ற சிறுவனை கவிச்சக்கரவர்த்தியாகக் காவிய வானில் சூரியனாக ஜொலிக்கச் செய்தது ராமநாமம்.

காம வாழ்வில் லயித்திருந்த "ராம்போலோ" என்ற பாச மனிதனைத் துளசிதாசராகத் துலங்கச் செய்தது "ராம சரித மானசம்" பாடவைத்தது ராம நாமம்.

மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி தேசப் பிதாவாக, தெய்வீக புருஷராக, சத்திய ஜோதியாக, மக்கள் போற்றும் மகாத்மாவாக ஓங்கி வளர உதவியது ராம நாமம்.

வள்ளலார் பெருமான் அருமையாகப் பாடிய "ராம நாம" மகிமையை நாமும் பாடி மந்திரப் பயனைப் பெறவேண்டும்.

வள்ளலார், ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்கிறார். கொல்லாமையைக் கடைப்பிடிக்கச் சொன்னார். எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதே அவர் கொள்கை. நல்லாசிரியர்களிடத்தே ஓதி உணர்ந்த கல்வி அறிவையும், நமக்கு இயல்பாக உள்ள அறிவையும் வேலாயுதப் பெருமானே தந்தார். அவன் தந்ததனால் அக்கல்வியையும், அறிவையும் அப்பெருமானுக்கே அர்ப்பணிக்க வேண்டும்" பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என சுந்தரமூர்த்தி நாயனார் புலவர்களுக்குப் புத்தி புகட்டியதைப்போல வள்ளலாரும் பாடுகிறார்.

நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
சீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு

கண்கண்ட பொருள்களிலே உங்கள் கல்வியையும், அறிவையும் செலவிடாமல் நான் காட்டிய வழியிலே நடவுங்கள். நடவுங்கள் என்பது அருணை முனிவரின் பரம உபதேசம். ஜமீன்தாரின் மனைவியின் மகோதரம் எனும் நோயை வள்ளலார் தீர்த்தார். அவர் எண்பது ஏக்கர் நிலம் கொடுத்தார். அந்த இடத்தில்தான் வடலூர் வள்ளலாரின் ஆச்சிரமம் உள்ளது. தைப்பூசம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்னப்பசியை இன்றுவரை தீர்க்கிறது. அருள்விளக்கே, அருட்சுடரே, அருட்சோதி சிவமே, அருளமுதமே, அருள்நிறைவே, அருள்வடிவப் பொருளே, இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்டபதியே என்னறிவே, எனக்கினிய உறவே என்று அருட்பிரகாச வள்ளலார் ஒளியைச் சிவமாக வணங்குகிறார். அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி! எனும் தாரக மந்திரத்தை பக்தர்களுக்கருளியுள்ள அடிகளார் தெய்வ நன்மணிமாலையில் இளமை, செல்வம், யாக்கை மூன்றும் எந்தெந்த வழிகளிலெல்லாம் மனிதனை மயக்கி மாயவலையில் சிக்க வைக்கின்றன என்பதை சிறப்பாகப் பாடியுள்ளார். கந்த கோட்டத்தில் கொலுவிருக்கும் ஆறுமுகப்பெருமானே! உன் அருட்செல்வத்தையே விரும்பி வேண்டுகின்றேன். அந்த அருட் செல்வத்தை அருளி என்னை ஆட்கொள்வாயாக. என்றும் நிலைத்திருக்கும் அழியாப் புகழையும் அமரத்துவத்தையும் அளிக்கவல்ல அருட்செல்வத்தை அளிக்கவல்ல அருளாளன் ஆறுமுகப் பெருமானின் பொன்னடிகளைப் போற்றிப் பணிவோம். எல்லா வளமும் தரும் அந்தக் கந்த சுவாமியை எங்கள் சொந்த சுவாமியாகக் கருதி வழிபடுவோமாக. பள்ளிக்கூடம் சென்று கல்லாத சிறுவன் இராமலிங்கத்தை ஆட்கொண்ட வள்ளல் குமரவேள், அவரை உலகம் போற்றும் மகானாக அருட்பிரகாச வள்ளலாராக ஆக்கியதும் அவன் திருவிளையாடலன்றோ!

எத்திக்கும் என் உளம் தித்திக்கும் இன்பமே
என் உயிர்க்கு உயிராகும் ஓர்
ஏகமே! ஆனந்தபோகமே! யோகமே!
என்பெருஞ் செல்வமே! நல்
முத்திக்கு முதலான முதல்வனே! மெய்ஞ்ஞான
மூர்த்தியே! முடிவிலாத
முருகனே! நெடிய மால் மருகனே! சிவபிரான்
முத்தாடும் அருமை மகனே!
பத்திக்கு வந்தருள் பரிந்தருளு நின் அடிப்
பற்றருளி என்னை இந்தப்
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவனாய்ப்
பண்ணாமல் ஆண்டு அருளுவாய்
சக்திக்கு நீச் சென்னைக் கந்த கோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே!
தண் முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

(தொடரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடும் விநாயக தத்துவமும்



திரு த. சுகந்தன் அவர்கள்

விநாயகர் என்பது தனக்குமேல் தலைவன் இல்லாத மேலான தலைவனையே குறிக்கின்றது. இவ்விநாயகர் வழிபாடானது இன்று, நேற்று ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்திலையே இதன் செல்வாக்கை அறிந்து கொள்ளலாம். வேதங்கள், இதிகாசங்கள் புராணங்களில் எல்லாம் இவ்வழிபாடு பற்றிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. எக்கருமத்தை ஆரம்பிக்கும் பொழுதும் விநாயகரை முதன்மைப்படுத்தி வழிபடுவது அவசியமாகும். இதனால் எமக்கு காரியசித்தி, விக்கினங்கள் நீக்கம், நீண்ட ஆயுள், மெய்ஞ்ஞானம், சிந்தைத் தெளிவு, திடகாத்திரம், புத்திக்கூர்மை, வீரம், வெற்றி போன்ற பல நன்மைகள் கிடைக்கின்றன. விநாயகரை வழிபடாது சிவபெருமான் முப்புரங்களை எரிக்கச் சென்றபோது தேர்ச்சில்லின் அச்சு உடைந்ததையும், பின் அவரை வழிபட்டு காரியனுகூலம் பெற்றதையும் புராணங்கள் சித்தரிக்கின்றன. இதன்மூலம் இவ்வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

விநாயக வடிவத்துக்கு மேலும் விளக்கங்கள் உள்ளன. அதாவது எம்மிடம் ஐவகை மதயானைகள் ஆகிய ஐம்புலன்கள் உள்ளன. அவற்றை விநாயகர் அடக்கித் தன்னுடைய பாசக்கயிற்றினால் கட்டிவிடுவார் என்றும் கூறப்படுகிறது. இவருடைய வாகனமான பெருச்சாளி துருவித்துருவி ஆராயும் தன்மையுடையது. இது போலவே நாமும் எந்த ஒரு விடயத்தினையும் துருவித்துருவி ஆராய்ந்தே எந்த முடிவையும் எடுக்கவேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

விநாயக வழிபாடு பற்றிச் சிறப்பிக்கும் நூல்களாக இருக்குவேதம், தைத்திரிய ஆரணியம், கணேசபுராணம், காயத்திரி மந்திரம், கணேச கீதை, கணேச தந்திரம், கணேச மகாத்மீகம், பார்க்கவ புராணம், ஏரம்ப உபநிடதம், முட்கல புராணம், லிங்க புராணம், சிவபுராணம் என்பன விளங்குகின்றன. விநாயகன், விக்கினேஸ்வரன், கணபதி, கஜமுகன், ஞானமுதல்வன், ஐங்கரன், தும்பிக்கையான், லம்போதரன், ஆனைமுகன் எனப்பல திருநாமங்களால் போற்றப்படும் பெருமானின் அருட் செயல்கள் பலவாறு புராணங்களில் விதந்துரைக்கப்பட்டுள்ள தன்மையை அறியலாம். அதாவது குறுமுனியாகிய அகத்தியரது கமண்டல நீரைக் காகவடிவில் வந்து கவிழ்த்து காவிரி நதியை உலகிற்கு வழங்கினார். அம்மை அப்பனே உலகம் என விளக்கினார். வியாசர் கூற விநாயகரே மகாபாரதத்தை எழுதினார். அகத்தியர் விநாயகரின் அருளால் கடலை வற்றச் செய்து கடலினுள் மறைந்த வாதபி அரக்கனைக் கொன்றார். அதன் பின் அவர் "வாதாபிகணபதி" என்ற பெயரோடு திருவுருவம் பிரதிஷ்டை செய்து வழிபட்டமை எல்லாம் விநாயகப் பெருமானது அருட்கடாட்சத்தையும் இவ்வழிபாட்டின் சிறப்பையும் காட்டி நிற்கிறது.

இவ்வழிபாட்டின் மூலம் மேன்நிலை அடைந்தவர்களில் ஔவையார், நம்பியாண்டார் நம்பி, மெய்கண்டதேவர், இராமன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார், அருணகிரிநாதர், அகத்தியர் போன் றோரைக் குறிப்பிடலாம்.

இம் முதன்மைக் கடவுளின் திருவுடம் பில் உலகிலுள்ள அனைத்தும் உள்ளன. இதனைத் திருமுருக கிருபானந்தவாரியார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். விநாயகருடைய திருமேனி இடையில் கீழே பூதவுடம்பு, இடைக்கு மேலே கழுத்துவரை தேவ உடம்பு, தலை மிருகத்தலை, ஒரு கொம்பு ஆண் தன்மை, கொம்பில்லாப் பகுதி பெண் தன்மை, யானைத் தலை அ∴றினை, தெய் வச் சரீரம் உயர்திணை இவ்வாறு எல்லாம் ஆய திருவுருவம் விநாயகரது வடிவம் ஆகும்.

வடமொழியில் உள்ள செய்யுள் ஒன் றில் அனைத்திற்கும் மூலப் பொருளாக விளங் கும் பரம்பொருளாகிய விநாயகரின் திருவுரு வத்திலே, நாபி- பிரமா, முகம்- திருமால், கண்- உருத்திரன், இடதுபாகம்- சக்தி, வலதுபாகம்- சூரியன் எனக் கூறப்படுகின்றது. இதிலிருந்து விநாயகரே தெய்வங்கள் அனை வரினதும் திருவுருவமாக விளங்குகின்றார் என்பது புலப்படும்.

மேலும் பெருமானின் திருவுருவங்கள் 16, 32 எனப் பல வகைப்படும். எனினும் பொதுவாகக் காணப்படும் திருவுருவத்தில் வலது பக்கத்திலுள்ள இரு திருக்கரங்களிலும் அங்குசமும் (அபயமாகவுள்ள திருக்கரத்தில்) ஒடித்த கொம்பும் இடது பக்கத்திலுள்ள திருக் கரங்களிலே பாசமும், மோதகமும் காணப் படும். இக்கரங்களுக்கிடையில் துதிக்கையும் விளங்குவதால் ஐங்கரனாக இயங்குகின்றார். அங்குசம் தீமைகளை அழிப்பதைக் குறிக் கும். மோதகம் இனிமையாக இருப்பதால் பேரின்பத்தைக் குறிக்கும். ஒரு சாரர் இது பிரபஞ்சத்தை குறிக்குமென்பர். வேறு சிலர் இது அமிர்தகலசம் எனக்கூறுவர். பாசம் தீய வற்றைத் தடுக்கும். அபயமாகவுள்ள திருக்கரத் திலுள்ள ஒடிந்த மருப்பு வியாசரின் வேண்டு கோளின்படி மகாபாரதத்தை எழுதுவதற்கு விநாயகர் பயன்படுத்தியமையை நினைவூட்டு மெனக் கூறப்படுகின்றது. இதுமட்டுமன்றி, கஜசுரனை வெல்வதற்கும் இது பயன்பட்ட தாகவும் கூறப்படுகின்றது. இறைவன் தம் முடைய அன்பருக்கு எதையும் செய்யத் தயங்கமாட்டார் என்பதையே இது காட்டும்.

இவரது வழிபாட்டில் தலையில் குட்டிக் கொள்ளுதல் மும்மல நீக்கத்தின் பொருட்டே என சிவநூல் கூறுகின்றது. மற்றும் வணங்கும்போது தாழ்ந்தெழுதல் நான் எனது அகங்கார, மமகாரங்கள் நீங்கித் திருவருள் வசப்பட்டு நிற்றல் என்பதாகும். விநாயகப் பெருமானை வழிபட்டு அரிய சக்திகளைப் பெற்றவர்கள் பற்றி வரலாறு கூறுகின்றது.

மேற்கூறப்பட்ட சிறப்புக்குரிய வழி பாட்டு கடவுளான விநாயகரை பூவுலகில் அவதரித்த நாம் அனைவரும் முறைப்படி நாள் தோறும் வழிபட்டு துன்பம், பிணி, வறுமை, அறியாமை போன்ற அவலங்களில் இருந்து விடுபட்டு உயர் சிறப்பான மேன்நிலையை அடைவோமாக.

# தேங்காய் உடைக்கும்போது.....

**தேங்காய் உடைக்கும்போது சில விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். தேங்காயைச் சம அளவில் உடைக்கப் பயிற்சி செய்ய வேண்டும். தேங்காயின் அடிப்பாகம் பெரியதாகவும் மேல்பாகம் சிறியதாகவும் உடைந்தால் கணவன்- மனைவி இடையே பிரச்சினைகள் வரலாம். பொடிப்பொடியாக உடைந்தால் நினைத்த காரியம் கைகூடாது. குறிப்பாக தேங்காயின் கண்ணின் பக்கம் உடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதனால் குடும்பத்திற்கு ஏற்படும் கெடுதல்கள் குறையும். தேங்காயை உடைக்கும்போது சற்று கவனமாக உடைத்தால் போதும். தண்ணீரில் நனைத்து, பிறகு உடைத்தால் சரிபாதியாகத் தேங்காய் உடையும் என்கிறார்கள்.**

-அருள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# கந்தனே கலியுகத் தெய்வம்



திரு கே. வி. குணசேகரம் அவர்கள்

முருகனது அன்புக்குப் பாத்திரமானவள் வள்ளி. வள்ளி வேடுவ இனத்தைச் சேர்ந்தவள். அவள் வாழ்ந்த இடம் குறிஞ்சி நிலம். பொதுவாக தமிழ்நாட்டில் வாழ்வோர் திருமணமானால் தமது மனைவியைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுவார்கள். இது பண்டைக்காலம் தொடக்கம் நடைமுறையில் இருந்து வரும் வழக்கம். அது இன்றுகூட மாறவில்லை. ஆனால் முருகன் வள்ளியைத் திருமணம் செய்தபின் குறிஞ்சி நிலத்திலே உள்ள மலையில் குடிகொண்டு விட்டான். இதற்குக் காரணம் முருகனுக்கு வள்ளிமேல் இருந்த அளவற்ற காதலே. அதனால் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் முருகனைக் காதல் தெய்வமாகக் கருதியும் வழிபட்டனர். காடுகளில் மிருகங்களின் தாக்குதல்களில் இருந்து காக்கச் சொல்லியும் அவர்கள் முருகனிடம் முறையிட்டனர். இதைப் பின்பற்றி ஏனைய நிலங்களில் வாழ்ந்த மக்களும் முருகனைக் காதல் தெய்வமாகவும், காத்தல் தெய்வமாகவும் வழிபடத் தொடங்கினர். பிற்காலத்தில் முருகன் தீராத நோய்களையும் தீர்க்கும் தெய்வம் என நம்பினர். அதனால் தற்பொழுதுள்ள மக்கள் கந்தர் சஷ்டிக் கவசத்தைப் பாடுவதோடு கந்தசஷ்டி விரதத்தையும் அனுட்டிக்கின்றனர்.

முருக பக்தரான பாலன் தேவராஜன் இயற்றிய கந்தசஷ்டிக் கவசத்தையே இன்றுள்ள மக்களிற் பெரும்பான்மையானோர் கந்தசஷ்டி வேளையில் ஓதுகின்றனர். அத்துடன் துன்பம் வந்தபோதும் அதையே ஓதுகின்றனர். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகியவற்றைவிடக் கந்த சஷ்டிக் கவசத்தை ஓதிப் பயன்பெறுவோரே அதிகம். அதற்குக் காரணம் முருகனது கையிலிருக்கும் வேலானது பல்வேறு வடிவங்களை எடுத்து மனித உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் காக்கிறதாக மக்கள் நம்புகின்றனர். தீராத நோய்களெல்லாவற்றையும் முருகன் தீர்த்து வைப்பான் என்றும் மக்கள் நம்புகின்றனர். இதைத் தவிர பாலன் தேவராஜன் முருக பக்தர்களைக் கண்டாலே பேய் பிசாசுகள் எல்லாம் வெருண்டு ஓடவேண்டும் என்று முருகனுக்குக் கட்டளையிடுகின்றார். மாறாத நோய்களும், தீராத துன்பங்களும் முருகனை நினைத்தவுடன் மாறிவிடும், தீர்ந்துவிடும் என்று உறுதிபடக் கூறுகிறார்.

முருகனது வேல் மனிதனின் அனைத்து நோய்களையும் நீக்கி நல்வாழ்வைக் கொடுக்கும் என்பதை முருக பக்தர்கள் பலர் நிரூபித்துள்ளனர். அதனால் கந்தனைக் கலியுகத் தெய்வமாகக் கருதி உலகில் உள்ள அனைவரும் வணங்குகின்றனர்.

அமெரிக்கப் பாதிரியாரின் மகனான பிரட்டபிள்யூ குளோறி என்னும் அமரிக்க இளைஞன் தமிழ்ப்புராணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். அப்படிச் செய்யும்போது முருகனைப் பற்றிப் புராணங்களில் கூறப்பட்ட கருத்துக்கள் அவரை மிகவும் கவர்ந்தன. அதனால் அவர் முருகனைப் பற்றிய பல தகவல்களைச் சேகரித்தார். முருக ஆலயங்கள் அனைத்திற்கும் சென்றார். அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு - கனவு முழுவதும் முருகனே நிலைத்திருந்தான். பின் அவர் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் முருகனைப் பற்றிய ஆராய்ச்சி நூலொன்றை வெளியிட்டார். அதில் முருகனது முழு வரலாறும் இருந்தது. சைவ சமய பழக்கவழக்கங்களுக்கு அவர் புதுவிளக்கங்களைக் கொடுத்தார். ஆத்மாவைப் பற்றி ஆராய்ந்தார். சங்க இலக்கியங்களையும் கந்தபுராணத்தையும் திருக்குறளையும் ஆராய்ந்தார். அறுபடை வீடுகளுக்கும் சென்று அங்கு நடைபெறும் விழாக்களைக் கண்டார். அவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்ந்தார். தேங்காய் மனிதனை உருவகப் படுத்தும் சின்னம். அதற்குள்ள மூன்று கண்களில் இரண்டு பொய். ஒன்றுதான் உண்மை. தேங்காயைப் போன்று மனிதர்களுக்கும் மூன்று கண்கள் உள்ளன. அவற்றில் இரண்டு ஊனக் கண்கள். அவை பொய்யானவை. ஆன்மா என்ற ஞானக் கண்ணே உண்மையானது. மனிதனின் திடமற்ற உள்ளத்தைப் போன்று தேங்காயின் சிரட்டை உள்ளது. இனிமையான பருப்பைப் பெறத் தேங்காயை உடைப்பதைப்போல மனிதன் தனது உண்மைத் தன்மையைக் காட்ட தன்னை உடைத்தல் வேண்டும். மனிதன் தனது பொய்மையை உடைத்தால் தெளிந்த ஆத்மாவைக் காண முடியும். பரம்பொருளோடு இணைய முடியும் என்றார்.

முருகனைப் பற்றி ஆய்வு செய்த முதலாவது வெளிநாட்டவர் இவரென்று கூறப் படுகிறார். இவரது ஆராய்ச்சியின்படி முருகன் வலிமைமிக்க உண்மையான தெய்வம். அவனை வழிபட்டால் வழிபடுவோர் வேண்டிய வரங்களைப் பெறலாம் என்று கூறினார்.

(தொடரும்...

# துணையாய் வருவாய் சந்நிதி முருகா!



திருக்குமரா! திருமஞ்ஞை வாகனத்தில் காட்சி
தரும்அழகா! மால்மருகா! கொடியவராம் சூரர்
செருக்கொழித்துத் தேவர்களைக் காத்துநின்ற வீரா!
செவ்வேளே! தலம்செல்வச் சந்நிதியை நாடி
அருங்கோவில் கொண்டமர்ந்து உளமுருகி நாடும்
அடியவர்க்கு அருள்மழையை வரையின்றி வாரித்
தரும் இறைவா! உந்தனது திருவடியின் மீதே
சிந்தைதனை வைத்துநிதம் தொழுகின்றேன் வேலா!
சுந்தரிகள் வள்ளிதேவ யானையவர் சூழச்
சுந்தரமாய்க் காட்சிதரும் சண்முகனே வாவா!
கந்தனுனைக் கணப்பொழுதும் மறக்காத பேற்றை
கருணைமிக நீயெனக்குத் தந்திடுவாய் தேவா!
வந்தனைநான் செய்கின்றேன் வாழ்த்துநிதம் சொல்லி
வள்ளலுனை அன்றிவேறு எவரெனக்கு உள்ளார்?
சந்ததமும் நீதுணையாய் இருந்திடுவாய் நாதா!
சங்கரனின் திருமகனே உன்னடியே சரணம்!

ப. மகேந்திரதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு இ. சிவராசா அவர்கள்

அரிதினும் அரிதான மானிடப் பிறவியிலும் மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமென்பது முதுமொழி. ஆதிகாலம் தொட்டு துர்க்கை, லஷ்மி, சரஸ்வதி எனப் பல பெண் தெய்வ வடிவங்கள் வணங்கப்பட்டு வருகின்றன. வேதங்களும் பெண்களை மதிக்கும் சமுதாயத்தில் தெய்வீகம் நிறைந்திருக்குமெனப் பகர்கின்றன. எல்லா இடங்களிலும் தன்னால் இருக்க முடியாததால் இறைவன் தாயைப் படைத்தான் என்பது யூதப் பழமொழி. அனைத்து சக்திகளையும் தன்னகத்தே கொண்டிருப்பதால் அவள் ஆதிபராசக்தி. செல்வச் செழிப்பு நற்பெயர், கௌரவம் என்பன குடும்பத்தில் நிலவ உழைப்பவளாதலால் கிருக லஷ்மி ஆகிறாள். திருமண பந்தத்தில் இணையும்போது செய்துகொண்ட சத்தியத்திற்கமைய கணவனுடன் சேர்ந்து தர்மத்தைக் காப்பவளாதலால் தர்மபத்தினி எனவும் அழைக்கப்படுகின்றாள். இல்லத்தைச் செவ்வனே பேணுபவளாதலால் இல்லத்தரசியாகின்றாள். தர்மத்தின் உறைவிடமாக விளங்கும் இல்லமானது சமுதாயத்தையும் உலகத்தையும் பிரகாசமடையச் செய்கிறது. உலகத்துக்கே மூலாதாரம் தாய்தான். இதனாலேயே தாய்நாடு, தாய்மொழி எனும் சொற்கள் வழங்கப்படுகின்றன. தாயானவள் தன்னுள் மாத்திரமல்லாது குடும்பத்திலும் தூய்மை நிலவ அயராது உழைப்பவள். தாயும் தாய்நாடும் சொர்க்கலோகத்தைவிட மேலானதென இராமர் தெரிவிக்கின்றார். கீர்த்தி, செல்வம், வாக்குவன்மை, ஞாபகசக்தி, விவேகம், நேர்மை, மன்னிக்கும் தன்மை ஆகிய நற்பண்புகள் ஒருங்கேயமையப் பெற்றவள் பெண். அவர்களது இதயம் என்றும் அன்பிலும் கருணையிலும் திளைத்திருக்கும். எமது கலாச்சாரத்தில் வணங்கப்பட வேண்டியவர்களாகக் கருதப்படும் தாய், தகப்பன், குரு, விருந்தினர் என்ற நிரையில் தாயின் ஸ்தானத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டிருக்கிறது. தெய்வங்களை அழைப்பதிலும் லஷ்மி நாராயணன், பார்வதி சிவன், வள்ளி மணவாளன், சீதா ராமன், ராதா கிருஷ்ணன் என்றே அழைக்கின்றனர்.

ஒரு தாயின் பேச்சில் என்றும் பொறுமை, இனிமை நிறைந்திருக்கும். ஆனால் குழந்தைகளிடமுள்ள ஒவ்வாத குணங்களை முளையிலேயே கிள்ளி சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமையை அவர்களது உள்ளத்தில் வளர்க்கும் நோக்கில் சில சந்தர்ப்பங்களில் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வாள். நோய்வாய்ப்பட்ட குழந்தை நலம் பெற வேண்டி பல பத்தியங்களைக் கடைப்பிடித்தும் ஊன் உறக்கத்தைத் துறந்தும், இன்னும் தியாகங்களைச் செய்தும் கண்களை விளக்காகவும், கைகளைத் தொட்டிலாகவும், இரத்தத்தைப் பாலாகவும் அர்ப்பணித்துக் கொண்டிருப்பவள். விலங்குகள் கூட தமது குட்டிகள் குறிப்பிட்ட பருவத்தை அடையும் வரை தமது உணவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மலைப்பாம்பு கருவுற்ற நாட்தொடக்கம் எதுவித ஆகாரமுமின்றி இருந்து பாம்புக் குட்டிகளை ஈன்ற பின்புதான் இரை தேடப் புறப்படும். இருந்தும், மனித குலத்தில்தான் இந்த தாய் சேய் உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிறவியில் முழுமையாக நீடிக்கின்றது. மற்றும் ஜீவராசிகளில் சொற்ப காலத்தின் பின்பு மறைந்து விடுகிறது. மொத் தத்தில் துணிவு, மனவலிமை, இரக்கம், அன்பு, தூய்மை, பக்தி என்பன ஒருங்கேயமையப் பெற்று சமுதாயத்தினதும் நாட்டினதும் தூண்போல் விளங்குபவள் தாய்.

துரதிஷ்டவசமாக இயற்கையிலேயே இவர்களிடம் காணப்படும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நற்குணங்களை எமது சமுதாயம் தவறாக மதிப்பிட்டு வைத்திருக் கிறது. ஆனால் "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்பதுபோல் பெண்கள் அதீத ஆளுமைப்பலம் கொண்டவர்கள் என்பதை வரலாறுகளும் அண்மைக்கால நிகழ்வுகளும் சான்று பகர்கின்றன. அன்னை மேரி திரேசா தனது முயற்சியில் இறுதிவரை பொறுமை என்னும் அணிகலனுடன் செல்வந்தர்களை மனமாற்றம் செய்து பலநூறு அநாதைச் சிறு வர் இல்லங்கள் அமைக்கக் காரணமாய் இருந் தவர். விக்டோரியா ராணி (பிரித்தானியா) பல நாடுகளை வெற்றிகொண்டு நல்லாட்சி யையும் சுபீட்சத்தையும் நிலைநிறுத்தியவர். கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் அனுபவித்த கஷ்டங்களை நீக்கி வங்களாதேசத்தை உருவாக்கினார் இந்திராகாந்தி அம்மையார். வளைகுடாப் போரில் இரும்பு மனிதன் எனப் பெயர் பெற்றார் திருமதி கோல்டா மேஜர். கணவரின் உயிரை எடுத்த யமனைத் தடுத்து நிறுத்திய சாவித்திரி தனது வாதத்திறமை யால் கணவனை மீளப் பெற்றாள். சத்தியம் தவறாத விரதத்தை மேற்கொண்ட கணவனுக் காக நாடிழந்து, ஏக புத்திரனையும் இழந்த சந்திரமதி இன்னோரன்ன கஷ்டங்களின் பின் ஈற்றில் ஆசீர்வதிக்கப்பட்டாள். கணவனின் நற்பெயருக்கேற்பட்ட களங்கத்தை நீக்க மதுரை மாநகரையே எரித்தவள் கண்ணகி. இன்னும் பெண்கள் தலைமை தாங்கும் திணைக் களங்கள் வர்த்தக ஸ்தாபனங்கள் ஒப்பீட் டளவில் முதன்மை வகிப்பதைக் காணலாம்.

இந்தச் சாதனையாளர்களின் பலம் அவர்களின் செல்வச் செழிப்பில் தங்கியிருக்க வில்லை. மாறாக இவர்களது மனவலிமையும், உறுதிப்பாடும், விடாமுயற்சியுமே இன்றும் பெண்ணினத்துக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றன. துரதிஷ்டவசமாக இன்று பெண்கள் சேவை மனப்பாங்குடன் கூடிய ஒன்றியங்களில் பங்குபற்றுவதை அனேகமான ஆண்கள் விரும்புவதில்லை. சோஷலிசக் குடி யரசான ரஷ்யாவில்கூட மார்கழி 8ஆம் திகதி பெண்கள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அன்றைய தினம் வீட்டுப் பணிகள் அனைத் தையும் ஆண்களே கவனித்துக்கொள்ள, பெண்கள் வைத்தியசாலைகளிலும், மற்றும் ஸ்தாபனங்களிலும் சமுதாயசேவையிலீடுபடு கின்றனர். தனது இறுதிமூச்சுவரை குழந்தை யினதும் கணவனினதும் நலனுக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் துணிந்தவள் தாய். ஒரு சில சந்தர்ப்பங்களில் குழந்தையை நற்பெயருடன் வளர்த்தெடுக்க வேண்டுமென் பதற்காக மறுமணம் செய்து "மாற்றாந்தாய்" எனப் பெயர் பெறுகின்றாள். "மாற்றாந் தந்தை" என்று ஓர் சொல் இல்லையே! கணவனின் அல்லது குழந்தையின் உயிரை மீட்பதற்கு எத்தனையோ பெண்கள் பல தியாகங்களைச் செய்ததாக சரித்திரங்களிலும் தற்கால நிகழ் வுகளிலும் காண்கிறோம். ஆனால் ஒரு மனை வியின் உயிரைக் காப்பாற்ற கணவனானவன் அத்துனை தியாகம் செய்திருப்பதாக அறிந் திருக்கின்றோமா? அண்மையில் பிச்சையெடுக் கும் சக்தியற்ற நிலையில் ஒரு தாய் தனது குழந்தைக்கு நஞ்சூட்டி தானும் மாண்டதாக பத்திரிகைச் செய்தி கூறியது. சரித்திரத்தில் வரும் "ஏழுபிள்ளை நல்ல தங்காளை" நினைவு படுத்தும் இதுபோன்ற சம்பவங்கள் நாகரீக மென்ற போர்வையில் வளர்ச்சியடைந்த இன் றைய சமுதாயத்திலும் இடம்பெறத்தான் செய்கின்றன.

எம் முன்னோர் சத்தியத்தைக் கடைப் பிடிப்பதைவிட மேலான விரதம் எதுவுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கொள்கையிலும் பிள்ளைகளைத் தமக் கும் சமுதாயத்துக்கும் நற்பெயர் வாங்க வேண்டுமென்ற நோக்கிலும் வளர்த்தார்கள். அதனால் அமைதியும் செல்வச் செழிப்பும் நிலவியது. இன்றைய மனிதன் தன் நம்பிக்கை இழந்து சுயநலமும் பேராசையும் வளர்ந்து தன்னுள் உறையும் தெய்வீகத்தை உணராது வெளிப்புற ஆசைகளை மேன்மேலும் பெருக் கிக்கொண்டேயிருப்பது தான் தற்கால அவ லங்கட்கெல்லாம் காரணம். இதயம் சுத்தமில் லாதபோது எண்ணம், சொல், செயல், விவே கம் என்பனவும் தூய்மையாக அமையாது. நல்ல எண்ணங்களை கருவிலேயே வளர்த்த தாயின் வயிற்றில் தீயவர் பிறப்பதில்லை. தொண்டரடிப் பொடியாழ்வார் "இறைவனே உன்னை நான் மலர்களால் அர்ச்சிக்க வில்லை. தூய உள்ளத்தினால் வணங்குகின் றேன்" என்றார். மயில் முட்டையை கோழி அடைகாத்துப் பொரித்தாலும் மயில்குஞ்சுதான் வெளிவரும். சாணத்தினுள் வீழ்ந்து கிடந் தாலும் வைரத்தின் பிரகாசம் மங்குவதில்லை. எந்நேரமும் இறை சிந்தனையும், உயர்ந்த எண்ணங்களும் இருந்ததால்த்தான் ஆரியாம்பா ஜகத்குரு சங்கராச்சாரியாருக்குத் தாயாகினார். ஏழ்மையில் தெருவிளக்கில் படித்துவந்த ஆபிரகாம் லிங்கனை "மற்றவர்கள் கேலி செய்தாலும் உனது சுயமரியாதையை ஒரு போதும் இழந்துவிடாதே" என்று தாயார் போதித்து வந்தார். அதனால்த்தான் அவரது 14 வயதில் ஆலயக் குருவானவர், "ஏன் சொர்க் கத்துக்குப் போகவிரும்பவில்லை என்று வினவ, நான் ஜனாதிபதியாகி வெள்ளை மாளிகையுள் புகுந்து கறுப்பு இனத்தவரின் அடிமைத் தளையை நீக்கவேண்டும்" என்றார். அவ்வாறே ஜனாதிபதியாகியதும் அடிமைத் தளையை நீக்கும் சட்டத்தில்த்தான் தனது முதலாவது கையொப்பத்தை இட்டார். பட்டினி யாயிருந்த தாயை உணவருந்த வைப்பதற் காக கோழி கூவுவதுபோல் ஒலியெழுப்பிய காந்தியின் செயலை எண்ணி கஸ்தூரிபாய் "இறைவனே இப்படி பொய் பேசும் பிள்ளை யைப் பெற்றமைக்கு நான் என்ன தவறு செய்தேன்" என்று புலம்பியதைக் கேட்ட காந்தி அன்றைய தினமே சத்தியம் தவறு வதில்லையென உறுதி பூண்டார். இந்து சாம்ராஜ்யத்தை நிறுவிய மாவீரன் சிவாஜியை உருவாக்கியது சிறுவயது முதல் தாயார் ஜீ ஜா பாய் உபதேசித்த நல்லுரைகள் தாம். சைதன்ய மஹாபிரபுவின் தாயார் சசிதேவி, "ஆண்டவனின் அருளைப்பெற்றுக் கொண்டால் மற்றைய செல்வங்கள் யாவும் தாமாகவே வந்து சேருமென்று" போதித்தார். அதனால் "ஆண்டவனே உன்னிடம் பக்தி செலுத்தும் வலிமையைக் கொடு" என்று மட்டும் வேண்டினார்.

நம் முன்னோர்கள் சிறுவயதுமுதல் புராணக் கதைகளையும் மற்றும் முனிவர்கள், சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் குழந்தைகட்குப் போதித்தனர். "இல்லவள் மாண்பானால் இல்லதென், உள்ளதென் இல்லவள் மாணாக்கடை"- வள்ளுவர். வீட்டில் ஆனந்தமும் அமைதியும் நிலவுவதற்குக் கணவன் மனைவி இருவரும் இடைவிடாது முயற்சி எடுக்கவேண்டும். நல்வழியிலிருந்து குழந்தை சிறிதளவேனும் தவறுமிடத்து அதைத் தண்டிக்கவும், நல்லனவற்றைச் செய் யும்போது போற்றவும் தாயானவள் தவறக் கூடாது. மனைவி புலனடக்கம் உள்ள வளாகவும் தீர்க்கதரிசிபோல் கணவனுக்கு ஆலோசனை கூறுபவளாகவும் இருக்க வேண் டும். தனது புலனடக்கத்தில் தவறி மந்தரை யின் சூழ்ச்சிக்குள் வீழ்ந்ததாலேயே தாயின் ஸ்தானத்தில் வைத்து அன்பு செலுத்திய இராமனை கைகேயி காட்டுக்கு அனுப்ப நேரிட்டது. சத்தியம், நேர்மை என்பன ஒவ் வொரு குடும்பத்திலும் நிலவினால் சமு தாயமும் நாடும் வளம்பெற்றுவிடும். இவ்வா றான மகிமை பொருந்திய அன்னையரைக் கனம் பண்ணி அவர்களின் கதைகட்கு அமைதியாகச் செவிமடுத்துத் தேவைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்வது மாபெரும் சேவையாதலால் ஆண்டவன் உன்னிடத்தில் வாசம் செய்வார். பாண்டுரங்கனின் பக்தனான புண்டரீகன் வயதான தனது பெற்றோரை உறக்கமின்றிப் பராமரித்து வந்தான். பாண்டுரங்கனே அவனைத்தேடி வீடு வந்தபோது அவரைச் சிறிதளவும் பொருட்படுத்தாது பெற்றோரின் சேவையைத் தொடர்ந்தான். பரவசமடைந்த பாண்டுரங்கன் தன்னை வெளிப்படுத்தி என்ன வரம் வேண்டுமென்று வினவ, "தூரத்திலிருக்கும் நதிக்கு என் பெற்றோரை நீராட்டத் தூக்கிச் செல்லும்போது அவர்களது நலிந்துவிட்ட உடம்பு வலிக்கின்றது" அதனால் அந்த நதியை அண்மையில் வரச்செய்யும்படி வேண்டினான். அவ்வாறே வரமளித்து மறைந்தார் பாண்டுரங்கன். கல்கத்தாவைச் சேர்ந்த ஈஸ்வரச் சந்திர வித்யாசாகர் எனும் பையன் தனது தாயின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு தனது கல்வியில் கவனம் செலுத்தி ஒருசிறிய வருமானமுள்ள தொழிலைப் பெற்றுக்கொண்டதும், ஏழை மக்களுக்காக ஒரு கிணறு வெட்டித் தாயாரைச் சந்தோசப்படுத்தினார். பின் பதவியுயர்வுடன் வருமானம் பெருகப்பெருக பாடசாலை, வைத்தியசாலை என்பனவும் நிறுவித்தந்தார். பெற்றோர் சந்தோசமடையும்போது ஆண்டவனும் சந்தோஷமடைகின்றான். அவர்கள் கண்ணீர் சிந்தினால் அக்குடும்பமோ அதற்குக் காரணமான பிள்ளைகளோ நிம்மதியிழந்து பெருங்கஷ்டங்களை அனுபவிப்பது திண்ணம்.

தற்காலப் பெற்றோரிடையே சுயநலம், பேராசை, பொறாமை என்பன பெருகி அவர்களின் எண்ணங்களும் செயல்களும் தூய்மையாக அமைவதில்லை. முன்னுதாரணமாக நடப்பதற்குப் பதிலாக தவறான பாதையில் பிள்ளைகளை வழிநடாத்துகின்றனர். இயற்கையாகவே ஒரு குழந்தை கடவுள் நம்பிக்கை உடையதாக இருந்தாலும் அதைப் புறந்தள்ளி படிப்பில் கூடிய கவனம் செலுத்தும்படி வற்புறுத்துகின்றனர். பொறாமையுணர்ச்சியைப் புகட்டி பணவசதியைப் பெருக்கும் நோக்கில் படிப்பிப்பதில் இன்பம் காண்கின்றனர். தமது சுயநலம் கருதி பிள்ளைகளின் தவறுகளைக் கண்டிக்க மறுக்கின்றனர். திருதராஷ்டிரனது கண்டிப்பற்ற வளர்ப்பு முறையால்த்தான் பாரதப்போர் உருவாகியதும் அதனால் அவர்கள் நிர்க்கதியடைந்ததையும் படித்தும் பாடம் கற்றுக்கொள்ள யாரும் முன்வருவதில்லை. இன்றைய பாடத்திட்டங்களிலும் வாழ்க்கைக்கு ஆதாரமான மகாபாரதம், இராமாயணம், பாகவதம் போன்றவற்றில் காணப்படும் விழுமியங்கட்கு முக்கியத்துவம் அளிக்காது அதர்ம வழிமுறைகளை நாடத் துணைபுரியும் பலதும் கற்பிக்கப்படுகின்றன. இதன்விளைவுகளை கீழ்வருவனவற்றினூடாக இன்று எமது சமுதாயம் அனுபவிக்கின்றது.

1. ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்ட கூடுகளில் வீட்டுப்பிராணிபோல் பேணப்படும் பெற்றோர்.
2. பெருகிக்கொண்டே செல்லும் வயோதிப இல்லங்கள்.
3. அதிகரித்துக் காணப்படும் விவாகரத்துக்கள்.
4. கர்ப்பமடையும் வயது குறைந்த சிறுமிகள்.
5. முறைகேடான பாலியல் துஷ்பிரயோகங்கள்.
6. அநாதை ஆச்சிரமங்களில் அதிகரித்துக்கொண்டிருக்கும் சிறுவர்கள்.

மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்- ஔவையார். முதியோர் இல்லத்தில் உயிர் நீத்த அன்னையின் அஸ்தியை காசியில் கரைத்து சந்தோசமடைபவர் பலர். துறவியாக விரும்பும் ஒருவர் தாயாரின் அனுமதியின்றி அவ்வாறு செல்லமுடியாதென இந்துதர்மம் வலியுறுத்துகின்றது. துறவியானவர் அனைத்தையும் துறந்தவராகக் கருதப்பட்டாலும் தாய்ப்பாசத்தைத் துறந்து விடுவதில்லை. பட்டினத்தாரும் ஆதிசங்கரரும் துறவு மேற்கொண்டபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் மரணம் கேட்டு ஓடோடி வந்து ஈமக்கிரியைகள் செய்தனர். துறவியானவரை அவரின் தந்தை சந்திக்க நேரின் துறவியை வீழ்ந்து வணங்கவேண்டுமென்றும் ஆனால் துறவியானவர் தாயைக் காண நேருமிடத்து தாயின் கால்களில் வீழ்ந்து வணங்கவேண்டுமென தாயின் ஸ்தானத்தை உச்சத்தில் வைத்திருக்கின்றது இந்து தர்மம். எனக்கென்ன மனக்கவலை, என் தாய்க்கன்றோ தினம் தினம் என் கவலை என்ற எண்ணம் ஒவ்வொரு இளைஞனினதும் அடிமனதில் ஆத்ம கீதமாக ஒலித்துக்கொண்டிருக்க வேண்டுமென உறுதிபூணுவோமாக.

## பிள்ளையார் கோயிலில் தோப்புக்கரணம் இடுவது ஏன்?

தடங்கல்கள் ஒழிய கணபதி கோயிலில் வணங்கிவர பக்தர்களுக்கு மிகையான ஆர்வம் இருந்தாலும் தோப்புக்கரணம் செய்வதில் பலரும் பின்தங்கி நிற்பதைக் காணலாம். அப்படியே செய்தாலும் கையைப் பிணைத்து இரு காதுகளிலும் தொட்டு உடலை ஒருமுறை குலுக்கி விட்டுச் செல்வதைக் காணலாம்.

"வலம் கையால் வாமஸ்ரவனை மிடகைவிரலினால்
வலம் காதும் தொட்டகுழலிணை பிணைந்தநிலையில்
நிலம் கைமுட்டாலே பலகுறி தொடவேஅடியனுக்கின்
நலம் காருண்யாப்தே களக மமவிக்னம்கணபதே"

மேலே சொல்லியிருக்கும் வரிகளை உச்சரித்துக்கொண்டே பிள்ளையாரை வணங்கிக் கொண்டு தோப்புக்கரணம் இடவேண்டும். அதாவது வலது கையால் இடது காதும், இடது கையால் வலது காதும் தொட்டுக்கொண்டு, இரு கால்களும் பிணைத்து நின்று கொண்டு, கைமுட்டுக்கள் பலமுறை தரையில் தொட்டு கணபதியை வணங்க வேண்டும் என்பது விதி.

வேறெந்த தெய்வ சன்னதியிலும் தோப்புக்கரணம் இடுதல் என்ற விதிமுறையில்லை. ஆனால் கணபதி சந்நிதானத்தில் இது மிக முக்கியம்.

இடது காலின் மேல் ஊன்றி நின்று வலது கால் இடதுகாலின் முன்பக்கமாக இடது பக்கம் கொண்டு வந்து பெருவிரல் மட்டும் தரையில் தொட்டு நிற்கவும், இடது கை பெருவிரலும் ஆள்காட்டி விரலும் சேர்த்து வலது காதிலும் வலது கை இடது கையின் முன் பக்கமாக இடது பக்கம் கொண்டு வந்து முன்கூறிய இரு விரல்களால் இடது காதையும் பிடிக்க வேண்டும். பின்பு குனிந்து வணங்கி நிமிர்ந்து வருவதே தோப்புக்கரணத்தின் முறை.

பக்தரைப் பொறுத்து இது எத்தனை முறை செய்யவேண்டும் என்று முடிவு செய்யலாம். பொதுவாக மூன்று, ஐந்து, ஏழு, பன்னிரண்டு, பதினைந்து, இருபத்தொன்று, முப்பத்திஆறு என்று பல கணக்கில் செய்வதுண்டு.

இவ்வாறு செய்வதில் பக்தரிடமிருந்து தடங்கல்கள் விலகிச் செல்லும் என்றே நம்பிக்கை.

அறிவியல் சம்பந்தப்படுத்திப் பார்ப்போமானால் இதை புத்தியையுணர்த்தும் ஓர் உடற்பயிற்சியாக இதைக் காணலாம். இது இரத்த ஓட்டத்தை உணர்வடையச் செய்யும் மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் என்று கண்டு வருகின்றோம்.

-ஓலைச்சுவடி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் நாவில் நாய்

திரு முருகவே பரமநாதன் அவர்கள்

பட்டினத்தார்- பட்டினத்தடிகள் எனப் போற்றப்படும் சித்தர் பாடல்கள் இருவகைத்தாய் காணப்படுகின்றன. ஒன்று பதினோராந் திருமுறையில் அமைந்துள்ள ஐந்து பிரபந்தங்கள்.

கோயில் நான்மணிமாலை
திருக்கழுமல மும்மணிக்கோவை
திருவிடை மருதூர் மும்மணிக்கோவை
திருஏகம்பமுடையார் திருஅந்தாதி
திருவொற்றியூர் ஒருபா- ஒருப.்.து

1. கோயில் நான்மணிமாலை என்பது தில்லைத்தலம் பற்றிப் பாடப்பட்டது.
2. திருக்கழுமல மும்மணிக்கோவை சீகாழியைப் பற்றிப் பாடப்பட்டது.
3. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை என்பது திருவிடை மருதூரைப் பற்றிய பாடல்கள்.
4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி என்பது காஞ்சியில் கோயில் கொண்டுள்ள ஏகம்பநாதர்மீது பாடப்பட்டது.
5. திருவொற்றியூர் ஒருபா ஒருப.்.து என்பது திருவொற்றியூரைப் பற்றிப் பாடப்பட்டது.

இவ்வைந்தும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பதினோராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. இ.்.து பல பிரபந்தங்களின் தொகுப்பு எனலாம். இப்பிரபந்தங்களை முற்றோதலின்போது பாராயணஞ் செய்யும் பாக்கியம் கிடைக்கும். பட்டினத்தார் அருளிய செய்யுட்களை ஒருவரின் உதவியின்றி நாம் படிப்பது சிரமம்; நல்ல உரை விளக்கமும் தேவை.

இந்தச் செய்யுள் நடை பண்டைய மரபு வழி வந்தவையே. இப்பிரபந்தங்களையும் தாண்டிப் பட்டினத்தார் பாடல்களாக இன்னோர் தொகுப்பு நூலாக்கப்பட்டுள்ளது. இப்பாடல்கள், புனிதமான இயல்வாழ்வுக்கும் இனிதமான ஆத்மீக வாழ்வுக்கும் உறுதுணையானவை. இல்லறத்துக்கும், துறவறத்துக்கும் உறுதுணையானவை. நம்முன்னோர் இப்பாடல் நூலைக் கக்கத்திலே கொண்டுதிரிவர். மனிதாய விழுமியங்கள் பேசும் பதினெண் கீழ்க்கணக்கு ஏடுகள், அவ்வை, அதிவீரராம பாண்டியன் பாடல்கள், உலகநீதி, அறநெறிச் சாரம், நீதிநெறிவிளக்கம் போன்ற நீதிநூற் கொத்துக்கள்போல இப்பட்டினத்தார் எழுதிய பாடல்கள் மனிதனை வாழ வைப்பன. இவற்றினை வாசிக்காமல் நாடகம்- சினிமாவைப் பார்த்து நாம் குற்றவியற் பாதைக்கு இட்டுச் செல்லப்படுவதுடன் நேரத்தையும் வீணாக்குகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டாம் பகுதியில் பின்வரும் நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

1. கோயில் திருஅகவல்
2. கச்சித் திரு அகவல்
3. திருவேகம்பமாலை
4. தில்லைமுதலான பல தலங்களிற் பாடியவை
5. பொதுவானவை
6. அருட்புலம்பல்

கோயில் திரு அகவல் என்பது தில்லையை பற்றிப் பாடப்பட்டது.
கச்சித்திரு அகவல் காஞ்சிப் பெரும்பதிமேற் பாடப்பட்டவை.
ஏகம்பமாலை காஞ்சி ஏகம்பம் என்ற கோயிலைப் பற்றிப் பாடப்பட்டது.
பற்பல தலங்களிற் பாடியவை- நான்காம் பகுதி பொது
இதிற் பொதுவான கருத்துக்கள் உள்ளடக்கியுள்ளன.
அருட்புலம்பல் என்பது இறைவனிடம் முறையிடுவது.

இப்படியான பாடல்களை ஒன்றாக்கி பட்டினத்தார் பாடல். பத்திரகிரியார் புலம்பலென்றோர் புத்தகம் 1924இல் வெளியானது. இதற்கு திரு வி.க சிறந்த உரை வகுத்துள்ளார். இவ்விருத்தியுரையிற் பத்து இடங்களில் நாய் எடுத்தாளப்படுகின்றது. அதை வாசகர்க்கு அறிமுகம் செய்வதே இவ்வாக்கத்தின் நோக்கம் ஆகும்.

மணிமொழிப்பிரான் முப்பத்து மூன்று இடங்களிற்கு மேல் நாயைத் தன்னுடன் ஒப்பீடு செய்துள்ளார். நாயிற் கடையாம், நாயேனை, பொற்றவிசு நாய்க்கிடுமாறு போல, நாய்மேற் றவிசிட்டு, நாய் சிவிகை ஏற்றுவித்து என்பன நுண்பொருள் உடையன. மேலைத்தேயங்களிலே பல இன நாய்களை விருத்தி செய்துள்ளனர். வேட்டையாட மட்டுமன்றி பொலிஸ் துறையிலும், காலாட் துறையிலும் துப்பறிய நாய் நன்கு பயன்படுத்தப்படுகின்றது. அம்மட்டன்றி கள்வரை, கொலைஞரைக் கண்டு பிடிக்கவும் இந்நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றையும் தாண்டி கட்புலனற்றோர் பழக்கப்பட்ட நாயின் உதவியுடன் நடமாடுவர். பிரயாணஞ் செய்வர். திருவாசகம் செய்த திருவாதவூரர் இன்றிருந்தால் நாய்க்குலத்தைப் போற்றிப் புகழ்ந்திருப்பாரன்றோ!

தொடர்ந்து பட்டினத்தார் வாக்கில் வரும் நாய் வர்க்கம் பற்றிப் பார்ப்போம்.

வரிக்கோல வேல்விழி யாரநு ராகமயக்கிற் சென்று
சரிக்கோது வேனெழுத் தஞ்சுஞ் சொலேன் றமி யேனுடலம்
நரிக்கோ கழுகு பருந்தினுக் கோவெய்ய நாய்தனக்கோ
எரிக்கோ விரையெதுக் கோவிறை வாகச்சி யேகம்பனே

திருஏகம்பமாலை 11

**(பொ.ரை)** இறைவனே! திருக்காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதனே, செவ்வரி படர்ந்த அழகிய வேல் போன்ற கண்களையுடைய பெண்களினது காம மயக்கத்திற் சிக்கி அவர்களுடன் விளையாடும் பொருட்டு அவர்களைப் புகழ்ந்துரைப்பேன் ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் செபியேன். ஆனபடியால், எளியேன் உடம்பு நரியினுக்கோ, கழுகினுக்கோ, பருந்தினுக்கோ, கொடிய நாயினுக்கோ, நெருப்பினுக்கோ, மற்றெதனுக்கோ உணவாகும் அனுராகம்- காமம்

நாயாய்ப் பிறந்திடின் நல்வேட்டை ஆடிநலம் புரியும்
தாயார் வயிற்றில் நரராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறள்ஆம் குளமும்கல் ஆவும் என்ன
ஈயா மனிதரை ஏன்படைத் தாய்கச்சி ஏகம்பனே மேல் 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.ரை) திருக்காஞ்சியில் எழுந்தருளி உள்ள ஏகாம்பரநாதனே! (உயிர்) நாயுடல் தாங்கினாலும், நல்ல வேட்டையாடி (தன்னை வளர்த்தவனுக்கு ஏதாவது) பயனைக் கொடுக்கும்; தாயார் வயிற்றில் மக்களாய்த் தோன்றிப், பின்பு செல்வம் உள்ளவர்களாகி, காயாத மரமும், நீர் வற்றி வரண்டகுளமும், கற்பசுவும்போல (ஒருவருக்கும் ஒன்றும் கொடாத மனிதர்களை ஏன் படைத்தாய்?

வி.ரை) தாய் தமக்கையென்னும் பகுத்தறிவில்லா நாயாகிலும் ஒரு பயனைத் தரக்கூடியதாய் இருக்கிறது; தாய் தமக்கை என்னும் பகுத்தறியக்கூடிய மக்களாய்ப் பிறந்தும் என்ன பயன் என்பார். "தாயார் வயிற்றில் என்றார். காயாத மரம், நீரில்லாக் குளம், கல்லாற் செய்யப்பட்ட பசு இவைகளினால் என்ன பயன் உண்டு' அதுபோல ஈகை இல்லாச் செல்வர்களால் என்ன பயன் என்றவாறு ஈயாமனிதர் நாயிலுந் தாழ்ந்தவர்கள் என்க.

மந்திக் குருளை ஒத்தேனில்லை நாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ் சிந்தையை யான்என்செய்வேன் எனைத்தீதகற்றிப்
புந்திப் பரிவிற் குருளையை ஏந்திய பூசையைப் போல்
எந்தைக் குரியவன் காணத் தனே கயிலாயத்தனே.

கயிலை- 7

(பொ.ரை) சிவபெருமானே! திருக்கயிலாய பதியே. அடியேன் குரங்குக் குட்டியைப் போன்றேனல்லேன். சிறியேனது வழக்கத்தையுணர்ந்திருந்தும் பிரவர்த்தி மார்க்கத்துக்கு ஏதுவாகிய காரியங்களை எண்ணும் மனதை யான் என்ன செய்வேன்? அடியேனைத் தீமையினின்றும் விலக்கி உள்ளத்து எழும் அன்பால் குட்டியைத் தானே கவ்விக்கொண்டு செல்கின்ற பூனையைப்போல் ஆட்கொண்டு அருள் தந்தையாகிய தேவரீருக்கு உரிமை பூண்டிருக்கிறேன்.

தாய்க்குரங்கு தான் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு தன் குட்டியைத் தானே தூக்கிச் செல்லாது. குட்டியே தாய்க் குரங்கை உறுதியாகப் பற்றிக்கொள்ளும். இதனை மர்க்கட நியாயம் என்பர். மர்க்கடம் குரங்கு. இவ்வுபமானத்தால் நாமே இறைவனைப் பற்றிப்பிடிக்க வேண்டும் என்பது வெளிப்படை. மணிமொழியாகும் சிக்கெனப் பிடித்தேன் என்கிறார். பூனை தன் குட்டிகளைத் தானே கௌவிச் செல்வதை நேரடியாக நாம் காண்கிறோம் அல்லவா? இதை மார்ச்சால நியாயம் என்பர். மார்ச்சாலம்- பூனை. (தொடரும்...

## தொண்டைமானாறு கரைதரும் சுகமெங்கு?

**பூவரச நிழலிலே குடியிருக்கும் வேலா,**
**பூத்திருந்து வரமருளக் காத்திருப்பாய் பாலா,**

**மேவு கல்விச் செல்வம் தந்து பாடவைப்பாய் முருகா,**
**மெல்ல உந்தன் சந்நிதியில் மூழ்கிடுதே முருகா!**

**கூவுகுயில், தோகைமயில், வீசுகுளிர் தென்றல்,**
**குலவுமரச் சோலை, நதிபாயு முயர்கோவில்!**

**தாவுகின்ற நாகரீகம் ஓங்கி வளர்ந்தாலும்**
**தொண்டைமானாறு கரைதரும் சுகமெங்கு சொல்?**

**கே.எஸ். சிவஞானராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனென்பவன் தெய்வமாகலாம்

திரு கா. கணேசதாசன் அவர்கள்

உயிரினங்கள் அனைத்திலும் உன்னத நிலையில் இருக்கும் ஆறறிவு படைத்த மனிதனின் ஆறாவது அறிவே அவன் தேவ நிலைக்கு உயர்வதைச் சாத்தியமாக்கிறது. இதனாற்றான் "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார்கள்.

நாம் மனதில் எண்ணும் எண்ணங்களையும் செயல்களையும் கவனித்துக் கணக்கெழுதுகிறான் சித்திரகுப்தன். சித்திரகுப்தனிடம் ஒரு விசித்திரம் உண்டு. பிராணிகள், ஜந்துக்கள் குற்றம் புரிந்தால் அவன் கணக்கெழுத மாட்டான். மனிதர்கள், தேவர்கள் செய்யும் தவறுகளை விட்டுவிடவும்மாட்டான். கணக்கில் பதிவாகிவிடும். காரணம் என்ன?

பிராணிகள் ஜந்துக்களுக்கு பகுத்தறிவு கிடையாது. எனவே அவற்றின் பாவங்களும் கணக்கில் கிடையாது. ஆனால் மனிதர்களும் தேவர்களும் அப்படியல்லவே! அவர்கள் தெரிந்தேதான் தப்புச் செய்கிறார்கள். எனவே அவர்களின் குற்றங்கள் ஒன்றும் விடாமல் பதிவு செய்யப்படுகின்றன. தண்டனையும் உண்டு.

தேவர்கள் தவறு செய்துவிட்டு அதற்குத் தண்டனையாக மானுடனாகவோ வேறு ஜந்துக்களாகவோ பூவுலகில் பிறந்து கஸ்டப்பட்டதாகவும் தவம் செய்து மன்னிப்புப்பெற்று மீண்டும் தேவபதவி பெற்றதாகவும் படிக்கிறோம். தேவருலகில் துன்பம் என்பது இல்லை. எனவே தண்டனையாகத் துன்பம் அனுபவிக்கத் தேவர்களும் பூவுலகில் பிறக்க நேர்கிறது.

மனிதன் வசிக்கும் இந்தப்பூமி இன்பம், துன்பம் இரண்டையும் தரவல்லது. நாம் எதைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதைப் பொறுத்து நமது உயர்வும் தாழ்வும் இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் அமைகிறது. அறம் சார்ந்த இன்பம் மேலும் மேலும் உயர்ந்த இன்பங்களுக்கு இட்டுச்செல்லும். மறம் சார்ந்த இன்பம் நம்மைத் தாழ்த்தி துன்பத்தில் ஆழ்த்திவிடும். அறம் சார்ந்த இன்பத்தைப் பகுத்தறிய மனிதனுக்கு ஆறாவது அறிவு உதவுகிறது. நல்லதையே எண்ணி நல்லதையே செய்து அதனால் இன்பம் நுகர்ந்த தேவ பதவியை அடையலாம். அல்லது இழிசெயல்களால் தற்காலிக மறம் சார்ந்த இன்பம் அனுபவித்து, பாவங்களைச் சம்பாதித்துக்கொண்டு தன்னிலும் தாழ்ந்த உயிரினங்களாக மறு ஜென்மம் எடுக்கலாம்.

இதனாலன்றோ திருமறை தந்த வள்ளுவர்,

"நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம் நோய் செய்யார்
நோய் இன்மை வேண்டுபவர்"

அதாவது தமக்குத் துன்பம் வரக்கூடாது என்று விரும்புகிறவர்கள் பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருக்கவேண்டும். என்று கூறியுள்ளார்.

அசுரர்கள், ராட்சகர்கள் கதையே வேறு. அவர்கள் மனிதர்கள், தேவர்களினின்றும் வேறுபட்டவர்கள். "அசுரம்" என்பதற்கு உடலாலும் உறுப்புக்களாலும் இன்பம் அனுபவிப்பதில் ஆசை கொண்டவன் என்று அர்த்தம். "இராக்கதம்" என்றாலே ஒரு பெண்ணை வலிதிற் கொண்டுசென்று மணந்து கொள்ளுதல் என்று பொருள். இத்தகைய முரட்டுக்குணம் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் சற்றும் சிந்தியாமல் தவறுக்குமேல் தவறு செய்வார்கள். குற்றம் செய்வார்கள். அதுவே அவர்களின் இயல்பாகிறது. அவர்களுடைய அகம்பாவம் மேலோங்கி மென்மேலும் குற்றமிழைக்க, இனி பொறுக்க முடியாது என்ற நிலையில் இறைவன் அவர்களை சம்ஹரிக்கிறான்.

தேவர்களும் மனிதர்களும், "அடடா தவறு செய்து விட்டோமே!" என்று உணர்ந்து வருந்தி பிரார்த்தனை செய்வார்கள் நல்லவர்களாக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற திருவள்ளுவரின் திருவாக்கின் பிரகாரம் வாழ்ந்து தெய்வத்தோடு சேர்க்கப்படுவான். மனிதன் வள்ளலாகலாம், அறிஞராகலாம், தியாகி ஆகலாம், சித்தராகலாம், ஞானி ஆகலாம் நிறைவாக தெய்வமாகலாம் இவ்வுலகிலேயே.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

உயிர்களைக் கொலை செய்யாதவனையும், பிறன் கொன்று விற்கிற புலாலை உண்ணாதிருப்பவனையும் எல்லா உயிரினங்களும் வணங்கும்; இவ்வுலகிலேயே வணங்கத்தக்கவனாவான்" என்பது திருவள்ளுவர் வாக்கு. இவ்வுலகிலும் வானுலகிலும் தெய்வமாக போற்றப்படும் மகிமை மனிதருக்கு மட்டுமே உண்டு. இறைவன் எமக்குத் தந்த பகுத்தறிவுமூலம் நல்லதையே சிந்தித்தும் நற்புண்ணிய காரியங்களைச் செய்தும் தெய்வமாவதென நாம் உறுதி கொள்வோம்.

பகுத்தறிவுடன் கூடிய அரிதான மனிதப்பிறவியை நமக்களித்த இறைவனுக்கு நன்றி செலுத்திப் பிரார்த்திப்போம்.

# செல்வம் தரும் வலம்புரிச் சங்கு....

***பாற்கடலைத் தேவர்கள் கடைந்தபோது தெய்வ அம்சம் பொருந்திய பல பொருட்கள் வெளிவந்தன. அவ்வாறு வந்தவைகளில் வலம்புரிச் சங்கும் அடங்கும் என்பது புராணவரலாறு.***

***வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்துக் கொள்ளலாமா என்ற சந்தேகம் பலருக்கு உண்டு. மகாலஷ்மி, விஷ்ணுவின் அம்சமான இந்த சங்கில் குபேரன் நிரந்தரமாக வாசம் செய்வதால் நாம் அப்புனிதமான பொருளை வீட்டில் வைத்து பூஜை செய்வது பல நன்மைகளைத் தரும்.***

***வலம்புரிச் சங்கின் வகைகள்: கடலில் இருந்து கிடைக்கும் ஒருவகை நத்தையின் கூடுதான் சங்காக வருகிறது. இதில் வலம்புரி இடம்புரி என்ற இருவகை உண்டு. வெண்சங்கு, வரிச்சங்கு என்ற இரண்டு விதமான வண்ணங்களில் இது தோன்றக் கூடியது.***


***மிகப்பெரிதாக நீண்டு உள்ளவை ஆண் சங்கு ஆகும். உருண்டு திரண்டு குறுகிய முனை கொண்ட சங்கு பெண் சங்கு ஆகும். வெண்ணிற வலம்புரிச் சங்குதான் மிகவும் உயர்ந்ததும் சக்தி மிக்கதுமாகும்.***

***வலம்புரிச் சங்கில் செல்வத்தின் அதிபதி குபேரன் நவநிதிகளோடு வாசம் செய்வதாக ஐதீகம். நவநிதிகளான வங்கநிதி, பதுமநிதி, மகாபத்ம நிதி, மகரநிதி, கச்சபநிதி, முகுந்தநிதி, குந்தாக்யநிதி, நீலநிதி, வரநிதி ஆகிய குபேரனின் பிரதிநிதிகள் வீற்றுள்ளதாக சாஸ்திரம் கூறுகிறது. இந்த வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்து முறையாக பூஜித்து வந்தால் வாழ்வில் வளம் பெருகும்.***

-அருள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(தொடர்ச்சி...

# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்

யாழ்ப்பாணம்- காரைநகர்

கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்தும்
ஈங்கோய் மலையி லெழிவது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியுந்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்துந்
திருப்பனை யூரில் விருப்ப னாகியுங்
கழுமல மனதிற் காட்சி கொடுத்துங்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல வருளியுங்
குற்றாலத்துக் குறியா யிருந்து

**பொழிப்புரை:**

கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்- திருக்கடம்பூர் என்னும் தலத்தில் கோயில் அமைய அங்கு வீற்றிருந்தும், ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்- திருவீங்கோய் மலையில் அழகிய மரகதத் திருமேனியைக் காட்டியும், ஐயாறு அதனில் சைவன் ஆகியும்- திருவையாற்றில் ஓர் ஆதிசைவ அந்தணனாகியும், துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்- திருத்துருத்தி என்னும் தலத்தில் அடியவர்க்கு அருள்புரியும் ஆசையுடன் வீற்றிருந்தும், திருப்பனை ஊரில் விருப்பன் ஆகியும்- திருப்பனையூர் என்னும் தலத்தில் அடியார்க்கு வேண்டுவன ஈயும் விருப்பமுடையவனாக வீற்றிருந்தும், கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்- சீகாழி என்னும் தலத்தில் தனது திருவுருவினைக் காட்டியும், கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும்- திருக்கழுக்குன்றத்திலே ஞான வடிவத்தோடு நிலையாக எழுந்தருளியும், புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்- திருப்புறம்பயம் என்னும் திருப்பதியில் அறநூற்பொருள்கள் பலவற்றை அருளிச் செய்தும், குற்றாலத்துக் குறியாய் இருந்தும்- திருக்குற்றாலம் என்னும் தலத்தில் திருமாலின் திருவுருவம் அகத்திய முனிவராற் சிவலிங்கத் திருவுருவமாக அதில் எழுந்தருளியிருந்தும்.

இடம்- வீடு, ஈண்டுத் திருக்கோயிலை உணர்த்தியது. திருக்கடம்பூரில் கோயில் அமைய இறைவன் அங்கு எழுந்தருளியிருந்தமையின் "கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்" என்றார். "வளருங் கோல வள்சடையாற்கிடம்.... கடம்பூர் கரக், கோயிலே" என அப்பரடிகள் (தே.நாவு 133:1) அருளியமையுங் காண்க.

ஈங்கோய்மலை- திருவீங்கோய்மலை. "எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ் ஈங்கோய் மலை" எனத் தேவாரத்து (ஞான 70:11) வருதலுங் காண்க. எழில்- அழகு. அது ஈண்டு மரகதத் திருமேனியைக் குறித்தது.

ஐயாறதனிற் சைவனாகியும் என்றது திருவையாற்றிலே இறைவனுக்குப் பூசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியும் ஆதி சைவப் பார்ப்பனர் இருபத்து நால்வருள் ஒருவர், தன் மனைவியையும் மைந்தனையும் விடுத்துக் காசிக்குப் போய் நெடுநாளாக மீண்டு வராமையால் அவரது மனைவி மக்கட்குரிய பொருளை ஏனையோர் கவர்ந்துகொள்ளக் கருதியபோது அதனைத் தடுத்தற் பொருட்டுக் காசிக்குப்போன சைவ மறையோனின் வடிவத்தோடு இறைவன் தோன்றி அருள் செய்தமை பற்றியதாகும். ஐயாறு சோழ நாட்டிற் காவிரியின் வட பாலுள்ள தலம். "கரைசெய் காவிரியின் வட பாலது..... ஐயாறுடை யப்பனே" (தே.ஞான 412:9) என வருதலுங் காண்க.

துருத்தி: காவிரியின் தென்கரையில் உள்ள தலம். துருத்தி என்பதற்கு ஆற் றிடைக்குறை என்பது பொருள். "விரிதிரைக் காவிரி வியன்பெருந்துருத்தி" (சிலப். 11:39) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இது காவிரியின் நடுவுள் இருந்தமையின் இப்பெயர் பெற்றது. "பொன்னியின் நடுவு தன்னுட் பூம்புனல் பொலிந்து தோன்றும், துன்னிய துருத்தி யானை" எனத் தேவாரத்து (நாவு 42:3) என வருதலுங் காண்க. அருத்தி- ஆசை

பனையூர் சோழநாட்டிலுள்ள தலம். "காவிரி புடைசூழ் சோணாட்டவர்தாம் பரவிய கருணையங் கடலப். பாவிரி புலவர் பயிலுந் திருப்பனையூர்" (தே.சுந் 87:6) என வருதலுங் காண்க.

கழுமலம்- சீகாழிப்பதி. "ஊருறு பதிக ளுலகுடன் பொங்கி யொலி புனல் கொள வுடன்மிதந்த, காருறு செம்மை நன்மையான் மிக்க கழுமல நகர்" "ஒருவரிவ் வுலகில் வாழ்கிலா வண்ணமொலிபுனல் வெள்ளமுன் பரப்பக், கருவரை சூழ்ந்த கடலிடை மிதக்குங் கழுமலநகர்" எனத் தேவாரத்து (ஞான 376:3,9) வருவன காண்க. இறைவன் அடிகட்குத் திருக்கழுக்கமலத்திலே காட்சி நல்கியமையின் "கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்" என்றார்.

கழுக்குன்று: இது தொண்டை நாட்டி லுள்ள தலம். வழுக்காது- தப்பாது, வழுக் குதல்- தப்புதல். இப்பொருட்டாதல் "வழுக்கிக் கழித்தலே நன்று" (நாலடி 71) என்புழிக் காண்க. திருக்கழுக்குன்றிலே இறைவன் திருக் கோலத்தை அடிகட்குக் காட்டியருளியமை யின் "கழுக்குன்றதனில் வழுக்கா திருந்தும்" என்றார். "கணக்கில்லாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய்க் கழுக் குன்றிலே" "காணெ ணாத்திருக் கோலம் நீ வந்து காட்டினாய் கழுக் குன்றிலே" எனத் திருக்கழுக்குன்றத்து பதிகத்து (1,4) வருவனவுங் காண்க.

புறம்பயம்- திருப்புறம்பயம் என்னும் திருப்பதி. இது சோழ நாட்டிலே கும்பகோணத் திற்கு வடமேற்கே மண்ணியாற்றின் வடகரை யிலுள்ளது. சனகர் முதலிய நால்வர்க்கு இறைவன் இத்தலத்தில் அறநூற்பொருள் பல வற்றை அருளிச் செய்தமையின் "புறம்பய மதனி லறம்பல வருளியும்" என்றார். இதனை,

"திறம்பய னுறும்பொரு டெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்" (166:1)

என திருஞானசம்பந்தர் தேவாரத்தானும் உணரலாம்.

குற்றாலம்- பாண்டி நாட்டிலுள்ள தலம். குறியாயிருந்து- சிவலிங்க வடிவமாயத் தோன்றி இருந்தது.

அக்த்தியர் கொங்கு நாட்டிலிருந்து தென்றிசை நோக்கிச் செல்லும் வழியிற் திருக்குற்றாலம் என்னும் வைணவதலம் இருந்தது. அங்குள்ள வைணவப் பார்ப்பனர்கள் சிவனடியார்களைக் காணின் பகைஞரெனக் கருதி இகழ்ந்து வந்தனர். அவர்தம் செயலை உணர்ந்த அகத்தியர் அவ்வூர்த் தெருவில் நடந்து திருமால் கோயிலின் முன்னே சென்றார். அக்கோயிலிலுள்ள வைணவர்கள் அவரைக் கண்டு கண்டிகையுந் திருநீறும் அணிந்த நீ ஐயமேற்றுண்பவனுக்கு அடியவனாதலால் இவ்விடத்திற்கு வருதல் தகாது. ஆதலால் அப்பாற் போய்விடு என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்தனர். அவரும் அதனைக் கேட்டு நகைத்து நான் அப்பாற் போய்விடுகிறேன் என்று திரும்பிச் சென்ற அகத்தியர் சிவபெருமானை இகழ்ந்த வைணவர்களின் அகந்தையை அகற்ற எண்ணி மாயவனின் அடியார்போல் உருக்கொண்டு மீண்டும் அவ்விடத்தைக் குறுகுதலும் தம்மை எதிர்வந்து போற்றிய வைணவர்களை நோக்கி அழகர் மலையிலிருந்து அத்திகிரிக்குச் செல்கின்றோம். இத்தலத்திலுள்ள நம்பெருமான் கோயிலைப் பரவும் விருப்புடையேம் என்றார். அதனைக் கேட்ட வைணவர்கள் திருமால் கோயிலைக் காட்ட முனிவர் அக்கோயிலை அடைந்து செஞ்சடைப் பெருமானை நினைத்துக்கொண்டு திருமாலின் திருமுடிமேற் கையை வைத்துக் குழைவித்து ஒரு சிவலிங்க வடிவாகச் செய்தார். இவ்வரலாற்றினைக் கந்தபுராணத்துட் காண்க.

"சித்தினாற் கரும்பொன் மேனி செம்பொனாம் படிபோற் கும்பன்
பத்தியா லுருகி மாலாம் படிவனே பரம னானான்"

(திருமால் சிவபிரானான 144)

எனத் திருக்குற்றாலத்தலபுராணத்து வருதலுங் காண்க. திருமால் திருவுரு சிவலிங்கத் திருவுருவானமை பற்றிக் "குற்றாலத்துக் குறி யாயிருந்தும்" என்றார்.

(தொடரும்...

# மனங்கனிந்து அருளல் வேண்டும்



நித்தநித்தம் 'சந்நிதி' நற் பதியில் வந்து
நினை தினமும் தொழுகின்ற அடியார்க்கெல்லாம்
சித்தி தரும் முருகா! எம் உமையின் பாலா!
சிந்தைகளில் குடிகொண்ட அன்பு நேசா!
பக்தரெல்லாம் நினது திருப் புகழைப் பாடி
பாமாலை சூடியுமே பணிந்து நிற்க,
சக்தியவர்கள் இருவருடன் மயில்மீதேறி
சஞ்சலங்கள் தீர்த்திடவே வாருமையா!

சுய நலமே கொண்டிங்கு மற்றோர் வாழ்வை
சூனியமாய் ஆக்கிடவே நினைக்கும் அந்த
கயவர்களின் கொடுமைகளிலிருந்தே எம்மைக்
காத்திடவே வேலேந்தி வாருமையா!
பயமுற்றுப் பரிதவித்து வாழும் வாழ்வு
பாரினிலே எமக்கினியும் வேண்டாம்! எங்கள்
துயர் தீர்க்கத் தூயவனே வாருமையா!
தொல்லை களைந்துய்ய வழிகாட்டுமையா!

நிலையில்லா வாழ்வதனை நிலையென்றெண்ணி
நித்தமுமே பிறரையிங்கு அடிமைகொண்டு,
கொலை, கொள்ளை பாதகங்கள் புரிந்தே, மற்றோர்
குடிகெடுக்க நினைக்கின்ற கொடியோர் தம்மின்
வலையினில் நாம் வீழ்ந்துவிடாதிருக்க நீயும்
வந்தருளைத் தந்திடவே வேண்டும் ஐயா!
அலை அலையாய்ப் பக்தரெலாம் தொழுதே ஏத்த
ஆறுமுகா! மனங்கனிந்து அருளல்வேண்டும்!

—கி. குலசேகரன்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே கருந்தனம்



திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

நாம், எமது வாழ்நாளில், தேடி அடைந்துகொள்ளவேண்டிய பொருள்கள் இரண்டாகும். அவையாவன, ஒன்று கல்வி, மற்றையது செல்வம். இவ்விரண்டும் மனித நல்வாழ்க்கைக்கு இன்றியமையாதன. கல்வி யாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கற்கக்கூடாத நூல்களும் உண்டு என்பது இதிலிருந்து பிறக்கும் கருத்து. அவற்றைக் கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது. அவை மனங்களைக் கெடுத்து வாழ்க்கையைப் பாழாக்கிவிடும். கற்றற்குரிய நூல்களாவன அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்கள். இந்நான்கு வாழ்க்கைப் பயன்களையும் அடைதலே கல்வியின் நோக்கம் எனச் சைவத்தமிழ் மரபு கொள்கிறது. வாழ்க்கையில் அறம், பொருள், இன்பத்தையும், அதன் பின் வீடுபேறாகிய பேரின்பத்தையும் அடைய உறுதுணையாக வருவது தூயநற்கல்வியே. அவற்றைத் தராத கல்வி, கல்வி ஆகாது.

கல்வியுடையவர், இம்மை வாழ்விலே சொற்சுவை, பொருட்சுவை என்பவற்றை அனுபவித்தலாலும்; புகழும், பொருளும், மதிப்பும் மரியாதையும் பெறுவதாலும்; பின்னே தருமத்தின் பயனையும் முத்தியையும் அடைதலாலும், எந்நாளும் அவர்களுக்கு இன்பமே உண்டு; துன்பம் இல்லை, என்கிறார் நாவலர் பெருமான்.

நமது தமிழ்மரபுக் கல்வி பண்டு தொட்டுச், சைவசமய உணர்வோடு வளர்ந்து வந்திருக்கிறது. கற்றோரையே "கண்ணுடையர்" என ஏற்றிப்போற்றும் மரபு நம்முடையது. பொருளும், அழகும், செல்வாக்கும் உடையவராயினும், கல்வியில்லாதவர் முருக்கம் பூவுக்குச் சமமாவர் என்பது நாவலர் கணிப்பீடு. முள்முருக்கம்- பூவுக்கு மணம், குணம், பயன் எதுவும் கிடையாது என்பதால், அப்பூவைத் தேடுவாருமில்லை, சூடுவாருமில்லை. கல்வியுடையோருக்குச் செல்லுமிடமெல்லாம் சிறப்பு. மண்ணிற் கற்றோன் சிறப்புடையோன் என மதித்துப் போற்றுவது நம் மரபு. அதனால் யாவரும் கல்வியைச் சிறிதும் அலட்சியம் செய்யாது சிரத்தையோடு கற்றல்வேண்டும் என்று நாவலர் பெருமான் அறிவுறுத்தியுள்ளார்.

அழுக்குப் படியாத சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கும். மனிதரின் பிள்ளைப் பருவத்தில், மனங்கள் அழுக்கு ஏறாது சுத்தமாக இருக்கும். அதனால் இளைமைப் பராயத்திலே கற்கவேண்டியனவற்றைக் கற்கவேண்டும். கற்ற கல்வி புத்தியிலே நன்றாகப் பதியும். இளமையிற் கல்வி கற்றலை வலியுறுத்தும் நாவலர் பெருமான், கல்வியை இளமைதொட்டு மரணபரியந்தம் விடாமற் கற்கவேண்டும் என்கிறார். வாழ்நாள் முழுவதும் கல்வியைத் தொடரவேண்டும் என்பது நாவலர் கருத்து. மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான் என்று பகவான் இராமகிருஷ்ணரின் அருள்வாக்கையும் நாவலர் கொண்டிருந்த கருத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

நாவலர் கருத்துப்படி, கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்பதாகும். கற்றல், கற்றபடி நிற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது ஒழுகுதல் ஆகிய இரண்டும் கல்வியென்னும் நாணயத்தின் இரு பக்கங் கள். கற்றுவிட்டு கற்றபடி வாழ்க்கையில் ஒழுகாது விட்டால், கற்ற கல்வியினால் ஒரு பயனும் இல்லை. கல்வியின் பெறுமானமும் இறக்கப்பட்டு விடும். கல்வி கற்றவன் ஒழுக் கக் குறைவாக நடந்தால் சமூகம் தூற்றும். அது நியாயமானதே. படித்தவன், பட்டம் பெற்றவன், பகுத்தறிவையும் ஒழுக்கத்தையும் பறிகொடுக்கக்கூடாது என்பது சமுதாய எதிர் பார்ப்பு. அதனாலேயே ஒழுக்கத்தைத் தராத கல்வி, உண்மைக் கல்வி ஆகாது என்பது சைவ மரபின் நிலைப்பாடாக உள்ளது.

கல்வியிலே தேர்ச்சி அடைவதற்கு ஒரே வழி இடைவிடாது ஊக்கத்துடன் கற்றல்தான். சோர்வு இன்றி; நாள்தோறும் கிரமமாகச் சிறி தாயினும் நன்றாகக் கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவர் ஆவார். கற்றல், சிந்தித்தல், தெளிதல், கலந்துரையாடல், எடுத்துக்கூறல் என்பவற்றின்மூலம் கல்வியைக் கசடறக் கற்றுக்கொள்ள முடியும். கல்வியோடு எவ் வளவு நெருக்கமாகப் பழகுகின்றோமோ, அவ் வளவுக்குக் கல்வியுடன் பரிச்சயம் ஏற்படுத் திக்கொள்ளமுடியும்.

கல்வியுடையவர், தாம் கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும் நன்மாணாக் கருக்குக் கற்பித்தலும், எல்லோருக்கும் நல்ல வற்றை எடுத்துக்கூறி அவர்களை நல்வழிப் படுத்துதலும் ஆகிய இம்மூன்றையும் எந் நாளும் தமக்குக் கடமையாகக் கொள்ளல் வேண்டும். வித்தியாதானமே எல்லாத் தானங் களிலும் சிறந்தது என்று நாவலர் கூறுவர்.

சரீரத்திற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும், சமுதாய நல்வாழ்விற்கும் கல்வி கருவி யாகவும், கருந்தனமாகவும். அமைவதால் தானங்களில் சிறந்தது வித்தியா தானமே எனப்பட்டது. கல்வியை வழங்குதல், கற்பித் தல் என்பன வித்தியாதானம் ஆகும். கல்வி கொடுக்கக் கொடுக்க கொடுப்பவருக்குக் கூடிக் கொண்டே செல்லும் இயல்புடையது. அத னால் வித்தியாதானத்தை எவர்க்கும் மறுத்தல் ஆகாது. அது பாவகாரியம் ஆகும். ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம் ஆகும். கல்வி கற்பித்தல், கல்வியைப் பெறும் மாணாக்கருக்கு அன்னம், வஸ்திரம், வேறு வசதிகள் என்பவற்றை வழங்குதல் யாவும் கல்வி தொடர்பான தானங்களே எனக் கொள் ளுதல் வேண்டும். தாங்கற்ற கல்வியை மாணாக்கர்களுக்குக் கருணையோடு கற்பி யாதவர் காட்டிலே நச்சு மாமரமாவார் என்கிறார் நாவலர் பெருமான். மனிதர் கல்வியில் பிறந்து, கல்வியில் வாழ்ந்து, கல்வியை ஒரு வாழ்க் கைப் பயணமாகக் கொள்ளவேண்டும்- கற்ற படி ஒழுகவேண்டும் என்னும் நாவலர் பெரு மானின் அரிய கருத்தினை உச்சிமேல் கொண்டு உய்வு பெறுவோமாக.

## வீண் வாழ்க்கை எதற்கு?

மனிதர்கள் பிறந்து, வளர்ந்து, உண்டு, உடுத்து, உயிர்த்து, உறங்கி, தளர்ந்து எந்த நன்மையும் செய்யாமல் வீணாக இறந்து போகின்றார்கள். மீண்டும் பிறக்கின்றார்கள். பிறப்பு, இறப்பு ஆகியவற்றிற்கு முடிவே இல்லை. காட்டிலே உள்ள மரங்கள் யாருக்கும் பயன்படாமல் அழிவதுபோல. இதை நினைத்தால் அறிவுள்ள நெஞ்சம் கலங்குகின்றது. காட்டிலே எரிந்த நிலவும், கடலிலே பொழிந்த மழையும், களரிலே விதைத்த விதையும், ஆற்றிலே கரைத்த புளியும் அறிவிலார்க்கு உரைத்த அறமும்போல் வீணாகின்றனர். ஒரு சிறந்த நன்மைக் காரியத்தைச் செய்து இறந்தவர் உயிரோடு இருப்பவரே ஆவர். ஒரு பயனும் இன்றி வாழ்பவர் உயிரோடு இருந்தும் இறந்தவரே ஆவர். பல திருக்கோயில்களைப் புதுக்கிப் புகழ்பெற்ற கோச்செங்கோட்சோழன், திருமலை நாயக்கர், பச்சையப்ப முதலியார், வள்ளல் சீதக்காதி முதலியோர் இன்றும் புகழுடம்பில் வாழ்கிறார்கள்.

*-அறநெறிச் சிந்தனைகள்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி



—வாரியார் சுவாமிகள் உரையுடன்—

9. மட்டூர்குழல் மங்கையர் மையல்வலைப்
பட்டூசல் படும்பரிசென் றொழிவேன்
தட்டூடற வேல்சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே.

### பதவுரை

சயிலத்து- கிரவுஞ்ச கிரியின்மீது, தட்டு ஊடு அற- தடைகள் இன்றி அதன் நடுவிடம் ஊடுருவிச் செல்லும்படி, வேல் எறியும்- வேலாயுதத்தை ஏவிய, நிட்டூர- கடுமை வாய்ந்தவரே! நிராகுல- கலக்கம் இல்லாதவரே! மட்டு ஊர் குழல்- தேன் துளிக்கின்ற மலர் சூடிய கூந்தலையுடைய, மங்கையர்- பெண்களது, மையல் வலை பட்டு- மோகவலையில் அகப்பட்டு, ஊசல் படும் பரிசு- ஊஞ்சல் ஆடுவதுபோல், உள்ளம் தடுமாறுகின்ற தன்மையை, என்று ஒழிவேன்- எக்காலத்தில் அடியேன் நீங்குவேன்? விரைவில் விலக்கி அருள்புரிவீராக!

### பொழிப்புரை

கிரவுஞ்ச மலையின்மீது, தடைகள் இன்றி நடு இடம் ஊடுருவிச் செல்லும்படி வேலாயுதத்தை ஏவிய கடுமை வாய்ந்தவரே! கலக்கம் இல்லாதவரே! பயம் இல்லாதவரே! தேன் துளிக்கின்ற மலர்களைச் சூடிய கூந்தலையுடைய மாதர்களின் மோக வலையில் சிக்கி, அடியேன் ஊஞ்சல்போல் உள்ளம் அலையும் தன்மையை என்று விட்டு ஒழிவேன்.

### விரிவுரை

**மட்டூர் குழல் மங்கையர் மையல் வலை:-**

மட்டு- தேன். வாசனையென்றும் பொருள் உண்டு.

“மட்டவிழ் மலர்” என்கின்றார். “கைத்தல நிறைகனி” என்று தொடங்கும் திருப்புகழில், மட்டூர்குழல் மங்கையர் என்பது பொது மகளிரைக் குறிக்கின்றது. பொதுமகளிர் ஆடவரைக் கண்ணாகிய வலை வீசி, தமது காம வலையில் சிக்கும்படி செய்வர்.

“திண்ணிய நெஞ்சப்பறவை சிக்கக் குழற்காட்டில்
கண்ணிவைப்பார் மாயங் கடக்குநாள் எந்நாளோ”

-தாயுமானவர்

பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

-திருவாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊசல்படும் பரிசென் றொழிவேன்:**

ஊஞ்சல் இங்கும் அங்குமாக அலையும். அதுபோல் உயிர்கள் புண்ணியப்பயனால் பூதசார தநுவுடன் சுவர்க்கவுலகங்களிலும், பாவப் பயனால் பூதமா தநுவுடன் நரகவுலகங்களிலும், கலப்பு வினைப் பயனால் பூதபரிணாம தநுவுடன் பூவுலகிலும் எண்ணில் காலமாக அலைந்து கொண்டிருக்கின்றன.

பசுவுக்கு ஒரு கயிறு, யானைக்கு இரு கயிறுகள், குதிரைக்கு மூன்று கயிறுகள், ஊஞ்சலுக்கு நான்கு கயிறுகள், உயிர்கட்கு ஐந்து கயிறுகள். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதம் என்ற பஞ்ச மலங்களால் கட்டுண்டு உயிர்கள் சுவர்க்கம் நரகம் பூவுலகம் என்ற மூவிடங்களிலும் உழன்று திரிகின்றன. ஐந்து சங்கிலிகளால் கட்டுண்ட ஊசல் உவமையாயிற்று.

ஒரு அருளாளன் நான்கு சங்கிலிகளையும் அறுத்தவுடன் ஊஞ்சல் தரையையடைகின்றது. அதுபோல் ஞான ஆசாரியர் ஞான வாளால் பஞ்ச மலங்களைச் சேதித்தவுடன் ஆன்மா இறைவன் திருவடியைச் சேர்கின்றது.

உறுகயி றூசல்போல ஒன்றுவிட் டொன்றுபற்றி
மறுகயி றூசல்போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையான் பாதத்து
அறுகயி றூசலானேன் அதிகைவீ ரட்டனீரே.

-அப்பர்

**கிரவுஞ்சன் வரலாறு**

தாரகாசுரன் அரசு புரிந்த மாயமாபுரியில் கிரவுஞ்சன் என்று ஒரு அரக்கன் இருந்தான்.

இவன் முனிவர்கள் செல்லும் வழியில் மாயையின் ஆற்றலினால் மலைவடிவாக நின்று, மலைக்குள் வழியிருப்பதுபோல காட்டுவான். அவ்வழியிற் சென்ற முனிவர்களை மயக்கிக் கொன்று தின்று கொண்டிருந்தான்.

அகத்திய முனிவர் மேருமலையினின்றும் புறப்பட்டுப் பொதியமலையை நோக்கித் தென் திசைக்குச் செல்லும் வழியில் பல சிகரங்களையுடைய பெரு மலையுருவதாக நின்று அதற்குள் வழியிருக்குமாறு காட்டினான்.

அகத்தியர் அவ்வழியே குரோசதூரம் போக அவ்வழி முடிந்தது. வந்த வழியே திரும்ப, அங்கும் வழி காணாது மயங்கினார். அவர் அறிவுக் கண்ணால் அசுர மாயையென்று அறிந்து, கைத் தண்டினால் குத்தி வெளிப்பட்டு, "நீ இம் மலைவடிவாகவே இருந்து அசுரர்கட்கு இருப்பிடமாய், அமரர்கட்கும் அருந்தவர்க்கும் அலக்கண் புரிந்துகொண்டிருந்து அறுமுகப்பெருமான் அயில்வேலால் அழியக் கடவாய்" என்று சபித்தார். அவன் அம்மலை வடிவாகவே இருந்தான்.

தாரகனுடன் முருகவேள் போர் புரிந்தபோது, கிரவுஞ்சன் தாரகனுடன் பல மாயைகளைப் புரிந்தான். வீரவாகுதேவர் முதலியோரை மலைக்குள் புகுமாறு செய்து மயக்கினான். கந்தவேள் வேலாயுதத்தால் மலையைப் பிளந்து அழித்தருளினார்.

**நிட்டூர:-**

தீவினை புரிவோர்க்குக் குமரவேள் கடுமை உடையவராக இருந்து, தண்டித்து மறக்கருணை புரிவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன் -திருவருட்பயன்
"சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
போந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியவாம்"

-அற்புதத் திருவந்தாதி

**நிராகுல நிர்ப்பயனே:-**

நிராகுலம்- கலக்கம் இல்லாதவர், நிர்ப்பயன்- பயம் இல்லாதவர்.

தன்னையடையும் அடியாருடைய கலக்கத்தையும் பயத்தையும் போக்கி அறக்கருணை புரிகின்றார்.

"முருகா! கிரவுஞ்ச மலையாகிய மாயையை அழித்தனை நீ. மாதர் மயலாகிய மாயையை அழித்தருளும் உன் திருவருள் என்று கிடைக்குமோ?

நிட்டூர நிராகுல நிர்ப்பயன் என்ற மூன்று விழிகளால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை அழிப்பவன் முருகன் என்ற குறிப்பையும் உணர்க.

**கருத்துரை**

மலை பிளந்த வேலவனே! மாயவலை நீக்கியருள் செய்.

(தொடரும்....

# வணக்கம் கூறுவது எதற்காக?



பாரதப் பரம்பரையின் மூலைக் கல்லாக விளங்குவது மரியாதை. முதியோரிடமும், மதிப்புக்குரிய பெரியோர்களிடமும் வணக்கம் கூறுவதும் நமது பரம்பரைச் சொத்து.

ஒரு நபரை ஒரு நாளில் முதலாவதாகச் சந்திக்கும் போதும், பல நாட்களுக்குப் பின் காணும்போதும் வணக்கம் கூறி வாழ்த்தி வரவேற்பது வழக்கம். மேலும் விருந்தினர் வரும்போது நம் இருக்கையிலிருந்து எழுந்து வணங்கி வரவேற்று விருந்தினரை அமரச் செய்த பின்னரே நாம் அமருவது வழக்கம். விருந்தினர் விடைபெறும்போதும் வாசல் வரை சென்று வழியனுப்பி விடை கொடுப்பதிலும் நாம் தவறுவதில்லை. ஆனால் இப்போது காலம் மாறி வருகின்றது. இன்றைய தலைமுறை இவ்வழக்கங்களை உதறிவிடவும் ஏளனம் செய்யவும் தயங்குவதில்லை.

இரண்டு கைகளும் சேர்த்து தலைகுனிந்து வணங்கி "நமஸ்தே" என்று சொல்லும்போது நாம் பொருளாக்குவது என்னவென்றால் 'ந' என்பது இல்லை என்றும் 'ம' என்பது என்னுடையது என்றும் 'தே' என்பது உங்களுடையது என்றும் ஆகும். என்னுடையதாகக் காணும் இவ்வுடல் என் சுய லாபத்துக்கானதல்ல என்றும் உங்கள் சேவைக்கானது என்றும் பொருள்படக் கூறுகின்றோம். தன்னைவிட தம் முன் நிற்கும் நபருக்கே உயர்வளிக்கும் பண்பு இதில் நமக்குக் காண இயலும்.

*-ஓலைச்சுவடி-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை உங்கள் விருப்பப்படி.....

**சத்குரு ஜக்கி வாசுதேவ்** அவர்கள்

இந்த உலகில், மற்றவருடன் உங்கள் உறவு எப்படி அமைகிறது என்பது, உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சங்களில் ஒன்று.

இங்கே நீங்கள் பல்வேறு முகங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் ஒரு சிறிய சதுர அறையில் உங்களுடன் ஒரேயொரு சகபணியாளர் வேலை செய்தால், பிரச்சினைகளை சமாளிப்பது சுலபமாயிருக்கலாம். ஆனால், உங்கள் பணியில் ஆயிரம் பேரைக் கையாள வேண்டியிருந்தால், பல வினோதமான அனுபவங்களை நீங்கள் சந்திக்கநேரிடும்.

நீங்கள் முக்கியமானவராக இருந்தாலும், அத்தனைபேரும் உங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர் பார்த்தீர்களேயானால், மிகப்பெரிய ஏமாற்றமே ஏற்படும். அடுத்தவர் உங்களைப் புரிந்து கொள்ளாதலால் இது நேரவில்லை. அடுத்தவரை நீங்கள் புரிந்து கொள்ளாததால்தான் இது நேர்ந்தது.



சொல்லப்போனால், மிக நெருக்கமான உறவுகளிடம் பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றங்களையே சந்தித்திருப்பீர்கள். ஒருமுறை, கோமாவில் பலமாதங்களாகக் கிடந்த கணவனை அருகிலேயே இருந்து கண்ணும் கருத்துமாக அவனது மனைவி கவனித்துக் கொண்டாள். கணவனிற்கு நினைவு திரும்பியதும், மனைவியை அருகே அழைத்தான்.

“என்னுடைய மோசமான நேரங்களில் எல்லாம் நீ என்கூட இருந்திருக்கிறாய். எனக்கு வேலை போனபோது, உற்சாக வார்த்தைகள் சொன்னாய். நான் சொந்த பிஸினஸ் துவங்கி நஷ்டத்திற்கு மேல் நஷ்டம் வந்தபோது, இரவு பகல் பார்க்காமல் உழைத்துப் பணம் கொண்டுவந்தாய். வழக்கில் நம் வீட்டையே ஜப்தி செய்தபோதுகூட மனந்தளராமல் சிறிய வீட்டுக்கு என்னுடன் குடிவந்தாய். இன்று ஆஸ்பத்திரியில் கிடக்கிறேன். இப்போதும் நீ பக்கத்திலேயே இருக்கிறாய். உன்னைப் பார்க்கும்போது என்ன தோன்றுகிறது தெரியுமா” என்று மெல்லிய குரலில் கேட்டான்.

மனைவி சந்தோசக் கண்ணீர் பொங்க நெகிழ்ச்சியுடன் அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

“கணவன் சொன்னான்..... “நீ என்னோடு இருப்பதால்தான் எனக்கு எந்த நல்லதும் நடப்பதில்லையோ என்று தோன்றுகிறது.”

இப்படி ஏறுக்குமாறாகக் குதர்க்கமாகப் புரிந்துகொள்பவர்களிடம் எந்த உறவுதான் நீடித்திருக்கமுடியும்? உறவுகளை எப்படிக் கையாள வேண்டும்? நாம் எப்படிக் கையாள்கின்றோம்?

எவ்வளவு நெருக்கமானவர்களாக இருந்தாலும், ஒரு எல்லைக்கோட்டை வரைந்து வைத்திருக்கின்றோம். இருவரில் யார் அதைத் தாண்டினாலும், அடுத்தவர் போர்க்கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்குகிறோம். ஒருவராவது விட்டுக்கொடுத்து, பெருந்தன்மையாக நடந்தால்தான் அடுத்தவர் பிழைத்திருக்க முடியும்.

உறவினராக இருக்கலாம், உடன் பணிபுரிபவராக இருக்கலாம், நண்பராக இருக்கலாம், அடுத்த நாட்டைச் சேர்ந்தவராக இருக்கலாம்..... உலகில் பிறந்தவர் எவராக இருந்தாலும், அவர்களிடம் உங்களுக்குப் பிடித்த குணங்கள் சிலவும் பிடிக்காத குணங்கள் சிலவும் கலந்துதான் இருக்கும்.



இரண்டுவகை குணங்களையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வந்துவிட்டால், பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும். அப்படி இல்லாமல், தேவைப்படும்போது அடுத்தவரைக் கெஞ்சுவதும், தேவையில்லாதபோது எடுத்தெறிவது மாக இருக்கும் வரை- ஏமாற்றங்களும் மனப்போராட் டங்களும் தொடரத்தான் செய்யும். சுற்றியிருப் பவர்கள் எல்லோரும் அற்புதமான மனிதர்கள். ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் அவர்கள் பைத்தியக் காரத்தனமாக நடந்துகொள்ளலாம். அதைப் பெரிது படுத்தாதீர்கள்.

அவர்கள் மாறவேண்டும் என்று ஏன் எதிர் பார்க்கிறீர்கள்? நீங்கள் மாறுங்கள். எங்கெங்கே, யார் யாரிடம், எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொள்ளத் தயாராயிருங்கள். அடுத்தவரிடம் எது செல்லுபடியாகுமோ அதைப் பயன்படுத்துங்கள். ஒரு தடவை சங்கரன்பிள்ளை திறந்திருந்த சாக்கடைக்குள் விழுந்துவிட்டார். எவ்வளவு முயற்சி செய்தும் வெளியே வரமுடியவில்லை.

பெருங் குரலெடுத்து, "தீ.... தீ...." என்று கத்தினார். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் பரபரப்பாகித் தீ அணைப்பவர்களை வரவழைத்தார்கள். அவர்கள் சங்கரன் பிள்ளையை சாக்கடையில் இருந்து வெளியே இழுத்துப்போட்டார்கள்.

"தீ.... தீ.... என்று கத்தினீர்களே, எங்கே நெருப்பு?" என்று அவரிடம் கேட்டார்கள். "சாக்கடை..... சாக்கடை என்று கத்தினால் நீங்கள் வருவீர்களா? அதனால்தான் தீ.... தீ... என்று குரல் கொடுத்தேன்" என்றார் சங்கரன்பிள்ளை.

உங்கள் வீட்டில் இருக்கும் ஒவ்வொருவரும் உங்களைப்போலவே இருந்துவிட்டால் என்ன ஆகும் யோசியுங்கள். அப்புறம் யாரை முட்டாள் என்று திட்டுவீர்கள்? யாரைப் புத்திசாலி என்று கொண்டாடுவீர்கள்? அரை மணிநேரத்துக்குக்கூட உங்களால் தாக்குப்பிடிக்க முடியாது. வீட்டிலேயே இப்படி என்றால், உலகையே உங்களைப்போல மாற்றப்பார்ப்பது எப்பேர்ப்பட்ட முட்டாள்தனம்?

வாழ்க்கையின் சுவாரஸ்யமே, அதன் வேறுபாடுகளில்தானே இருக்கிறது? ஒவ்வொருவரையும் உங்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்றபடி வளைக்கப் பார்க்காதீர்கள். மாறாக அடுத்தவரை அப்படியே ஏற்றுக்கொள்ளப் பழகுங்கள். அப்படிச் செய்தால் மற்றவர்கள் உங்கள் விருப்பப்படி அமையாமல் போனாலும், வாழ்க்கை உங்கள் விருப்பப்படி அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# பரிபாடல் பகரும் பழுத்த பத்திப் பிரார்த்தனை - 6

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

மூன்றாம் பரிபாடல் திருமால்மீது பரிந்து பாடப்பட்டது. அது கடவுள் வாழ்த்தாக அமைந்தது. கடுவனிளவெயினனார் என்னும் புலவரால் பாடப்பெற்றது. இசை வகுத்தவர் பெட்டனாகனார். பண்ணுப் பாலையாழ்.

"திருமாலேயோ! திருமாலேயோ!! அடியவர்களுடைய பிறவித் துயரைத் துடைத்து வீட்டின்பத்தைத் தரும் குற்றமற்ற சிறந்த திருவடியினை!! நீல மணிபோலும் திருமேனி திகழும் திருமாலேயோ

"மாஅ யோயே மாஅ யோயே
மறுபிறப் பறுக்கு மாசில் சேவடி
மணிதிக ழுருபின் மாஅ யோயே

(வரி 1-3)

"ஐம்பெரும் பூதமும் சூரிய சந்திரர்களும் யாக முதல்வனும் ஏனைய செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்னும் கோள்களும் அசுரர்களும் பன்னிரு ஆதித்தரும் வசுக்கள் எண்மரும் உருத்திரர்கள் பதினொருவரும் அச்சுவினி தேவர் இருவரும் இயமனும் கூற்றுவனும் மூவேழ் உலகமும் அந்த உலகங்களில் வாழும் உயிர்களும் ஆகி விரிந்தவனே!! இவற்றை வேதங்கள் விளம்புவதனாலே யாங்களும் மீண்டும் மீண்டும் விளம்பலுற்றேம்.

"அந்த வேதமாகிய நீரோடையில் மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்த பிரமதேவனும் அவனுடைய தந்தையும் என்று இயம்பும் அந்தணர் வேதம்!!

"அழகிய அணிகலன்களுடைய அமரர்களிடத்தில் கவர்ந்து கொண்டு வரப்பட்ட அமிழ்தினால் தன்னைப்பெற்ற தாயாகிய விந்தையினுடைய துன்பத்தை விலக்கிய கருடனை ஊர்தியாக உவந்தனை! கருடவாகனா! நினது திருவடியை வணங்காதவரும் உளரோ!

"ஏஎர் வயங்குபூண் அமரரை வௌவிய வமிழ்திற்
பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளினை
பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளின்
நிவந்தோங்கு குயர்கொடிச் சேவ லோய்நின்
சேவடி தொழாரு முளரோ

(வரி- 15-19)

"அத்திருவடிகளுள் வைத்து உலகங்களை நீ அளக்கின்ற காலத்து ஒரு திருவடியை உடையை என்றும் ஊழித்தீயும் இயமனும் கூற்றுவனும் பன்னிரு சூரியர்களும் ஒன்று திரண்ட ஊழிக்காலத்திலும் ஏழு கடல்களுள் அமிழ்ந்த அகிலத்தை பன்றிக்கொம்பினால் குத்திக் கொணர்ந்தாய் என்றும் வானினின்றும் பொழியும் மழைநீர் வறளும்படி அன்ன வடிவம் எடுத்து இறகுகளால் வற்றச் செய்தனை என்றும் மண்ணுலகத்து முனிவர்களும் விண்ணுலகத்து முப்பத்து மூவகைத் தேவர்களும் நின்னை விரும்பிப் பாடுவார்கள். அவர்கள் பாடுவதும் நம் முன்னோர் பாடும் வகையே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாங்கள் பாடுவதும் அம் முனிவர்களும் தேவர்களும் பாடுவன போலவே.

"பாடும் வகையேயெம் பாடல் தாமப்
பாடுவார் பாடும் வகை.

(வரி- 29-30)

"கூந்தல் குதிரை வடிவத்தோடு வந்த கேசி என்பவனுடைய கோபத்தை அடக்கிக் கொன்றவனே!! நின்னுடைய கைகள் நின்னுடைய புகழைப் போன்றன.

"அவற்றுள் நீ மோகினியான காலத்தில் நின்னைக் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியே அவுணர்களுக்கு அச்சமாக அமரர்களுக்கு அமிர்தினைப் பகுத்து வழங்கியமையால் நலமிலாக் கை ஒன்றினை!!

"இருகரத் திருமாலே! மூன்றுகை முனிவனே! நான்கு கரத் தலைவனே! ஐங்கர மைந்த! ஆறுகை நெடியவனே! ஏழு கையானே! எண்வகைத் தேவே! எண்கை ஏந்தலாய்"

"ஒன்பது கைகளையுடைய நிலையான புகழோனே!! பத்துக் கைகளையுடைய பேராற்றலுடையோனே! நூறு கைகளையுடைய மாயம் வல்ல மறவோனே! பதினாயிரங் கைகளையுடைய வேத முதல்வோனே! நூறாயிரம் கைகளை உடையோனாதலால் அறிதற்குரிய இறையோனே! பேரெண்ணாலும் இவ்வளவு என்று வரம்பறிய இயலாத உடம்பினை உடையோனே!!

"பெருமானே! உன் உயர்வு உரைக்க உன்னினால் நீயே உணரின் அல்லது பிறரால் உணரப்படுவாயோ?

"அனாதியினை உடைய வேதத்திற்கு முதல்வனே! பற்பலவாக விரிந்து பரந்த ஆகமங்கள் அனைத்தினாலும் அகங்காரத்தாலும் நெஞ்சினாலும் அறிவாலும் பிறவாற்றானும் நின்னுடைய வனப்பும் எல்லையும் அறியப்படாத முறைமையினை உடையோய்! பிறையாகத் தோன்றி நிறைவாகும் திங்களின் அழகிய குளிர்ச்சியோடு பதினாறு கலைகளாகிய இனிய நிலா உணவினையும் அழகிய அணிகலன்களையுமுடைய தேவர்கள் தலைவன் நீ....!

"தீயினுள் வெம்மை நீ! மலரினுள் மணம் நீ! மணியினுள் மணி நீ! வார்த்தையில் வாய்மை நீ! அறத்தினுள் அன்பு நீ! மறத்தினுள் வன்மை நீ! மறையின் மறைபொருள் நீ! பூதத்தின் முதற்பொருள் நீ!

"சூரியனில் ஒளி நீ! திங்களில் குழுமை நீ! எப்பொருளும் நீயே! எப்பொருளிடத்தும் அப்பொருளின் உட்பொருளாய் உறைவோன் நீயே! பொருளும் உள்ளீடும் நீயேயாதலின் நீ உறைதலும் அன்று- வேறாய் உறைவிடமும் இன்று!

"தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்ற நீ
கல்லினுள் மணியு நீ சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ
வேதத்து மறை நீ பூதத்து முதலு நீ
வெஞ்சுடர் ஒளியு நீ திங்களுள் அளியு நீ
அனைத்து நீ அனைத்தினுட் பொருளு நீ ஆதலின்
உறைவு முறைவது மிலையே யுண்மையும்

(வரிஎண் 63-69)

"படைப்பு காப்பு அழித்தல் என்னும் முத்தொழில் நிகழ்தல் பொருட்டு நீ பிறவாத பிறப்பில்லை. நீ பிறப்பாயாயினும் நின்னைப் பிறக்கும்படி செய்தோரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முதன்முறை யிடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே

(வரி எண்- 71-72)

"காயாம் பூ நிறத்தினாய்! புருட தத்துவமும் ஐம்பூதங்களும் தொழிற்கருவி ஐந்தும் ஓசையும், ஊறும் ஒளியும் சுவையும் நாற்றமும் அறிகருவிகள் ஆறும், அகங்காரமும் புத்தியும் மூலப்பகுதியும் நால்வகை ஊழியும் ஆராய்ந்து கூறும் பெருமையினை யுடையாய்!!

"செங்கண்ணும் கரிய மேனியுமான வாசுதேவனே! கருங்கண்ணும் வெள்ளுடலுமான சங்கருடனே! சிவந்த மேனி பிரத்தியும்நனே! பசிய உடம்புடைய அநிருத்தனே! ஆய்ச்சியர் குரவைக் கூத்தில் அவர்க்கு இடம் வலமாயவனே! கூத்தாட எடுத்த குடத்தினை! பகைவரைக் கொல்லும் கலப்பைப் படையாய்! பசுநிரை மேய்க்கும் ஆயனே! உயிர்களைக் காக்கும் தொழிலோய்!! காணப்படாத மரபினை! மறவா அன்பர் மனத்தாய் அழியா நிலைபேறுடையாய் உடஅகிலம் ஆள் அரசே! இயலறி புலவ! நல்ல யாழ் இசைப் புலவ! வனமாலை வள்ளல்! தோல்வியறியா வெற்றியனே! பொன்னாடையினாய்! வலம்புரிச் சங்கு வண்ணனே! ஆழிப்படையாய்! போர்புரி ஆற்றலாளனே! திருமகள் கணவ! பெருவிறல் மள்ள!!

"ஆதி ஊழியில் பெருவெள்ளத்தில் பூமிதோன்றாக் காலத்தே அச்சம் தரும் அப்பெருவெள்ளத்தில் தோன்றியதும் வேதமொழி மைந்தனாய பிரமதேவரோடு விரிந்த பொருட்டு உந்தித் தாமரை உடையோனே! நினது சக்கரம் உலகிற்கு நிழலாயது.

"திருவின் கணவ பெருவிறன் மள்ள
மாநில மியவா முதன்முறை அமயத்து
நாம வெள்ள நடுவண் தோன்றிய
வாய்மொழி மகனொடு மலர்ந்த
தாமரைப் பொருட்டுநின் னேமி நிழலே.

(பாட்டுவரி எண் 90-94)

(வளரும்...

## சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை - 25

—இராஜையா குகதாசன்—

**பல்லவி**

**இப்புவி காவாயோ எழில்முருகா! - நாளும்**
**கைப்போது மலர்தூவிக் காலிணை தொழுமென்னை**


**அநுபல்லவி**

**துப்பிதழ் குறவள்ளி தெய்விமகிழ் நாதா!**
**இப்பெரும் புவியீன்ற இறைவிசக்தி வேலா!**

**சரணம்**

**செப்புலகம் படைத்தும் காத்துநின்றே அழித்தும்**
**இப்பிர பஞ்சவுரு எய்திய விஸ்வரூபா!**
**தப்பிலாப் பூவெடுத்துத் தயவுடன் பணிசெய்வார்**
**ஒப்பிலா வாழ்வுபெற அருள்தரு முருகோனே!**

**ஒப்பரும் கார்த்திகையில் ஒளிர்திங்கள் முழுவதுமே**
**மெய்ப்படு மாவிளக்கும் ஆவின்நெய் விளக்கும் வைத்து**
**செப்புதற் கரியசெல்வச் சந்நிதி தொழுது வந்தால்**
**முப்புவனம் ஆளஅருள் மூலமே சுப்பிரமண்யா! (இப்புவி)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட வாழ்வில் தமிழ்ப் பண்பாடு

திரு க. கனகராசா அவர்கள்

பொதிகையில் பிறந்த அகத்தியர் வகுத்த தமிழ், தொல்காப்பியர், வள்ளுவர்- இளங்கோ- பாரதி போன்றோர் போற்றிப் புகழ்ந்த தமிழ், ஔவையும்- புகழேந்தியும் நாடெல்லாம் குலாவி வளர்த்த தமிழ், மூவேந்தர் மடியிலும் நாவுக்கரசர் நாவலர் போன்றோர் நாவிலும் தவழ்ந்த தமிழ், எமது தாய் மொழியாம் தமிழ் ஆகும். அணையா விளக்கென எம் தமிழ்த்தாய் தன்னகத்தே ஐம்பெருங் காவியங்கள், கவிதைகள், தேவாரம், திருவாசகம் என்னும் அரும்பெரும் செல்வங்களால் பெருமைப்படுத்துகின்ற தமிழர் பண்பாடுகளை இவை எடுத்தியம்புவனவாக உள்ளன.

எவரும் இப்பூவுலகில் பிறக்கும்போது இந்த நாடு இந்த மொழி இந்த மதம் எனக் கேட்டுப் பிறந்ததில்லை என்ற உண்மையை அனைவரும் உணர்கின்றோம். உலக வழக்கிலிருந்த 8000க்கும் மேற்பட்ட மொழிகளில் தமிழ்மொழிபோல் தொன்மையும் சிறப்பும் சீரிளமையும் கொண்ட வேறு மொழியேதும் இல்லை. ஆம்! மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி. காலத்தாய் கடைந்து எடுக்கப்பட்ட "அமுதம்". தமிழ் ஓர் இன்ப ஊற்று. செவ்வியல் மொழி.

"தெள்ளுற்ற அமுதின் சுவை கண்டார்" என்று பாரதியும் "கற்றது கைமண் அளவு" என்று ஔவையாரும், கூறுவதில் இருந்து தமிழ்க்கடலின் ஆழத்தினை கண்டு அறிந்து கொள்ள முடியாது என்பது தெட்டந்தெளிவாகிறது.

மொழியும் சமயமும் இரு கண்கள் என்பதற்கமைய இந்து மதத்தில் கூறப்படாதவை எதுவுமில்லை என்பர். "எம்மதமும் சம்மதம்" என்பதும் "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதும் இந்துசமய தத்துவமாகும். எதிர்காலத்தையும், ஒருவர் மனதைப் பூரணமாக அறியும் ஆற்றலையும் ஆண்டவன் மனிதனுக்கு கொடுக்கவில்லை என்று "கீதை" கூறுவதை நினைவிற்கொள்ள வேண்டும். பிறப்பு இறப்பு அநாதியானவை. அதர்மம் ஒடுங்கும்போது தீயவை அழிந்து நல்லவை காப்பாற்றப்படும் என்கிறது கீதை. இந்த வகையில் எமது தமிழ்மொழி, இந்துசமயம் அழியாது காப்பாற்றப்பட்டுள்ளது. மொகஞ்சதாரோ கரப்பா நகரங்கள் கடல் கொண்டபோது இலங்கையும், இந்தியாவையும் கடல்நீர் பிரித்தது எனினும் தொப்புள்கொடி உறவு நிலைக்கவே செய்தது.

காலசூழ்நிலை காரணமாக வெளிநாடுகளில் புகலிடம் பெற்றவர்கள் அந்தந்த நாடுகளில் தலைமுறை தலைமுறையாக அந்நாட்டுப் பிரஜைகளாக வாழ்கின்றனர். ஆயினும் தமிழ்ப் பண்பாட்டை மறக்காது தமது இளைய தலைமுறையினருக்கு கற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். தமிழ்ப் பண்பாடுகளான நடை உடை பாவனை, கலாசாரம் என்பவற்றைப் பேணிப் பாதுகாத்து வாழ்கின்றனர். இவ்வாறு தமது பண்பாடுகளைப் போற்றிப் பாதுகாப்பதன்மூலம் வெளிநாட்டவரை கவரச் செய்துள்ளனர். பண்பாட்டை வளர்க்கும் நோக்குடன் காலத்திற்குக் காலம் போராட்டங்கள் நடாத்தியும் வருகின்றனர். திருமணத்திற்கு மணமக்கள் ஈழத்தில் இருந்து அழைக்கப்படுகின்றார்கள். பெற்றாரும் உறவினர்களும் அழைக்கப்படுவது பண்பாட்டு விழுமியங்களே.

இலங்கை 65610 சதுர கிலோமீற்றர் பரப்பளவை உடையது. 20,222 210 மக்கள் தொகையில் 75% பௌத்த சிங்களவர் மிகுதி 15% தமிழ் இந்துக்கள், 7% முஸ்லீம்களாவர். மீதி கிறிஸ்தவர்களும் வேறு சமயத்தவராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2500 வருட வரலாறு உடைய பௌத்தத்தின் தோற்றமும் 5000 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த மொழியான தமிழும் இந்தியாவுடன் தொடர்புடையவையாகவுள்ள திராவிடர் ஆரியர் ஆண்ட காலத்தில் இராமாயணம், மகாபாரதம், ஸ்கந்தபுராணம் என்பன பண்பாட்டின் சின்னங்களாக மிளிர்ந்துள்ளன. கீழைத்தேச கலாசார வித்தகர் சேர் வில்லியம் ஜோன்சன் குறிப்பின்படி தொன்மைக் காலத்திலேயே இந்துக்கள் வாழ்ந்துள்ளமைக்கு அநுராதபுரம் சிவன் ஆலயம் நல்ல ஓர் எடுத்துக்காட்டாகும். நாடுபூராகவும் வர்ணபகவான் வழிபாடு, சிவ வழிபாடு, முருகவழிபாடு, கண்ணகை வழிபாடு, துர்க்கை வழிபாடு, விஷ்ணு வழிபாடு, நாகவழிபாடு, விருட்சவழிபாடு என்பன யாவும் பண்பாட்டின் விழுமியங்களாக உள்ளமையை பிராமியக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. "ஆதிச்ச நல்லூர்" தொல்பொருள் சான்றும் நெருங்கிய தொடர்புள்ளவை. அந்நியர் ஆட்சிக்காலத்தில் தமிழ் மொழி வளர்ச்சி குன்றிலும் கூட "ஆறுமுக நாவலர் இல்லை எனில் சொல்லுதமிழ் எங்கே" என்பதற்கு அமைய இவர் தலைமையில் பேச்சுவழக்கில் ஏட்டுச்சுவடியில் இருந்தவற்றை அச்சுப்பதிவாக்கினார்கள். இவை இப்போது கணனிமூலம் வலைப்பின்னலாக நினைத்த மாத்திரத்தில் நினைத்தபோது சகல விபரங்களையும் பெறுவதனால் தமிழும் சைவமும் அழியாவரம் பெற்றுவிட்டன. யாழ்ப்பாணம் தமிழ் சினிமா வளர்ச்சிக்கு உயிர் நாடியாகவுள்ளது. சினிமா கலையில் நன்மை தீமைகள் இருப்பினும் அன்னப்பறவை நீரைப் பிரித்துப் பாலை உண்பது போல நல்ல பண்பாடுகளை வளர்க்க உதவுகின்றது.

இலங்கைத் தமிழர் தாய்மொழியான தமிழை புலம்பெயர்ந்தவர்களில் 90% மக்கள் பேச எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக உள்ளனர். தமிழர்கள் இலங்கையில் யாழ்ப்பாணம், புத்தளம், மன்னார், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை, மலைநாடு என்று பரவியுள்ளபோதும் தாய் மொழியான தமிழையே பேச்சு மொழியாகப் பயன்படுத்திவருவதில் பெருமையுடையவர்களாக வாழ்கின்றனர். உத்தியோகத்திற்காக ஆங்கிலம், சிங்களம் போன்ற ஏனைய மொழிகளைக் கற்றாலும் கூட தாய் மொழியைப் பேணி வளர்ப்பதால் பெருமையடைகின்றனர். மரபு வழியாகத் தமிழரின் அறிவு வளர்ச்சி கண்டுள்ளது. அதற்குப் பல பெரியார்கள் காலத்திற்குக் காலம் வழிகாட்டிகளாக இருந்துள்ளனர். மேலும் தமிழ் மகாநாடுகள், பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், சினிமா என்பனவும் தமது பங்களிப்பினைச் செய்து வருகின்றன. சொந்த மண்ணிலேயே புகலிட வாழ்வில் இரு தலைமுறைகளாக வாழும் நிலை இருப்பினும் தமிழ் பண்பாடு மாறுபடவில்லை எனினும் பிறநாடுகளுக்குப் புகலிடம் சென்ற சில நாட்டவர் "பாம்பு தின்னும் ஊரில் நடுமுறி நமக்கு" என்ற நிலையில் தமது திறமைகளைக் காட்டி வாழவே செய்கின்றனர். "மெல்லத்தமிழ் இனிச் சாகும்" என்று பாரதி சொல்லியமை பொய்யாகிவிட்டது. கல்வி, இசை, விஞ்ஞானம், தொலைத்தொடர்பு என உலகமயமாக்கலில் தமிழ்மொழியும் கணனி வலைப்பின்னலில் இணைத்து அழியாவரம் பெற்றுள்ளது. எம் தமிழ்மொழி "சுடச் சுடரும் பொன்போல" முத்தமிழையும் கொண்ட அமுதமாய் தமிழ் நிலைத்து விட்டது. கடல் கோள்கள், சுனாமி மொகஞ்சதாரோ, கரப்பா நகரங்களை அழித்த பின்பும் இவ்வளவு பொக்கிஷங்களைக் கொண்ட தமிழ்மொழியும் பண்பாடும் என்றும் அழியாது நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. புகலிட வாழ்வில் தமிழ்ப்பண்பாடு மேலோங்கி வளர ஆவன செய்வோம். அந்த வகையில் வெளிநாட்டில் வாழும் எமது "இரத்தத்தின் இரத்தங்கள்" குரல் கொடுக்கின்றார்கள். அதுவே எமது தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உந்து சக்தி ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## உ. ஆருயிர் ரமணன்

"நம்ம லஷ்மி" என்று பகவானால் குறிப்பிடப்படும் பாக்கியம் பெற்றவர் ஸ்ரீமதி லஷ்மி ரங்கநாதம். அவரை எல்லோரும் "ஊர் அத்தை" என்று அழைப்பார்கள். ஊர் அத்தை என்னிடம் சொன்னார்; "நான் என் அண்ணா நாராயணராவ் மூலம்தான் பகவானிடம் வந்தேன். அம்மாவும் நானும் ஊருக்குள் தங்கிக்கொண்டு தினம் ஆச்ரமத்துக்கு வருவோம். சின்னஸ்வாமி தனியாக சமையல் செய்து கொண்டிருந்த காலமது. என்னை அவருக்கு உதவும்படி கேட்டுக்கொண்டார்கள். ஒருநாள் நான் இட்லிக்கு மாவரைத்துக் கொண்டிருந்ததை பகவான் பார்த்தார். தனியாக ஏன் அரைக்கிறாய்? என்று கேட்டு விட்டு, தானும் என்னுடன் உட்கார்ந்து அரைத்து முடித்தார். அந்நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் எனக்கு மெய் சிலிர்க்கிறது.!"



ஊர் அத்தை மேலும் தொடர்ந்தார்: தவறு செய்தால், பகவான் கடுமையாக இருப்பதும் உண்டு. ஒருநாள். பிற்பகல் உணவுக்காக பூரிகளை எண்ணெயில் பொரித்து ஒரு தட்டில் அடுக்கி வைத்துக் கொண்டு, சில பூரிகளை மாத்திரம் நெய்யில் செய்து மேலாக எடுத்து வைத்துக் கொண்டேன். இவற்றை முதலில் பகவானுக்குப் பரிமாறி விடலாம் என்பது என் எண்ணம். எல்லோருக்கும் விநியோகம் ஆனபின் பகவான் என்னைக் கூப்பிட்டு, "இனிமேல் இப்படிச் செய்யாதே. இது மாதிரி வித்தியாசம் ஏதாவது காண்பித்தால், நீ தயார் செய்யும் எதையும் நான் தொடமாட்டேன்" என்றார் கடுமையாக. ரகசியமாக நான் செய்தது பகவானுக்கு எப்படித் தெரிந்தது? அன்றிலிருந்து நான் அந்தத் தவறை மீண்டும் செய்யவேயில்லை. பகவான் சொல்லில் உள்ள சக்தி அத்தகையது. ஒரே சொல்லில் ஒருவனுடைய வாழ்க்கையையே மாற்றிவிடும் கருணையின் ஊற்று அவர்; சக்தியின் உறைவிடமும் அவரே!

பகவானுடைய தலை அனேகமாக எப்பொழுதும் மெல்ல ஆடிக்கொண்டே இருக்கும். இது எல்லோரும் அறிந்த உண்மை. (ஒரு சிலர் இதை ஞானத்தின் அடையாளம் என்று எண்ணி தன் தலையை அதுபோல் ஆட்டிக்கொள்வதுண்டு) நேராக நடப்பது- ஏன் நிமிர்ந்து நிற்பது கூட பகவானுக்குக் கடினம். இது முதுமையின் அடையாளம் அல்ல. எனக்குத் தெரிந்த காலத்திலிருந்தே இந்தத் தலைநடுக்கமும், கோலை ஊன்றி நடப்பதும் (ஆதியிலேயே) உண்டு என்று குஞ்சு ஸ்வாமி சொல்வார். மதுரையில் அடைந்த மகத்தான ஆன்ம அனுபவம் விட்டுச் சென்ற அடையாளங்கள் இவை. இதைப்பற்றி குஞ்சுஸ்வாமி பகவானிடம் கேட்டபொழுது "ஒரு யானையை சின்னஞ்சிறு குடிசையினுள் கட்டிப்போட்டால் குடிசையின் நிலை என்னவாகும்? அது தகர்ந்து விடாதா? அதுதான் இங்கும் நேர்ந்துள்ளது" என்று பகவான் பதிலளித்தார்.

எவருடைய வாழ்விலாவது பகவான் நேரிடையாகக் குறுக்கிட்டு, அந்த வாழ்வின் போக்கையே (பிராப்தத்தை) மாற்றினார் என்றால், அது விளாச்சேரி ரங்கநாதய்யருடையதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லலாம். ஸ்ரீ பகவானின் பள்ளித் தோழ ராகிய அவரை ஒருசமயம் அனேக மாதங்கள் தன்னுடன் தங்க வைத்துக்கொண்டு விட்டார் பகவான். இடையில் ரங்கநாதய்யர் திரும்பிப் போவதற்கு அனுமதி கேட்டும் கிடைக்க வில்லை. பிறகு ஒரு வழியாக அவர் அனுமதி பெற்று ஊர் திரும்பியபோது அவருடைய பிரச்சினைகள் எல்லாம் விலகி விட்டிருந்தன. இந்த விவரம் தேவராஜ முதலியாரின் "தாயும் நீயே; தந்தையும் நீயே" என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரங்கநாதய்யருடைய பெண் அழகம் மாளும் பகவானின் தீவிர பக்தை. அவருக்கு அழகம்மாள் என்று பெயர் சூட்டியதே பக வான்தான். இந்த பக்தை தந்த விவரங்கள் சில:

பகவான் சந்நிதியில் நடந்த சில நிகழ்ச்சி களை என் தகப்பனார் சொல்லக் கேட்டிருக் கின்றேன். அண்ணாமலை மேல் முதன் முதலில் பகவானைச் சந்தித்ததும் ஆதங்கத் துடன் அப்பா, பணிவாக பகவானைக் கேட்டா ராம்: "என்ன இது பகவான்! நீங்கள் அருணா சலத்திற்கு புறப்படுவதன் முதல்நாள் மாலை யில் கூட நாம் கால்பந்து விளையாடினோமே, அப்பொழுது சாதாரணமாகத்தானே இருந்தீர் கள்! மிக நெருங்கிய நண்பனான என்னிடம் கூட தெரிவிக்கவில்லையே!" அதற்குப் பக வான், "ரங்கா, நான் என்ன, சாதாரணமாக மூட்டை முடிச்செல்லாம் கட்டிக்கொண்டா இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்? ஏதோ ஒரு மகத்தான சக்தியல்லவா என்னைத் தள்ளிக்கொண்டு வந்து அருணாசலத்தில் சேர்த்தது! இதில் வேறு எதற்கு இடமிருந் தது?" என்று பதிலளித்தார்.

ரங்கய்யரின் மனைவி செல்லம்மாவும் பகவானின் பரம பக்தையே. ஒரு சமயம் இக்குடும்பத்தினர் எல்லோரும் பகவானின் அனுமதி பெற்று கிரிவலம் செய்யப் புறப் பட்டனர். காலில் வீக்கம் ஏற்பட்டு நடக்க முடியாமலிருந்ததால் செல்லம்மா மட்டும் அவர்களுடன் போகவில்லை. ஆனால் ஆச்ர மத்தை ஒருமுறையும், பகவான் ஹாலை சிலமுறையும் சுற்றிவிட்டு ஹாலில் நுழைந் தார். அவரைப் பார்த்ததும் பகவான் ஆச்சரி யத்துடன், "என்ன! எப்படி இவ்வளவு சீக்கிரம் கிரிபிரதஷிணம் செய்துவிட்டாய்?" என்று கேட் டார். கால் வலியால் என்னால் அவர்களுடன் போகமுடியவில்லை பகவான்; அதனால் என்ன! ஆச்ரமத்தையும், ஹாலையும் சுற்றி யதே எனக்குப் பிரதஷிணம் மாதிரித்தான் தோன்றுகிறது. பெற்றோரான பார்வதி பரமேசு வரனை வலம் வந்த விநாயகர் உலகத்தைப் பிரதஷிணம் செய்த பலனைப் பெறவில் லையா? எனக்குத் தாயும், தந்தையும் பக வான்தான். பகவானை வலம்வருவது கிரியைச் சுற்றுவதை விடமேல்" என்றாள் செல்லம்மா. இதைக்கேட்ட பகவான், "சரி, சரி, விநாயகர் கேட்ட மாதிரி என்னிடம் மாம்பழம் கேட்கா மலிருந்தால் சரி" என்றார். அதற்கு செல்லம் மாள், "பகவானே! எனக்குப் பரிசொன்றும் வேண்டாம்; தங்கள் அருளே வேண்டுமென்று" கேட்க, பகவான் கருணையுடன் புன்முறு வலித்தார்.

(தொடரும்....

## அமைதிக்கு வழி!

ஞானியை சந்தித்த பக்தன் ஒருவன், "சுவாமி! மனம் சாந்தமடைய என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"கட்டு அவிழ்த்து விடப்பட்ட யானை, மரங்களையும், செடிகளையும் வேரோடு பிடுங்கிப் போடுகிறது. ஆனால் பாகன் அங்குசத்தால், அதன் தலையில் குத்தியதும் சாந்தமாகி விடுகிறது. அதைப்போல அடக்கி ஆளப்படாத மனம் வீண் எண்ணங்களில் அலைபாய்கிறது. விவேகம் என்ற அங்குசத்தால் அதைக் கட்டுப்படுத்தினால் அது அமைதியாகிவிடும்". சொன்னார் ஞானி.

–அருள்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பணக்காரனும் பல்லக்கு சுமப்பவனும்

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (குறள்: 37)

ஒருவன் பல்லக்கைச் சுமக்கிறான். மற்றொருவன் அதில் ஏறி உட்கார்ந்து பயணம் செய்கிறான். இவர்களிடம் போய் "இதுவே அறத்தின் வழி. நீ அறவோன் பல்லக்கில் பயணம்தான் செய்ய வேண்டும். நீ பாவி. என்றும் பல்லக்கைச் சுமந்துதான் சிரமப்பட வேண்டும்'' என்றும் சொல்ல வேண்டாம் என்று வள்ளுவர் கூறி இக்கதையை நினைவுபடுத்துகிறார். பல்லக்குத் தூக்குபவன் அதிக அறம் புரிந்தவனாகவுமிருக்கலாமே.

ஜடபரதன் என்று ஒருவன் இருந்தான். இவன் மக்களின் பார்வையில் ஜடமாக இருந்தான். பிராமணனுக்குப் பிறந்தும் உரிய கல்வியைப் படிக்கவில்லை. சுறுசுறுப்பாக எத்தொழிலும் செய்யவில்லை. யாராவது அவமானப்படுத்தினாலும், அடித்தாலும், திட்டினாலும் உரைக்காமல் போய்க்கொண்டிருந்தான். அவனுடைய சித்தி அவனைக் கொடுமைப்படுத்தினாள். பழைய சாதமே போட்டாள். நிலத்தில் கூலியாளைப்போல வேலை வாங்கினாள். அவனை நரபலி கொடுக்க ஒரு திருடர் தலைவன் பிடித்துப் போய்விட்டான். பரதன் எதிர்ப்பே காட்டாமல் ஜடமாக இருந்தான். காளி தேவிக்கே ஆவேசம் வர திருடர் தலை தெறிக்க ஓடினர். பரதன் காப்பாற்றப்பட்டான். ஒரு மரத்தடியில் வந்து நிம்மதியாக உட்கார்ந்திருந்தான். அவன் பார்க்க தடியாகவும் இருந்தான்

ரகூகணன் என்ற ராஜா, கபில மகரிஷியைக் கண்டு உபதேசம் கேட்கக் கிளம்பி வந்தான். அவன் ஏறிவந்த பல்லக்கை சுமக்க ஓராள் குறைந்தது. வீரர்கள் வந்து பரதனை மிரட்டினர். அவர்களோடு விவாதம் செய்யாமல் சென்று ரகூகணனின் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு நடந்தான்.

பல்லக்கு சாய்ந்தது. வேகமாகவும் போகவில்லை. ராஜா கடிந்தான். பல்லக்குத் தூக்கிகள், "பரதன் சரியாக நடக்கவில்லை" எனக் குறை கூறினர்.

ராஜா, "ரொம்பவும் மெலிந்திருக்கிறாய். அதுதான் சரியாக உன்னால் பல்லக்குத் தூக்க முடியவில்லை போலிருக்கிறது" என்று கிண்டல் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் பல்லக்கு பழையபடியே சாய்ந்து மெதுவாகச் சென்றது. மீண்டும் பரதனே காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டான்.

"பல்லக்குத் தூக்குவது தலைவிதியாக இருந்தும் அதை ஒழுங்காகச் செய்யாத உன்னை சவுக்கால் அடித்தால் நன்றாகத் தூக்கிச் செல்வாய்" என்று மேலும் பலபடி வசைமாரி பொழிந்தான்.

"அறம், தான் சிவிகையில் போவது போன்ற சிறப்பைத் தரும், செல்வம் தரும். அறம்தான் மக்களுக்கு நன்மை தருவது. இந்த அறத்தை மறந்தவர் செல்வம் இன்றி சிவிகை சுமப்பது போன்ற சிரமங்களைப் பெறுவர். இதனால் இயன்ற போதெல்லாம் முடிந்த வழிகளிலெல்லாம் நல்லதைச் செய்ய வேண்டும். ஆகவே யாரும் ஒருநாள்கூட விடாமல் அறம் புரிய வேண்டும்" என்றும் கூறினான்.

அதுவரை ஊமைபோல மௌனமாக இருந்த ஜடபரதன் பேசினான். "அரசனே! உன்னைப் பார்த்து சிரிக்கிறேன். என்னுதவியை நாடிப் பெற்ற நீ ராஜாவா? நானும் முற்பிறவியில் ராஜாவாக இருந்தேன். சிவிகையில் சென்றேன். நல்லறங்களைச் செய்தேன். இன்று இப்பிறவியில் உன் பல்லக்கைத் தூக்குபவனாக இருக்கிறேன். நாளை உன் நிலைமை எப்படியோ? உனக்கும் எனக்கும் இருக்கும் வேறுபாடு மாறக்கூடியது. ஆனாலும் அறம் பற்றி நீ அறியவில்லை. அறம் என்பது தான தருமம் செய்வது மட்டும் இல்லை. மனதில் குற்றம் இல்லாதிருக்க வேண்டும்.

மனக்குற்றம் என்பது அழுக்காறு, ஆசை, கோபம், கடுஞ்சொல் நான்குமாகும். இந்த அறம் இறக்கும்போது மீண்டும் பிறப்பின்றி வேறு உடல் உண்டாகாமல் காக்கும். எல்லா நாளும் அறம் செய்து வாழ்பவன் மீண்டும் பூமியில் தான் பிறக்காமல் தடுத்துக் கொள்ளுகிறான். இப்படி அறத்தால் உண்டாகும் இன்பமே, புகழுடன் கூடிய உண்மை இன்பமாகும். மற்றதெல்லாம் துன்பமாக மாறக்கூடியதே. பிறந்த நோக்கமான மீண்டும் பிறவி பெறா நிலையை நான் பெற்றுவிட்டேன். மிஞ்சியிருந்த பாவ வினைகூட உன்னைத் தூக்கி அடைந்த சிரமத்தால் கழிந்து விட்டது.

ஆகவே, பல்லக்குத் தூக்கியாக நான் வந்தாலும் நான் பாவியல்லன். நீ என்னைவிட அறத்தில் சிறந்தவனும் இல்லை. எவ்வளவு சிறிய, வறிய நிலையில் இருந்தாலும் சிலர் அறத்தில் மிகுந்தவராகவுமிருக்கலாம். இதோ எனக்கு விமானம் வரும். நான் மோட்ச உலகம் செல்லப் போகிறேன்" என்றான் ஜடபரதன்.

அரசன் தன் தவறை உணர்ந்து, ஜடபரதன் ஒரு ஞானி என்று அறிந்து "நீதான் கபிலரோ!" என்று கேட்டு வணங்கி ரகூகணன் உபதேசம் பெற்றான். பற்று, பாசம், மனக்குற்றம் உண்டாகி விடாதிருக்கவே பரதர் ஜடம்போல இருந்தார் என்றும் தெரிந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால் அம்மையாரும் சிவபக்தியும்

திரு T. நாகராசா அவர்கள்

சங்ககாலத்தை இயற்கை நெறிக்கால மென்றும் சங்கமருவிய காலத்தை அறநெறிக் காலமென்றும் பல்லவர் காலத்தை பக்தி நெறிக்காலம் என்றும் கூறுவர். சங்கமருவிய காலத்தின் இறுதிப்பகுதியில் வாழ்ந்தவர்தான் காரைக்காலம்மையாராவர். இவரது காலத் திலே முதலாழ்வார்களான பொய்கையாழ் வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்களென்பவர் கள் வாழ்ந்தார்கள். காரைக்காலம்மையார் எவ்வாறு பல்லவர் கால சைவ பக்திநெறிக் குத் தோற்றுவாயாக அமைந்தாரோ அவ் வாறே முதலாழ்வார்கள் மூவரும் பல்லவர் கால வைஸ்ணவ பக்திநெறிக்கு தோற்று வாயாக அமைந்தார்கள்.

காரைக்காலம்மையார், மங்கையர்க் கரசியர், இசைஞானியர் மூவரும் பெரியபுரா ணத்தில் சிறப்பித்துப் பேசப்படும் பெண்க ளாவர். இவர்களில் திலகவதியார், திருநாவுக் கரசு நாயனாரின் சகோதரியாவார். இவர் சைவத்தைவிட்டு சமண சமயத்தையடைந்து தருமசேனர் என்ற பெயருடன் சமண மதத்தை வாழ்விப்பதற்கு முயன்ற நேரத்தில் திலகவதியார் சிவனின்மூலமாக நாவுக்கர சருக்கு சூலைநோயை வருவித்து மீண்டும் சைவ மதத்தைச் சேர்ந்து அம்மதம் வாழ பெரும் தொண்டாற்றியவர். ஆனால் திலக வதியார் நாயன்மாராக சேர்க்கிழாரால் சேர்க்கப்படவில்லை. ஆனால் திலகவதியார் தவிர்ந்த மேற்கூறப்பட்ட மூவருமே நாயன் மாராக சேக்கிழாரால் பாடப்பட்டவர்கள். இவர் களில் காரைக்காலம்மையார் பெண் நாயன் மார்களில் பெரும் புரட்சியைச் செய்தவர். அதனால் பக்தி இயக்கத்திற்கு வித்திட்டவர் காரைக்காலம்மையாரேயாவர். பக்தி மார்க்கம், அறவொழுக்கம் அம்மையார் காலத்தில் எழுச்சிபெற்றுக் காணப்பட்டது. அம்மையாரும் முதலாழ்வார்கள் மூவரும் முறையே சைவம், வைணவம் வாழ வழிவகுத்தவர்கள். அம்மை யாரிடம் பக்தி வைராக்கியம், இறைவன் புகழ் பாடல், இறைவனைக் கண்டு அனுபவித்தல் என்பன நிறையக் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் இருந்தே சிவனிடம் அளவுகடந்த பக்தியுடையவராகக் காணப்பட்டார். இவர் அற் புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்று 143 செய்யுட்களைப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் பல்லவர்கால சமய இலக் கியங்கள் புதிய வழியிற் செல்வதற்கு வழி காட்டிற்று. பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களுக்கு வழிகாட்டியவர் அம்மையா ரென்றே கூறவேண்டும். எனவே பல்லவர் கால சமய இலக்கியங்கள் புதிய வழியிற் செல் வதற்கு வழிகாட்டிற்று. அதுமட்டுமன்றி வைணவ ஆழ்வார்களுக்கும் இவரது பாடல் வழி காட்டிற்று. இவர் வெண்பா யாப்பைக் கைக்கொண்டு தமிழ் இலக்கியத்தை வளர்த் தார். மேலும் சிவபக்திக்கு மட்டுமன்றி தமிழில் புதிய இலக்கிய மரபொன்றைத் தோற்றுவித்த பெருமையும் இவரையே சாரும். அம்மை யாரின் பக்திக்கும் தமிழின்மேல் அவர் கொண்ட பற்றுதலுக்கும் எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலைக் கூறலாம்.

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார் கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் எது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரின் பாடல்களுக்கும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் போன்றோரின் பாடலுக்கும் இடையில் நிறைய வேறுபாடு காணப்படு கின்றது. நாயன்மாராக மேற்குறிப்பிட்டோர் கோயிலைச் சூழ்ந்தே தேவாரம் போன்ற பாடல்களைப் பாட அம்மையார் ஈமப்புறங் காட்டிலுள்ள சிவனைப்பற்றித்தான் பாடுகின் றார். அம்மையார் பெரிய தனவந்தர் குடியில் பிறக்காவிடினும் ஓரளவு செல்வம் நிறைந்த தனதத்தன் மகளாகப் பிறந்தார். பரமதத்தன் என்னும் தனவந்தனை திருமணம் புரிந்து காரைக்கால் அம்மையார் என்று சிறப்புப் பெயர் பெற்ற புனிதவதியாருக்கு வாழ்க்கை சிறப்புற அமையவில்லை. பரமதத்தன் கொடுத்தனுப்பிய மாங்கனிகள் இரண்டு இவர் களுடைய வாழ்க்கையைத் திசை திருப்பிய' தென்று கூறலாம். முக்கனிகளிலொன்றாகிய மாங்கனி பல்வேறு இடங்களில் பிரச்சினை யாயிற்று. ஒன்று முருகனுக்கும் விநாயகருக் கும் நடந்த மாங்கனிபெறும் நிகழ்வு இறுதி யில் இருப்பிடத்தை விட்டே பழனியில் சென்று முருகன் இருப்பிடம் கொண்டான். அது போலவே பரமதத்தனுக்கும் காரைக்காலம் மையாருக்குமிடையில் ஏற்பட்ட மாங்கனிப் பிரச்சினை இறுதியில் அம்மையார் பேயுரு வாகி எலும்புக்கூட்டுடன் கைலையில் வீற்றிக் கும் சிவனிடம் சென்று சேர முடிந்தது. பரம தத்தன் கொடுத்த் மாங்கனியொன்றை உண வருந்த வந்த சிவனடியாருக்கு அம்மையார் கொடுத்ததே பிரச்சினைக்கு வழிவகுத்தது. ஒரு மாங்கனியை உண்ட பரமதத்தன் மற் றைய மாங்கனியையும் கொண்டு வருமாறு கேட்டபொழுது கணவரின் உத்தரவில்லாமல் கொடுத்துவிட்டேன் கணவன் என்ன சொல்லப் போகின்றாரோவென்று பயந்த அம்மையார் இறைவனாகிய சிவபெருமானின் அருளால் மாங்கனியொன்றைப் பெற்றுக்கொடுத்தாள். அம்மாங்கனி முன்பு உண்ட மாங்கனியைவிட அதிக சுவையாக இருந்ததினால் உண்மை யைக்கூறும்படியாக பரமதத்தன் கேட்க நடந்த விடயங்களையெல்லாம் அம்மையார் கணவ ரிடம் கூற வேண்டியதாயிற்று. இதைக் கேட்ட பரமதத்தன் அப்படியானால் இன்னுமொரு மாங்கனியை கொண்டு வந்து தருவாய் என்ற லும் தான் கூறியது பொய்யாகிவிட்டால் கணவனால் தண்டிக்கப்படவேண்டி வரு மென்று கண்ட அம்மையார் தனது பக்தி யினால் சிவனிடமிருந்து மாங்கனியைப் பெற்று கணவன் கையில் கொடுத்ததும் அக்கனி மாயமாக மறைந்தது. இந்நிகழ்விற்குப் பின்தான் பரமதத்தன் அம்மையாருடனிருந்து வாழாமல் பாண்டிநாடு சென்று மறுதிருமணம் செய்து கொள்ளவேண்டியேற்பட்டது. பல நாட் களாக இல்லம் திரும்பாத கணவனை தனது சுற்றம்சூழத் தேடிச்சென்று கணவனைக் காண் கிறாள். ஆனால் தமிழ் மரபிற்கு மாறாகக் கணவன் மனைவியை வணங்குகின்ற நிலை யேற்பட்டது. தமிழ்நாட்டுச் சமுதாயத்திற்கு ஒவ்வாத மரபுமுறையொன்றை கணவன் செய்துவிட்டானேயென்று துன்புற்று தனது யாக்கையை விட்டுப் பேயுருவாக சிவனைக் காணக் கைலைமலை யாத்திரை அம்மையா ரால் மேற்கொள்ள முடிந்தது. பக்தி வைராக் கியம் கொண்ட அம்மையார் இறைவனை நேரடியாகச் சென்றடைய வாய்ப்பு ஏற்பட்ட துடன் நாயனாராகவும் ஆனார். பெரியபுராணம் எழுதிய சேக்கிழார் அம்மையாருக்குத் தனி யிடம் கொடுத்துள்ளமையினை இவற்றின் மூலம் கண்டுகொள்ளலாம். பரமதத்தனையும் அம்மையாரையும் ஒப்பிடுமிடத்து பரமதத்தன் பொய் கூறுபவனாகவும் சுயநலம் கொண்ட வனாகவும் சேக்கிழார் பெருமான் காட்டியுள் ளார். வணிகத்தின் பொருட்டுத் தான் பாண்டி நாடு செல்வதாக அம்மையாரிடம் பரமதத்தன் பொய் கூறியதாக காட்டியுள்ளார். ஆனால் காரைக்காலம்மையாரோ கணவனே கண் கண்ட தெய்வமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தியதால் கணவனிடம் எந்த இடத்திலும் பொய் கூறவில்லை. இவ்விடயத்தை மாங்கனி கொடுத்த நிகழ்விலிருந்து தெளிவாகக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். ஒருத்திக்கு ஒருவன் என்ற தமிழக சமுதாயக் கட்டுக்கோப்பில் அம்மையார் வாழ்ந்தமையால் புனிதமாகவே நடந்த புண்ணியவதியென்று கூறலாம். இதனால்த் தான் அவள் பெற்றுக்கொண்ட பெயர் புனிதவதியாராக உள்ளது. இருவரது வாழ்க்கையிலும் பொருத்தமற்ற சம்பவங்கள் நடந்துள்ளதைக்கொண்டு திருமண வாழ்க்கைக்கு இருவரும் பொருத்தமற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். எனவே இருவரது வேறுபட்ட குணத்தினை வைத்தே அம்மையாரை மயிலுக்கும் பரமதத்தனை காளைக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். கணவன் சொல்லைத் தட்டாதவர்கள். ஒருவனைத் தவிர பிறரை ஏறெடுத்தும் பார்க்காதவர்கள் என்ற தமிழ் சமுதாயக் கட்டுப்பாட்டில் வாழ்பவர்கள். அது மட்டுமன்றி தனியாக வெளியூர் செல்லாதவர்கள் என்பதை அம்மையாரின் வரலாற்றில் கண்டு தெளியலாம். ஆனால் ஆடவர்களது தமிழக சமுதாயக் கட்டுப்பாடு பிறரைக்கூட திருமணம் செய்யலாம் என்பதைக் காட்டிச் செல்கின்றது. இதற்குப் பரமதத்தன் காரைக் காலம்மையாரை தனியே தவிக்கவிட்டுவிட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்த நிகழ்வின் மூலமாகக் கண்டு கொள்ளலாம்.

எனவே இவர்களது வாழ்க்கையில் குறிப்பாக அம்மையாரது வாழ்க்கை துன்பம் நிறைந்ததொன்றாகவும், கணவனால் கைவிடப்பட்ட ஒருத்தியாகவும் கண்டுகொள்ளலாம். இதற்கு உதாரணமாக பின்வரும் பாடலைக் கூறலாம்.


இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்களன்றார்

எனவே வாழ்க்கையிலே அம்மையார் பட்ட துன்பம், வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பு இதன் காரணமாக தான் பிறக்கக் கூடாது. அல்லது பிறவி வேண்டாம் என்பதை இறைவனிடம் வலியுறுத்தி அம்மையார் கேட்கின்றார். சுயநலம் கொண்ட கணவனை அடைந்தமையும் அதனால் ஏற்பட்ட வெறுப்பும் அதாவது கணவனின் மேல் பற்றின்மையையும் கண்டு கொள்ளலாம். இதற்கு உதாரணமாக மாங்கனிகளில் இரண்டையும் தானே உண்டால்போதும் மனைவியைப் பற்றி எள்ளளவேனும் சிந்திக்கவில்லை. எனவே மேற்கூறிய சம்பவங்களால் தனது உடலை வெறுத்து பேயுருவாகி இறைவனை அடைந்தார் காரைக்காலம்மையார். எனவே சிவபெருமானின் மீதுகொண்ட அளவற்ற பக்தி, பக்தி வைராக்கியம் சிவனிடம் சென்று சேர முடிந்தது. அம்மையார் தனது வாழ்க்கையில் பின்வரும் குறிக்கோளை நிறைவேற்றியவராக காணப்படுகின்றார். ஒன்று இறைபக்தியை வளர்த்தது. இரண்டு சுடலை ஞானம் பெற்றமை. இறைவனைச் சென்று சேர்ந்தமை. அத்துடன் அக்கால சமுதாயக்கட்டுப்பாட்டை மீறாமல் நடந்தமை. தான் வாழ்ந்த சூழ்நிலையில் பக்தியை வளர்க்க பாமாலைகளைப் பாடியமை. அவற்றின் பின்வந்த நாயன்மார்களைப் பின்பற்றுமாறு செய்தமை. சைவ தமிழ் பெண்மணிகளின் வரலாற்றில் புரட்சியொன்றை தனது பக்திநெறி வாழ்க்கையிலும் தமிழ்மொழி வளர்ச்சியிலும் ஏற்படுத்தியமை. எனவே பல்வேறு துன்ப சூழ்நிலையிலும் தனித்துவமான பெண்ணாக பார்போற்றும் பெண்ணாக வாழ்ந்து காட்டியவர் காரைக் காலம்மையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



16. 10. 2011 சந்நிதியான் ஆச்சிரமம்– மருத்துவ சேவைப் பிரிவின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

# திருவிளையாடல்



—ஆறுமுகநாவலர்—

படலம் — 59

## நரிபரியாக்கிய படலம்

மாணிக்கவாசகரை பாண்டியராசன் அடுத்தநாள் சபைக்கு அழைத்து, "இன்னும் குதிரைகள் வந்தில போலும்" என்று விசாரித்தான். அவர், "இன்று முதல் மூன்று நாட்களுக்குள் குதிரைகள் வந்துவிடும். அவைகள் நிற்றற்கு வேறு அகன்ற பந்திகளை அமைக்க; அவைகளுக்குத் தண்ணீரூட்ட வேறு தடாகங்களைத் தோண்டுக; நகரத்து மாடங்களை எல்லாம் அலங்கரிக்க" என்று தெரிவித்தார். அரசனின் ஏவலாளர்கள் அவ்விதமே செய்தார்கள். இவ்வாறிருக்க, மாணிக்கவாசகர் குறித்துச் சொன்ன மூன்று நாட்களும் கழிந்தன. பாண்டியன் மற்றை நாள், "இன்னும் குதிரைகள் வரக் கண்டிலம்" என்று சினந்து "இவன் வாங்கிய குதிரைகள் வருவது என்றைக்கு" என்று கூறி தன்னெதிரே நின்ற தண்டம் செய்வோரை நோக்கி, "இந்தக் கள்வனைக் கொண்டுபோய்த் தண்டம் செய்து, நமது பொன் முழுவதையும் அறவிடுங்கள்" எனப் பணித்தான். பாண்டியனுடைய கோப மிகுதியைக் கண்ட தண்டலாளர்கள் அவரைத் தனியிடத்துக்கு அழைத்துச் சென்று, "இனிப் பொன்னுக்கு வகையேது? சொல்லும்" என்று கூறி அவரது நெற்றியிற் கல்லேற்றினார்கள். தமது மெய்யடியார்களின் பாரங்கள் எல்லாம் தாங்குபவராகிய சிவபெருமான் அவர்மேல் ஏற்றிய பாரம் முழுவதையும் தாங்கிக் கொண்டார். அமைதியாக சிவபெருமான் சிந்தனையிலே லயித்திருந்த, மாணிக்கவாசகரை நோக்கிய தண்டலாளர்கள், "இது மாயம் போலும்" என்று மிகுந்த கோபங்கொண்டு, அவரது கரங்களிலும்- கால்களிலும் கிட்டியை மாட்டி நெரித்தார்கள். இக் கொடுஞ்செயலுக்கும் அஞ்சாது பரமசிவன் திருவடிகளைத் தியானித்தபடி இருந்தார் மாணிக்கவாசகர். சூரியன் அஸ்தமனமாயிற்று.

அன்றிரவு தண்டலாளர்கள் அவரை இருட்டறையில் விடுத்து, விலங்கு மாட்டி, மிக்க துயரம் செய்தார்கள். எதையும் பொருட்படுத்தாது, தியானித்தபடி இருந்த மாணிக்கவாசகர், வைகறையிலே அடியார்கள் சுந்தரேஸ்வரரையும்- மீனாட்சியம்மையையும் திருப்பள்ளியெழுச்சி செய்து வணங்கும் ஆர்ப்பரிப்பும் சங்கொலியும் வேத கோஷங்களையும் கேட்டிருந்தார். சூரியன் உதயமாயிற்று.

திருவாதவூர் சுந்தரேஸ்வரர் வீற்றிருக்கும் ஆலயக் கோபுரத்தை நோக்கிக், கைகளை சிரசின்மேற் குவித்து, அழுது தொழுது குரையிரந்து நின்றார். இவரது அழுகையானது, குழந்தையின் அழுகையொலி தாயார் செவியில் நுழைவதுபோல தமது திருச்செவியில் நுழைந்ததும், அவரது சிறையை மீட்க திருவுளங் கொண்டார் இறைவன். திருந்திதேவர் முதலான கணநாதர்களை அழைத்து, "ஆவணி மாதத்து மூல நட்சத்திரம் வந்துவிட்டது. பாண்டியன் மீண்டும் கோபங்கொள்ளுமுன், நான் புறப்பட்டுக் குதிரைகள் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும். காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி, நீங்கள் எல்லாரும் குதிரைச் சேவகர்களாகி அவற்றின் மீதேறி முன் செல்லுங்கள். நாமும் அவ்வாறே வருவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அருளிச் செய்தார். அக்கட்டளைப் படியே கணநாதர்கள் நரிகளைக் குதிரை களாக்கித் தாம் குதிரைப் பாகர்களாய் குதிரைகள் மீதேறி மேற்றிசை நோக்கிச் சென்றார்கள். சோமசுந்தரக் கடவுளும் தலை யில் வெண்பட்டுச் சாத்தி நெற்றி நிறைந்த திருநீறுடன், அழகே வடிவான குதிரைச் சேவகனாகி, சர்வ லட்சணங்களும் பொருந் திய வேதமாகிய குதிரை மீதேறி அவர்களின் நடுவே சென்றருளினார். குதிரைச் சேவகர் வடிவங்கொண்ட பரமசிவனின் அழகைக் கண்டு ஆடவரும் பெண்டிரும் தம்முள் வியந்து பேசவும், வாத்திய ஒலியும் குதிரை களின் குளம்பொலியும், வீரர்களின் ஆரவார மும் திசைகளைச் செவிடாக்க, மதுரை நகருக்கு அரைக்காத தூரத்தில் குதிரைகள் வீரர்கள் வந்தனர். குதிரைகளின் வரவைக் கண்டவர்கள் முகம் மலர்ந்து விரைந்து சென்று குதிரைகளின் வரவுபற்றி திருவாத வூரருக்குத் தெரிவித்தனர். திருவாதவூரர் உடனேயே அதனைப் பாண்டியனுக்குத் தெரிவித்தார். பாண்டியனும் திருவாதவூரரை அழைப்பித்து அவரை மகிழ்வித்து, மந்திரிகள் புடைசூழக் கோட்டை வாசலுக்கு வந்து, குதிரைகளின் வரவை எதிர்பார்த்துக் காத் திருந்தான்.

தமது திருவிளையாடலைச் சிறிது காட்ட விரும்பிய சோமசுந்தரக்கடவுள் குதிரை களின் வரவைச் சிறிதே தாமதித்தார். பாண்டி யன் குதிரைகள் வராமையால் ஏமாற்றம் அடைந்து, "நமது மந்திரி சொன்னது பொய்" என்றெண்ணிக் கோபங்கொண்டு, "திருவாத வூரரைத் தண்டியுங்கள்" எனுங் குறிப்போடு தண்டலாளர்களைப் பார்த்தான். அரசன் குறிப் பின்படியே திருவாதவூரரைக் கொண்டுபோய் அஞ்சாது கொடுமைப்படுத்தினார்கள். மகா ஞானியாகிய திருவாதவூரர் சோமசுந்தரக் கடவுளைத் தியானித்தபடி இருந்தார். திரு வாதவூரர், தமது செவிகளில் நுழைந்த பல வகை வாத்தியங்களின் ஒலியினாலும், குதிரைகளின் குளம்பினின்றும் எழுந்த தூசிப் படலத்தினாலும் குதிரைகளின் வரவை அறிந்து கொண்டார். அவ்வாறே, பாண்டியனும் குதிரைகளின் வரவை அறிந்து, வாதவூரரை அழைப்பித்து அவர்மீது அன்புவைத்து, "நமது கருமங்களை உம்மைப்போல வகித்து நடத்த வல்லவர் யாருளர்" என்று கூறி அடங்காத மகிழ்வுடன் அளவளாவிக் கொண்டிருந்தான். அப்போது சிறந்த தோற்றமுடைய பாகர் களோடு குதிரைகள் வந்தன. அழகும் பொலி வும் உடைய குதிரைகளைப் பாண்டியன் பார்த்து வியந்தான். திருவாதவூரரை நோக்கி, "இவருள்ளே தலைவர் யார்?" என்று வினா வினான். "அரசனே! நான் அதனை அறியேன்" என்றார் வாதவூரர். அப்பொழுது குதிரை வீரராகி வந்துள்ள சுந்தரேசர் கடிவாளத்தைப் பிடித்தபடி, வேதமாகிய குதிரையை பாண்டி யன் எதிரே நடத்திக் காட்ட, குதிரை வீரர் களாகி வந்த கணநாதர்களும் அவ்வாறே குதிரைகளை நடாத்திக் காட்டினர். பெரு மகிழ்வுடன் வீற்றிருந்த பாண்டியனின் முகத்தைப் பார்த்து, "அரசனே! உனது மந்திரியானவர் உன் பொருளெல்லாம் கொண்டுவந்து நமக்கும், நம்மவர்களுக்கும் மிகவும் கொடுத்தார். அதனாலேயே கிடைத் தற்கரிய- இலக்கணக் குறைபாடில்லாத நல்ல குதிரைகள் உனக்கு வந்தன. இக் குதிரை கள் இன்று நீ கயிறு மாற்றி வாங்குந்தன்மை யால் உன்னுடையவாம். அவை நாளைக்கு என்னவாகினும் எனக்கும் உனக்கும் அது குறித்து ஒரு கருமமும் இல்லை. குதிரை வாணிபத்தின் வழக்கம் இதுவே" என்றார் குதிரைச் சேவகரின் தலைவர். பாண்டியனும், அந்நகர மக்களும் கண்டு மகிழும்படியாக குதிரைச் சேவகர்கள் குதிரைகளைச் செலுத் திக்காட்டினர். குதிரைச் சேவகர்களின் தலை வனான சுந்தரேசர் பாண்டியனிடம் சென்று, "அரசனே! அரசர்கள் இக்குதிரைகளைப் பூசை செய்து வணங்கிக் கயிறு மாற்றுவர்" என்று கூறினார். அவ்வாறே மணிமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியன அணிவித்து தூபதீபங்காட்டி கயிறு மாற்றி, தான் ஏறிவந்த வேதமாகிய குதிரை தவிர ஏனைய அனைத்துக் குதிரைகளையும் பாண்டியன் கையிற் கொடுக்க, பாண்டியனின் சேவகர்கள் அவற்றினைக் கொண்டுபோய் பந்தியிற் சேர்த்தார்கள்.

குதிரை வீரராகிய கடவுளுக்குப் பாண்டியன் வெண்பட்டை வரிசையாகக் கொடுக்க, அவரும் அதனை ஏற்று, திருமுடிமீது அணிந்து கொண்டார். இதேபோன்று பாண்டியன் குதிரை வீரர்கள் அனைவருக்கும் பட்டாடைகள் கொடுத்தான். அவற்றைப் பெற்றுக் கொண்ட குதிரைச் சேவகர்களும், சேவகர்களின் தலைவராக வந்த சிவபெருமான் வேதமாகிய குதிரையோடும் அனைவரும் திரும்பிச் செல்வதுபோல பாசாங்கு செய்து மறைந்தருளினர். திருவாதவூரடிகளுக்கும் பல வரிசைகள் செய்து, அவரது மாளிகை செல்லவிடுத்து, தாமும் மாளிகை சென்றடைந்தான். மற்றைய மந்திரிமார்களும் நகர வாசிகளும் தத்தம் மனை புகுந்தார்கள். குதிரை வீரராய் வந்த சுந்தரேசப் பெருமானும் கோயிலையடைந்து, தம்முடைய திருவிளையாடல்களை உமாதேவியாருக்குச் சொல்லி, வீற்றிருந்தருளினார்.

# அருள் தாராயோ!



சங்கடம் தீர்க்கின்ற சந்நிதிவேலா!
சங்கரன் புதல்வா சந்நிதிவேலா!
உனைச் சரணடைந்தவர்க்கு எவ்வமில்லை வேலா!
உத்தம குருவே ஆற்றங்கரை வேலா!

ஆறுதல் சொல்ல யாருமில்லை வேலா
அச்சத்தை அடக்கிடும் ஆனந்த வேலா!
ஆனந்தம் அளித்திடும் அற்புத வேலா!
அன்பைப் பொழிந்திடும் அன்னை நீ வேலா!

சோதனைகள் தந்து நீ நடத்திடும் பரீட்சைகளால்,
சோர்ந்தே போனேன் சந்நிதி வேலா!
வேதனைகள் கொண்டு உனை நாடி வந்தபோதெல்லாம்
சோர்வுதனைப் போக்கி சோகம்துடைத்த சந்நிதி வேலா!

உன் அடியவள்படும் இன்னல் உனக்குப்
புரியவில்லையா? அன்னதான வேலா!
அன்னையாய் இருந்து அமுதூட்டும் அன்னதான வேலா!
அன்னை நீ பிள்ளை, நானல்லவா சந்நிதி வேலா!

உன்பிள்ளை நான்படும் துயர் கொண்டும் வேலா!
உன்னால் பார்த்திருக்க முடிகிறதா சந்நிதி வேலா!
உன் பதிலைப் பார்த்து காத்து நிற்கும் அடியவளுக்கு
உன் அருளைத் தாராயோ!

-திருமதி சத்தியா நந்தகுமார்-

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| சாரதா ஷோபிகா | | | 2000. 00 |
| வைத்தியநாதக்குருக்கள், சண்முகப்பிரியா, சிவலோகதயாபரி | கந்தவனக்கடவை | பொலிகண்டி | 3000. 00 |
| கனகசபேசன்மூலம் கனகரெத்தினம் குடும்பம் | | கனடா | 62100. 00 |
| ம. யோகவரதன் | | உடுப்பிட்டி | 4000. 00 |
| S. கிருஸ்ணபிள்ளை | | பிரான்ஸ் | 20000. 00 |
| வே. சரவணபவன் | வதிரி | கரவெட்டி | 1000. 00 |
| குணரெட்னம் கபிலன் | | நவிண்டில் | 1000. 00 |
| சண்முகராசா ரத்தீஸ் குடும்பம் | | இணுவில் | 5000. 00 |
| ப. தயாபரன் | | இடைக்காடு | 3000. 00 |
| கிருஸ்ணர் நல்லம்மா | | இடைக்காடு | 10000. 00 |
| தசராம் ஜெயரூபன் | | டென்மார்க் | 10000. 00 |
| பாலசுப்பிரமணியம் மூலம் P. சுந்தரலிங்கம் | | கனடா | 12000. 00 |
| இ. இராசராகுலன் | | சுண்ணாகம் | 3000. 00 |
| ஐ. சிவநாதன் | | கரவெட்டி | 20000. 00 |
| து. ஜீவமனோகரன் | இந்து ஆலயம் புருட்டோர் | சுவிஸ் | 30000. 00 |
| யாழ் சன்மார்க்க மகாவித்தியாலயம் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ஜெஷாந் ஜீவா | | சுவிஸ் | 10110. 00 |
| சோமசுந்தரம் சரஸ்வதிஅம்மா | | பிரான்ஸ் | 100 யூரோ |
| சி. செந்திவேல் | | சுவிஸ் (புத்தூர்) | 2000. 00 |
| இ. மகிந்தன் | தோப்பு | அச்சுவேலி | 1000. 00 |
| இ. காண்டீபன் | தோப்பு | அச்சுவேலி | 1000. 00 |
| திரு குணபாலன் | | கம்பளை | 500. 00 |
| S. மீரா | | கோண்டாவில் | 2500. 00 |
| T. சசிகரன் | | புத்தூர் | 2000. 00 |
| கலாஜினி பார்த்தீபன் | தெகிவளை | கொழும்பு | 3000. 00 |
| கி. சிவானந்தா | | பொலிகண்டி | 5000. 00 |
| சி. கனகலிங்கம் | | நீர்வேலி | 1000. 00 |
| கந்தையா வாமநாயகி | ஆத்தியடி | பருத்தித்துறை | 25000. 00 |
| Dr R. ரவீந்திரராஜா | | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| திருமதி தேவமனோகரன் | | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| சுலோஜனா கணேசகுமார் | | கனடா | 5000. 00 |
| திருமதி நாகராஜா | | கல்வியங்காடு | 2000. 00 |
| P. ரவீந்திரன் | | சுவிஸ் | 5000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தர்ஷினி மகேந்திரன் | | திருநெல்வேலி | 6000. 00 |
| சின்னத்தம்பி கிருபானந்தன் குடும்பம் | | கனடா | 10000. 00 |
| K.V. துரைசாமி | | மயிலிட்டி | 1000. 00 |
| வதனமோகன் குடும்பம் | | மல்லாகம் | 500. 00 |
| N. வட்சன் | | மட்டக்களப்பு | 2000. 00 |
| ப. சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) | | இணுவில் | 4000. 00 |
| கந்தசாமி குகனேந்திரன் | | அச்சுவேலி | 8000. 00 |
| R. தயாளினி | | லண்டன் | 20 டொலர் |
| இ. சிவராசா | | கரவெட்டி கிழக்கு | 10000. 00 |
| சுந்தரம்பிள்ளை குடும்பம் | | உரும்பராய் | 5000. 00 |
| இ. தயானந் | | நீர்வேலி | 4000. 00 |
| து. கேதீஸ்வரன் | | நீர்வேலி | 2500. 00 |
| திருமதி அம்பிகைராஜா ரஜனி | | சுவிஸ் | 5000. 00 |
| மகேஸ்வரி செந்திமாணிக்கம் | | மலேசியா | 15000. 00 |
| ஆறுமுகம் சின்னக்கண்டு | | உடுப்பிட்டி | 5000. 00 |
| பாலசிங்கம் முருகரவி | மட்டுவில் | சாவகச்சேரி | 3000. 00 |
| செந்திவேல் ரமேஷ் | வேம்படி ஒழுங்கை | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| கலைநேசன் சாம்பவி | வேம்படி ஒழுங்கை | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| மதிவண்ணன் ஜெயராம் | வேம்படி ஒழுங்கை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| மதிவண்ணன் ராகவன் | வேம்படி ஒழுங்கை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி | போதனா வைத்தியசாலை | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| கு. செல்லம்மா | | கரவெட்டி | 5000. 00 |
| திரு குலேந்திரன் (குமாரவேல் மூலம்) | | கனடா | 2000. 00 |
| திருமதி வசந்தாதேவி தெய்வேந்திரம் | | அவுஸ்திரேலியா | 18800. 00 |
| திரு ஸ்ரீஸ்கந்தராசா | | கொழும்பு | 5000. 00 |
| திருமதி ரஞ்சினிதேவி | | ஜேர்மன் | 45301. 00 |
| திருமதி நந்தகோபால் | | நோர்வே | 5000. 00 |
| A.V.S. சுந்தரலிங்கம் | | சாவகச்சேரி வடக்கு | 10000. 00 |
| நா. ஜெயபாஸ்கரன் குடும்பம் | | மானிப்பாய் | 8000. 00 |
| சிவகுருநாதன் கேசவன் வெள்ளவத்தை | | கொழும்பு | 1500. 00 |
| T. முரளிதரன் | | கனடா | 10000. 00 |
| க. நந்தகோபன் | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| க. விஷ்ணுமோகன் | | உரும்பராய் | 4000. 00 |
| ஆறுமுகம் சந்திரகுமார் | | நீர்வேலி | 3000. 00 |
| இ. சிவராசா | கரவெட்டி கிழக்கு | (மருத்துவ சேவைக்காக) | 10000. 00 |
| K.N. இராஜரட்ணம் | | கொழும்பு | 4000. 00 |
| R. நிருஜன் | | லண்டன் | 3000. 00 |
| ஆ. மகேந்திரலிங்கம் | | இணுவில் | 4000. 00 |
| K. சர்வானந்தா | | கொழும்பு | 1000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்ஞான இருள்போக்கும் கார்த்திகை தீபம்

திரு பா. கிருஷ்ணன் அவர்கள்

அருவமும் உருவமாகவும், ஆதியாக வும் அநாதியாகவும், ஒன்றாகவும் பலவாகவும் நின்ற அருட்பெருஞ்சோதியின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறுமுகமும், பன்னிரு கரமும் கொண்டு உலகம் உய்ய ஒருதிரு முருகன் உதித்தான். சரவணப் பொய்கை யிலே ஆறுகுழந்தைகளாக வளர்ந்தபோது, கார்த்திகைப் பெண்கள் அறுவர் பாலமுதம் ஊட்டி தாலாட்டிச் சீராட்டி கண்மணி முரு கனைப் போற்றி வளர்த்தனர். அதனால் அவன் கார்த்திகேயன் ஆனான். முருகப்பெரு மானுடைய விரதம் கார்த்திகை விரதம். மாலை 5மணிக்குமேல் கார்த்திகை நட்சத் திரம் இருக்கும் நாள் விரதநாளாகும். இவ்வீர தத்தின் சிறப்பினையும், மகிமையையும் கார்த் திகைப் பெண்களுக்கு சிவபெருமான் எடுத் துக்கூறி அருள்பாலித்தார். முருகப்பெருமான் அவர்களிடமிருந்து வளர்ந்த காரணத்தால், அவர்களுடைய நாளான கிருத்திகை நட்சத் திரத்தில் விரதமிருந்து கந்தனை வழிபடு வோர்க்கு கல்வி, செல்வம், ஆயுள், நல்ல மனைவி மக்கள், சகல செல்வங்களும் பெற்று வாழ்வார்கள் என சிவபெருமான் அருள் புரிந்தார்.

பரணிநாளில் விரதம் தொடங்கி, கார்த் திகையில் உபவாசம் இருந்து வழிபாடு செய்து, அடுத்தநாள் ரோகினியில் காலையில் நீராடி, நித்திய வழிபாடு செய்து, அடியார் களோடு உணவு உண்ண வேண்டும். திருக் கார்த்திகை தினத்தன்று தீபங்கள் ஏற்றி இறைவனைச் சோதிவடிவில் வழிபடுவர். அடி முடியில்லாத பரஞ்சோதியாக நின்ற சிவ பரம்பொருள் நெருப்புக் கம்பத்திலிருந்து பரம சிவனாக வெளிப்பட்டு, பிரம்மா விஷ்ணுவுக்கு காட்சி கொடுத்தபின், நெருப்புக் கம்பமானது மலையாக அமைந்தது. இதுவே அண்ணா மலை. பிரம்மா விஷ்ணுவுக்கு நெருப்புக் கம் பத்திலிருந்து லிங்கோற்பவராகக் காட்சி கொடுத்த நாளே சிவராத்திரி. அவர்கள் வேண்டுதலால் இவ்வுருவை மீண்டும் திருக் கார்த்திகை நாளில் காட்டுவோம் என அருளி னார். பரமசிவம் அடிமுடியில்லாத நெருப்புக் கம்பமாக நின்று, அனைத்து உலகங் களையும் சோதிவடிவாக, ஒளிவெள்ளமாக்கிய நாள் கார்த்திகைதீபம். திருக்கார்த்திகை நாளை கார்த்திகை தீபமாகக் கொண்டாடு கிறோம்.

திருவண்ணாமலை பஞ்சபூதத் தலங் களில் அக்கினித் தலமாக விளங்குவது. நினைத்தாலே முத்தி தரும் கோயில். சிவ மலை, சோதிமலை எனப் போற்றப்படும் திருவண்ணாமலை பழமையான அற்புதம் கொண்ட புண்ணிய தலமாகும். "அண்ணா மலை கைதொழப்பேணி நின்ற பெருவினை போகுமே" என்கிறார் அப்பர் சுவாமிகள். "ஆதி யும் அந்தமுமில்லாத அரும்பெரும் சோதி" என்கிறது திருவாசகம். பிரமா, விஷ்ணுவின் ஆணவ இருளைப் போக்க எடுத்த அலை சோதி வடிவமே கார்த்திகை தீபமாக மிளிர் கிறது. கார்த்திகை தீபவிழா ஆண்டுதோறும் திருவண்ணாமலையில் பெருவிழாவாக நடை பெறும். கிரியே சிவமாகவும், சிவமே கிரியாக வும் விளங்குவதால், கிரிவலம் வருவது திருக் கைலாயத்தை வலம் வருவதற்கு ஒப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்கள், யோகிகள், ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள் வாழ்ந்து தவமியற்றி வரங்கள் பெற்று மோட்சமடைந்த புண்ணியதலம். கார்த்திகைத் தீபத்திருநாளில் இத்தலத்தைத் தரிசித்தால் ஞானமும், சித்தியும், முத்தியும் பெறலாம்.

"ஆடிப்பாடி அண்ணாமலை தொழ, ஓடிப்போகும் நமதுள்ள வினைகளே" எமது உடல் ஒரு மனை. உள்ளம் பாத்திரம். அதில் உணர்வாகிய நெய்யை ஊற்றுதல் வேண்டும். உயிரென்னும் திரியையிட்டுப் பிராணன் எனும் காற்றை நிறுத்தி, அறிவுச் சுடரை ஏற்றி அன்பினால் தூண்டிக் கொண்டிருக்கவேண்டும். இடைவிடாது தூண்டிக்கொண்டிருந்தால் ஆணவமாகிய மாய இருள் அகலும். சிவ பரஞ்சோதி தரிசனம் கிடைக்கும். கார்த்திகைத் தீபத் தரிசனத்தின் உண்மைத்தத்துவம் இதுவேயாகும்.

ஆதிகாலத்தில் இருந்தே இருள் அகல ஒளியேற்றுவது வழக்கம். கார்த்திகை மாதம் பிறந்ததும் சோமவாரம், பரணி, கார்த்திகை விரதங்கள் முடிய விநாயகர் விரதம் ஆரம்பமாகும். விளக்கீடு கார்த்திகை மாதத்திற்கேயுரிய சிறப்பு "விளக்கீடு காணாது போதியோ பூம்பாவாய்" என சம்பந்தர் பாடியுள்ளார். "தீப தரிசனம் பாப விமோசனம்" என்பர். "தீபமங்கள ஜோதி நமோநம" என அருணகிரிநாதர் பாடுகிறார். ஆலயங்கள்தோறும் அன்று "சொக்கப்பானை" கொழுத்தப்படும். கட்கப் பனை என்ற சொல்லின் திரிபே சொக்கப்' பானை எனப்படுகிறது. இத் தீ சுவாலை விட்டெரியும்போது சோதி சொரூபமாகவும், திருவண்ணாமலை தீபமாகவும் மக்கள் வழிபடுவர். முருகன் சந்நிதியில் அபிஷேக ஆராதனை செய்து மாவிளக்கு தேனும் தினைமாவும் கலந்து படைத்து மகிழ்வர். முருகன் ஆலயத்தில் நிகழ்வது குமாராலய தீபம். அடுத்து பௌர்ணமியன்று ஏனைய ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப் படுவது சர்வாலயதீபம். தீபம் பிரகாசிக்க லட்சுமி கடாட்சம் உண்டாகும். ஊனினை உருக்கி உள்ளொளி பிறக்கும். அஞ்ஞானம் அகன்று மெய்ஞானம் உண்டாகும். மன இருள் அகன்று தூய உள்ளம், நற்சிந்தனை, செல்வம்பெற, லட்சுமி வீட்டில் வாசம் செய்ய தீபங்கள் ஏற்றி வழிபட வேண்டும்.

திரிசங்கு மன்னன் கார்த்திகை விரதத்தினைக் கடைப்பிடித்து பேரரசனானான். பகீரதன் இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான். நாரதர் பன்னிரண்டு ஆண்டுகள் கார்த்திகை விரதத்தினை அனுஷ்டித்து சப்தரிஷிகளை விட உயர்ந்த ஆன்மீக நிலையை அடைந்தார். இன்னும் பலர் இப்புண்ணிய விரதத்தினை நோற்று பெருவாழ்வு பெற்றுள்ளனர்.

"மாதங்களில் நான் மார்கழி" என்று சொன்ன மாதவனுக்குப் பிடித்த மாதங்களுள் கார்த்திகையும் ஒன்று. அண்ணாமலையானுக்குகந்த தீபத்திருநாள் வரும் கார்த்திகை மாதம் பல பெருமைகளைக் கொண்டது. புனித நீராடல், புண்ணியம் சேர தான மளித்தல், இறைவன் நாமங்களைப் பாராயணம் செய்தல் எல்லாவற்றிற்கும் சிறந்த மாதம். ஆடிமாத சுக்லபட்ச தசமியில் யோக நித்திரையில் ஆழும் மகாவிஷ்ணு, கார்த்திகைமாத துவாதசி அன்று விழித்தெழுகிறாராம். உன்னதமான இம்மாதத்தில் செய்யப் படும் அனைத்து நற்காரியங்களும் பலமடங்கு பயன்தரும். அம்பாள், ஐயனை தவமிருந்து அடைந்த நாளாக கார்த்திகைச் சோமவாரம் அநுஷ்டிக்கப்படுகிறது.

உலகம் உய்ய, தேவர்கள் சிறை மீட்க, சூரனைக் கூறாக்க வந்த ஏரகத்தான் சரவணப்பொய்கையிலே ஆறு குழந்தைகளாக, ஆறு தாமரை மலர்களிலே வந்துதித்த போது, கார்த்திகைப் பெண்கள் அரவணைத்து, பாலமுதம் கொடுத்து, குழந்தைகள் செய்கின்ற திருவிளையாடல்களையெல்லாம் கண்டு மகிழ்ந்து, போற்றித் துதித்து, கண்ணே, மணியே, முத்தே, கனியமுதே என்று தாலாட்டி சீராட்டி பாராட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தனர். அந்த ஆறுமுக வள்ளல் தாய்மையின் தூய்மையை உணர்த்தவே கார்த்திகைக் கிருத்திகையில் வேண்ட முழுதும் தருவோனாக இத்தினத்தில் அருள் புரிகின்றான். கார்த்திகை மைந்தன், கண்மணி முருகன், கார்த்திகேயன் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் வேற்பெருமான், அவன் சிவன் பிள்ளை, என்றும் சின்னப்பிள்ளை, செந்தூரின் கடலோரம் நிற்கும் பிள்ளை, பழனிக்குன்றிலிருக்கும் சின்னக்குழந்தை அவன் சேவடியை மெய்யன்போடு போற்றி வழிபட, தலையெழுத்தை நிச்சயமாக மாற்றமுடியும். கந்தவேள் கழலினை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். முருகன் திருவடி அடியார்கள் தலைமீது படப்பட, பிரமன் தலையிலெழுதிய கையெழுத்து அழியும். "அவன் கால்பட்டழிந்தது இங்கு என்தலை மேல் அயன் கையெழுத்தே" என்கிறார் அருணகிரிநாதர். விதியையும் மாற்றும் சக்தி முருகன் சேவடிக்குண்டு. அமரர் குலம் காத்த கந்தவேளை, அம்மையப்பர் அருளிய இன்ப அமிர்தத்தை, எவ்வுயிர்க்கும் தஞ்சமென நிற்கும் தனிப்பொருளை, அடியவர்தம் பிறப்பொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கும் பிள்ளைப் பெருமானைப் பாடித் துதித்து மகிழ்ந்து, பக்தி சிரத்தையோடு அவன் நினைவாகவே முருகனுடைய திருக்கார்த்திகை விரதத்தினை அனுஷ்டித்து சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு பெற்று முத்தியின்பம் பெறுவோமாக.

## வாழ்க்கை, பாவமற்றதாய் இருப்பதற்குக் காரணம்

ஏகநாத சுவாமிகளிடம் ஒருவன் வந்து வணங்கி நின்றான். அவன் அவரிடம், "சுவாமி தங்கள் வாழ்க்கை சிறிதும் சிக்கலற்றதாய், பாவமற்றதாய் இருக்கிறதே! இதன் இரகசியம் என்ன?" என்று கேட்டான்.

அதற்கு ஏகநாதர், "இப்போதைக்கு என் விஷயம் இருக்கட்டும் உன்னைப்பற்றி ஒரு விஷயத்தை உன்னிடம் நான் சொல்ல வேண்டியிருக்கிறதே!" என்றார்.

"அது என்ன விஷயம்?" என்று கேட்டுத் தெரிந்துகொள்ள அவன் ஆவலோடு இருந்தான்.

"இன்றையிலிருந்து ஏழாம் நாள் நீ மரணமடைவாய் என்றிருக்கிறதே!" என்றார் அவர்.

ஏகநாதர் வாயிலிருந்து வந்ததை யார்தான் பொய் என்று நினைப்பார்கள்? "ஏழு நாட்களில் சாவு! இன்னும் நூற்று அறுபத்தெட்டு மணி நேரம்தான் வாழ்க்கையில் எஞ்சியிருக்கிறது! கடவுளே, இதென்ன ஆபத்து?"

அந்த மனிதன் அவசரம் அவசரமாய் வீட்டிற்கு ஓடினான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. படுக்கையில் நீட்டிப் படுத்துவிட்டான்.

ஆறு நாட்கள் கழிந்தன. ஏழாம் நாள் ஏகநாதர் அவனிடம் வந்து, "இந்த ஆறு நாட்களில் நீ எவ்வளவு பாவம் செய்தாய்" என்று கேட்டார்.

மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த மனிதன், "சுவாமி பாவம் செய்வதற்கு எனக்கு நேரம் ஏது? மரணம்தான் சதா என் கண்முன் நின்று கொண்டிருக்கிறதே!" என்றான்.

ஏகநாதர், "என் வாழ்க்கை பாவமற்றதாக இருப்பதற்குக் காரணம் என்ன என்பது இப்பொழுது புரிந்துவிட்டதல்லவா? நான் எப்போதும் மரணத்தையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

—ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலிங்கத்தை நிமிர்த்திய கலயர்

திரு ஆ. மகேசு அவர்கள்

ஒரு இனத்தினுடைய சமயம், மொழி, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே, அந்த இனத்தினுடைய எதிர்காலம் செழுமை பொருந்தியதாக அமையுமென்பது வெள்ளிடைமலை. அச்சுயந்திரங்கள் எதுவுமே இல்லாத அக்காலத்திலுங்கூட ஓலைச்சுவடிகளிலுள்ள எமது சமய நூல்கள் ஓரளவேனும் நூல் வடிவிலே வந்துள்ளனவென்றால், எமது முன்னவர் செய்த முயற்சியும், நாம் செய்த தவப்பயனுமே என்று கூறுதல் பொருத்தமுடையதேயாகும்.

அந்தவகையில் எமது சமயத்திற்கு அணிசெய்யும் சமய நூல்களுள், சேக்கிழார் சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட "பெரிய புராணம்" எமக்கு ஓர் ஔடதமென்பதை யாரும் மறுதலிக்கமாட்டார்கள். இந்த நூலிலே அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய வாழ்க்கைமுறை, அவர்கள் அனைவரும் இறைவன்மீது செலுத்திய அளவற்ற அன்பு-பக்தி, அந்த அன்பின் மேலீட்டால் அவர்கள் செய்த தியாகங்கள் அனைத்தையும் நாம் படித்து பரவசமடையக் கூடிய ஒரு மேலான நூலாக இருப்பதோடல்லாமல், நாமும் அந்த வழிமுறைகளை ஓரளவுக்கேனும் அடியொற்றி எமது பிறப்பின் பயனை அடைய முயற்சி செய்யலாமல்லவா?

பெரியபுராண நூலிலே, ஒவ்வொரு நாயனாரும் எவ்வாறு இறைவனை இறுகப் பற்றிக்கொண்டார்கள் என்பது, அந்நூலினைப் படிக்கும்போது உணரமுடியும். அந்த வகையில், குங்குலியக்கலய நாயனார் வாழ்வியலை வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காவிரி பாயும் சோழவள நாட்டிலே திருக்கடவூர் என்ற ஓர் தலமுண்டு. அது இறைவன் வீரம் செய்த எட்டுத் தலங்களுள் ஒன்றாதலின் கடவூர் வீரட்டானம் என்னும் பெயர் பெற்றது. மார்க்கண்டேயருடைய உயிரைக் கவர வந்த காலனைக் காலால் உதைத்த இறைவன் குடிகொள்ளுகின்ற தலம் இதுவேயாகும். இந்த இறைவன் குடிகொண்டுள்ள ஊரிலேயேதான் கலயர் என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். பாலன் மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் உதைத்த கருணையை நினைத்து, கலயர் விதிப்படி குங்குலிய தீபமிடும் திருப்பணியை நியமமாகச் செய்து வந்தமையால் இவரைக் குங்குலியக் கலய நாயனார் என அழைத்தனர்.

இவ்வாறு இறைபணி செய்து வரும் நாளிலே திருப்பனந்தாட் செய்தி இவர் காதுக்கு எட்டியது. திருப்பனந்தாட் சிவாலயத்தின் பெயர் "தாடகையீச்சரம்" ஆகும். கோயிலமைப்பு ஏற்படாமல் பனை நிழலில் சிவலிங்கம் மட்டும் இருக்க, அவரவர் தம் இஷ்டமாக பூசித்து வந்த காலமாயிக்க வேண்டும். ஒரு காலகட்டத்திலே "தாடகை" என்ற பெண் அதனைப் பூசித்து வந்தாள். ஒருநாள் பூசை நிகழ்வின்போது, வழமைபோல் சுவாமிக்குச் சாத்த மாலையை இரு கைகளாலுந் தொட்டுத் தூக்கும்போது, தற்செயலாக ஆடை நழுவிற்று. ஆடை கீழ்விழாமல் தடுக்க வேண்டிக் கைகளை இடுக்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையால் அவர் நிமிர்ந்து கைநீட்டி மாலை சாத்தமுடியாத கஷ்டம் உருவாயிற்று. அந்நிலையில் அவள் எடுத்த மாலையை நழுவவிட்டு உடையைச் சீர் செய்யவோ, உடையை நழுவவிட்டு மாலையைச் சரியாகச் சார்த்தவோ இயலாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டில் நின்று மனங்கலங்கிப் பெரு வேதனையுற்றாள். மெய்யடியாளாகிய அவள் கலக்கந் தீர்க்கத் திருவுளங்கொண்ட சிவ பிரான், அவர் நின்ற நிலையில் வைத்தே மாலையை ஏற்கத் தகுமளவுக்கு தமது இலிங்கத் திருமேனியைச் சற்றே சாய்த்துக் கொடுத்து மாலையை ஏற்றுக்கொண்டார் என்பது வரலாறு. தாடகைக்காக சிவபிரான் அவ்விஷேச அருள்புரிந்த காரணத்தால் அது "தாடகையீச்சரம்" எனப் பெயர் பெற்றுவிட்டது. ஏனோ தெரியாது சரிந்த சிவலிங்கம் நெடுங் காலமாகச் சரிந்தபடியேயிருக்கும் படியாயிற்று. கலயர் காலத்திலிருந்த சிவபக்தனாகிய மன்னனொருவனுக்கு அச்சிவலிங்கத் திரு மேனியை எவ்வகையிலாவது நிமிரவைத்துக் காணவேண்டுமென்ற ஒரு பேராவல் உண்டா யிற்று. சாமானிய முயற்சியிலே அது நிமிரக் கூடியதாக இருக்கவில்லை. தன் காலாட் படையளவிலும் அது சரிவராமை கண்டு, யானைப் படையையும் கூட உபயோகித்தான். இலிங்கத்திற் கச்சுச்சாத்திப் பெருவடங்கள், சங்கிலிகள் தொடுத்து நெடும் வரிசையாக அரச படைவீரர்களும் யானைகளும் நின்று இழுத்தும் நிமிர்த்த முடியவில்லை. இடை யிடையே ஆளுக்காள் களைத்துச் சோர்ந்து விழுகின்றனர். சிவலிங்கம் நிமிர்ந்தபாடில்லை. சிவபிரான் முன் சரியத் திருவுளங்கொண்டது போல இப்போது நிமிரத் திருவுளங் கொள்ள வில்லை.

ஆட்களும் ஆனைகளும் மிகக் கடுமையாக அப்பணியிற் களைத்து விழுந்து சோர்வடையக் காணும் அந்நாட்களில் ஒரு நாள் குங்குலியக்கலயர் செய்திமூலம் தாம் அறிந்ததை நேரிற் காணும் விருப்புடன் சென் றுள்ளார். சேனையான சேனைகளெல்லாம் கூடக் களைத்து விழுந்தெழாமற் கிடக்கும் பரிதாபக் காட்சி அவரைத் துரிதப்படுத்து கின்றது. அக்கணமே,

"சேனையும் ஆனைபூண்ட திரளுமெய்த் தெழாமை நோக்கி
யானுமிவ் விளைப்புற் றெய்க்கும் இதுபெற வேண்டுமென்று
தேனலர் கொன்றையார்தந் திருமேனி பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறுபூண்டு கழுத்தினால் வருந்தலுற்றார்"

கயிற்று வடத்தின் தொங்கலையெடுத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டு வருந்தி வருந்தி இழுக்கின்றார் கலயர். இவ்வளவு வருந்துகின்றவர் இலிங்கம் நிமிரவேண்டிச் சங்கற்பித்துக்கொண்டிருந்ததாகவும் இல்லை. பின்னே அவரின் நோக்கு என்னே! "யானும் இவ்விளைப்புற்று எய்க்கும் இது பெறவேண்டும்" என்பதே நோக்கு. ஆனால் திருவருளுக்குப் பொறுக்கவில்லை போலும்! சம்பந்தப்பட்ட ஏனையவரைப்போல் இப்புண்ணிய ஆத்மாவும் இழுத்துக் களைத்து விழுந்திளைக்கத் திருவருளுக்குப் பொறுக்கவில்லை என்பதே அர்த்தம். எல்லாரையும் தூக்கி வாரிப்போடும்படியான பேரற்புதம் விளைந்துவிடுகின்றது. சேக்கிழார் சொல்கின்றார்.

"நண்ணிய ஒருமை யன்பின் நாருறு பாசத்தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி யிளைத்தபின் திறம்பிநிற்க
ஒண்ணுமோ கலயனார்தம் ஒருப்பாடு கண்டபோதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்"

என எத்தனையோ நாளாக பலர் எத் தனையோ விதமாக இழுத்துக்கொண்டிருந் தும் நிமிரமாட்டேன் என்றிருந்த சிவலிங்கம், கலயர் கழுத்தில் வடம்பூண்டிழுத்த மாத் திரத்தே நிமிர்ந்து விடுகின்றது. அத்தருணம் சிவலிங்கப் பெருமான் நேரே நின்றார். அமரர் களின் ஆரவாரம் அதனை மேலுலகிலும் ஊர்ஜிதம் செய்திருக்கின்றது. இந்நிமிர்தலுக் குக் காரணம் கலயனார்தம் ஒருப்பாடு என்கின் றார் சேக்கிழார். ஒருப்பாடு ஒன்றுபட்ட தன்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் தன்னில் விளக்கங்கண்டுகொண்டு கலயர் அதனோடு உணர்வினாலொன்றிநிற்கும் தன்மையே மேலோங்கியிருந்தது. அறுபத்து' மூவர்பாலும் நிகழ்ந்த அகிலம் வியக்கும் அற்புதச் செயல்கள் அனைத்திற்கும் ஏகப் பட்ட காரணம் அவரவர் சிவன்வேறு தான் வேறன்று என்ற வகையில் அவனோடு உணர்வு பூர்வமாக ஒன்றிநின்ற மேன்மை மட்டுமே யாகும். "ஒரு மையால் உலகை வெல்வார்" எனத் தடுத்தாட்கொண்ட புராணத்தில் சேக் கிழார் தெரிவித்த திருத்தொண்டரிலக்கணம் இங்கு கலயரிடத்தில் பிரயோக ரீதியாக விளக்கங் காட்டும் சிறப்பு மெச்சத்தக்கதாகும். உலகை வென்றே விட்டார் கலயர்! அரசபலம் முழுவதுஞ் சேர்ந்தே கலயரது ஆத்ம பலத் திற்கு நிகராகா நிலைமை ஊர்ஜிதமாய் விட்டது. இப்போ சம்பந்தப்பட்ட அரசனும் அவர் காலடியில்.

அரச படையினர் எல்லோரும் தாம் தாம் சிவனுக்கு வேறாக நின்றேயிழுத்தார்கள். ஆனால், கலயரோ, அவனோடு ஒன்றுபட்டு அதாவது ஏகனாகி நின்றே இழுத்தார். அவர்கள் இழுவையில் ஆற்றல்தான் மேலோங்கி யிருந்தது. ஆனால், கலயர் இழுவையில் அன்பே மேலோங்கியிருந்தது. அதுவும் சாமானிய அன்பன்று. ஒருமை அன்பு, அதா வது ஏகனாகி நிற்றல் வழியால் லயிக்கும் மெய்யன்பு. அவர்களுக்கும் அன்பு இருந்திருக் கலாம். ஆனால் இப்படியான ஒருமை அன் பாக இருந்திருக்க முடியாது. "அன்பும் சிவ மும் இரண்டென்பர் அறிவிலார்" என்ற திரு மூலரது வாக்குக்கு அமைய அவர்களது நிலையிருந்தது. ஆனால் அன்பே சிவமான தென்றும் அறிநிலை கலயர் நிலை.

ஆக, கலயர் வாழ்வியல் வாசகர்களது உள்ளத்திற்கு ஏதாவது சிந்தனைகளைக் கிளறுமாயின், அதுவே எமது பிறப்பின் பயனை ஈடேற்றும் என நம்புவோமாக.


சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P. No: 021 321 9599



காசோலை
செ. மோகனதாஸ்
க.இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www.sannithiyan.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதரும் கந்தர் அநுபூதியும்

திரு கு. நவரத்தினராசா அவர்கள்

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருவகுப்பு, கந்தர் அந்தாதி என்னும் ஐந்தும் இரத்தினங்கள் ஆகும். அவற்றுள் ஒன்று கந்தர் அநுபூதி. அநுபூதி என்றால் அனுபவ அறிவு- உண்மை அறிவு என்று கூறுவர். அருணகிரிநாதர் தாம் பெற்ற அனுபவ அறிவை மக்கள் எல்லோரும் பெற்று ஆனந்தம் அடைய வேண்டும் என்று உபகார உள்ளத்தோடு பாடி வைத்தார்.

கந்தர் அநுபூதியில் உள்ள மந்திரங்கள் எல்லாம் முருகவேளின் திருவருளை அடைவதற்கான திருமந்திரம் ஆகும். பண்டைக் காலம் தொட்டுப் பெரியோர் இந்நூலைத் தினமும் பாராயணம் செய்து வந்திருக்கின்றனர்.

பாடல்கள் எண் அளவில் சிறியதாயினும் பொருள் அளவில் பெருமைமிகத் தருவன. இந்து சமயத்தவர்களாய்ப் பிறந்த நாம் பாடல்கள் முழுவதையுமோ அல்லது ஒன்று இரண்டு பாடல்களையோ தினமும் உள்ளம் உருகப்பாடி பயன்பெறுவது நம் கடமை. குறைந்த தமிழ் அறிவு உள்ளவர்களும் எளிதில் படித்து உணர்வதற்கு ஏற்றவகையில் பாடல்கள் அமைந்துள்ளன.

அருணகிரிநாதருடைய இளமைப் பருவத்தில் தாய் இறந்துவிட்டதால் தம் சகோதரியிடம் வளர்ந்து வந்தார். முருகப்பெருமானின் திருவருள் பெற்று தமிழிலும் சமஸ்கிருதத்திலும் வல்லவராகி, சந்தக் கவி பாடுவதிலும் திறமை பெற்றார். முருகப்பெருமானுடைய பல திருத்தலங்களுக்கும் சென்று முருகப் பெருமானை வணங்கி, "கந்தர் அலங்காரம்" "கந்தர் அநுபூதி", "திருப்புகழ்" ஆகியவற்றைப் பாடி அருளினார்.

இவற்றில் கந்தர் அநுபூதியின் சிறப்பை- இதன் பொருள் சிறப்பை நோக்கி, மெய்ஞானியார் தாயுமான சுவாமிகள் "கந்தர் அநுபூதி" பெற்றுக் கந்தர் அநுபூதி சொன்ன எந்தை அருள்நாடி இருக்கும் நாள் எந்நாளோ" என வியப்படைந்து கூறினார் என்றால் அதன் அருமை பெருமையைக் கூற நமக்கு என்ன தகுதி உள்ளது.

கந்தர் அநுபூதியின் இரண்டொரு பாடல்களையும் அதன் பொருளையும் இங்கு தருகிறேன். அருணகிரிநாதர் முருகப் பெருமானைப் பணிந்து அவர் வேண்டுவதெல்லாம் என்ன என்று கேட்டால்

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே!

பகைவர்களைத் தேடி ஓடுகின்ற கயமுகாசுரனைப் போர்க்களத்தில் சாடி ஒழித்த விநாயகரின் தம்பியே!- ஆடுகின்ற மயில், சாடுகின்ற வேல், கொக்கரிக்கும் சேவல் ஆகிய நின் அணிகளைப் பாடும் பணியையே எனக்குப் பணியாக அருள்புரிதல் வேண்டும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது முதலாவது பாடலில். முருகப்பெருமான்மீது பாடிய பாடல்கள் சிறப்பான மந்திரங்களாக- எதையுமே எம்மால் மேற்கோள் காட்டாமல் இருக்கமுடியாது. அத்தனையும் அருணகிரிநாதரால் பாடப்பெற்ற "கந்தர் அநுபூதி"யைப் புரட்டினால் நம் மெய் சிலிர்க்கின்ற முறையில் அத்தனையும் தத்துவங்களாக தங்கம் நிகர் மந்திரங்களாகத் திகழ்கின்றன.

யாம் ஓதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போய் அற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

இப்பூவுலகில் பிறந்த நாம் வாழும்வகை அறியாது, "நான், எனது" என்ற மாயைகளில் சிக்கித் தவிக்கின்றோம். அப்படியாயின் இந்தப் பிறவிப்பிணிக்கு உரிய மருந்துதான் என்ன? என்பதற்கு அவர் கூறும் பொருள் இது. யாம் கற்ற கல்வியறிவையும், தத்துவ அறிவையும் அளித்தவர் யார்? வேலவர்! ஆதலால் உலகத்தீரே! மயக்கத்தை விட்டு தர்மத்தையும், தத்துவப் பொருளையும் உணர்ந்து கொள்ள இனிமேலாகினும் கந்தனிடம் விரையுங்கள் என்கிறார்

பின்னர் அவர் கந்தப்பெருமானிடம் என்ன வேண்டுகிறார் தெரியுமா?

இரவும் பகலும் துதிசெய்து இருநாள்
பரவும் பரிசே பரிசென்று அருள்வாய்
கரவுண்டு ஏழுசூர் களையக கதிர்போல்
விரவும் சுடர்வேல் விடுசே வகனே!

வஞ்சனையோடு எழுந்து வந்த சூரனை அழிக்க கதிர்போன்ற வேற்படையை ஏவிய வீரனே!- உனது இரண்டு திருவடிகளையும் இரவும் பகலும் வணங்கும் பாக்கியமே எனது தொழிலாக அருள்புரிதல் வேண்டும் என்கிறார். இரவும் பகலும் உன்னை வணங்கிக் கொண்டிருக்கும் பாக்கியத்தைத் தா என்கிறார்.

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே

"மனமே! நீ உய்வதற்கு உனக்கு வழி தெரியவில்லையே! கவனமாகக் கேட்டு அதன்படி நடந்து செல்வாயாக, உனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பங்கள் அனைத்தும் அதிகப்படியான ஆசைகளினால்த்தான். இந்தத் துன்பங்கள் அனைத்தும் உன்னிடம் வந்து சேருவதற்கு ஐந்து வழிகள் உண்டு. அவை மெய், வாய், கண், மூக்கு, செவியாகும். இந்த ஐந்து விதமான வாசல் வழியே ஆசை என்ற இந்தப் பொல்லாத கள்வனை உள்ளே அனுமதித்து விடாதே. இந்தப் பொல்லாத ஆசையை நீ விட்டால்த்தான் உனக்கு முருகவேளின் திருவடிகளைத் தொழுது வணங்கும் பாக்கியம் கிடைக்கும் என்கிறார். இந்தப் 14ஆவது மந்திரத்தின்மூலம் பிறவிப் பிணிக்கு அரிய மருந்தைத் தந்து விடுகிறார். இன்னொரு மந்திரத்தில் பொறுமையைப் பற்றி விளக்குகிறார்.

மனமே! பொதுவாகச் சினம் ஏற்பட்டுவிட்டால் அறிவின்வேலையானது முடங்கிப்போய்விடும். பின்னர் மயக்கநிலைதான் ஏற்படும். அதிகப்படியான சினமானது ஒருவனை வந்தடைந்தால், அவன் என்ன பேசுகிறான், என்ன சொல்கிறான் என்ற நிதானத்தையே இழந்து விடுவான். எனவே, நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? இந்த மலையோ ஒருவேளை புரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும்கூட நீ கலங்கக் கூடாது. பொறுமையாக இருக்கவேண்டும். அகந்தை வளருவதற்கு நீ இடம் கொடுத்துவிடாதே, முருகப்பெருமானுக்கு நீ தொண்டு செய்வாய் இந்த ஆசை உன்னிடத்தில் வளரட்டும்.

கிரிவாய் விடுவிக்ரம வேலிறை யோன்
பரிவாரம் எனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே

இவ்வாறாக 37ஆவது மந்திரத்தில் அகந்தையை அறுத்து எறியவேண்டும் என்கிறார். இவ்விதம் ஒருவனுடைய அகந்தையானது அழிக்கப்பட்டால் அவன் வாழ்வில் முன்னேற்றம் உறுதியாகும் என்பதை நன்குணர்ந்த அருணகிரியார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். என்னே சிறப்பான கருத்துக்கள்.

# அன்னத்தின் அருமையும் அன்னதானத்தின் பெருமையும்

**தானங்களிற் சிறந்தது அன்னதானம். நமது உடம்பை உயிருடன் சேர்த்து வைத்து ரட்சிப்பது அன்னமாகும். அதனாற்றான் உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என ஆன்றோர் பெருநன்றியுடன் இதனைப் போற்று கின்றனர்.**

**நமது சரீரத்தினுள் இருக்கும் பஞ்ச தேவதைகளுள் ஒன்றான பிராணன் நாம் உண்ணும் உணவின் சத்துக்களை எடுத்து எமது உயிரைக் காக்கின்றது. அபாணன் என்னும் தேவதை ஆகாரத்திலுள்ள வேண்டாத பொருட்களையும், வாயுக்களையும் வெளியேற்றுகின்றது. உதானன், விபானன் எனும் தேவதைகள் நாம் உண்ணும் உணவில் உள்ள சத்துக்களை பிரித்து எந்தெந்தப் பகுதிக்கு அவை சேர வேண்டுமோ அவற்றைத் தரம் பிரித்துச் சேர்க்கின்றது. சமானன் என்னும் தேவதை உணவுச் சத்துக்களைக் கொழுப்பாகவும், இரத்தமாகவும் மாற்றி எமது உடல் நலத்தைப் பேணுகின்றது.**

**எனவே நாம் உண்ணும் உணவு நமக்குள்ளே இருக்கும் பரமாத்மாவிற்கும், தேவதைகளுக்கும் அர்ப்பணமாகின்றது. எனவேதான் இந்துமதம் அன்னதானப் பணிக்கு முக்கியத்துவம் தந்திருக்கின்றது. இந்துமத புராணங்கள் வரலாறுகள் பலவும் கோவில்களிலும், மடங்களிலும் வருபவர்கட்கெல்லாம் உணவு கொடுப்பதைச் சிறப்பாகக் கூறுகின்றன. சேக்கிழார் பிள்ளைத்தமிழில் மடங்களில் சோறு மணக்கிறது, உண்பவர்களில் நெய் மணக்கிறது. அவர் நெற்றியில் நீறு ஒளிர்கின்றது எனக் கூறியிருப்பது சைவ ஆதீனங்கள் அன்னதானப் பணியிற் கொண்டிருந்த பெரு விருப்பினை நன்கு எடுத்துக்காட்டுவதாய் உள்ளது.**

**-நீர்வைமணி-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் 2011 வாசகர்போட்டி

## வினாக்கள்

1. உலக வாழ்க்கைக்கு உதவி புரிவது யாது?
2. ஆறுவகையான அந்தணத் தொழில் யாது?
3. பகவாய் நாட்டில் யோகர் சுவாமிகளின் சீடனாக விளங்குபவர் யார்?
4. வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விழைபவர்கள் முதலில் எதைச் செய்ய வேண்டும்?
5. சமுதாய சீர்திருத்தக் கருத்தினைக் கூறிய பெருமகனார் யார்?
6. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவர் யார்?
7. விழுமியக் கல்வியை ஊட்டும் பருவம் எது?
8. இவரும் எனது கூட்டத்தவர் என யோகர் சுவாமிகள் கூறிய அடியவர் யார்?
9. பந்த பாசங்களில் உட்பட்டு போரை நடத்த முடியாமல் சஞ்சலப்பட்டவன் யார்?
10. திருவருளோடு குரு வழிபாட்டையும் மேம்படையச் செய்தவர் யார்?
11. சான்றாண்மையைத் தாங்கியுள்ள ஐந்து தூண்கள் யாவை?
12. சிற்பியின் கட்டைவிரலைத் துண்டித்த சோழ மன்னனின் பெயர் என்ன?
13. ஆலய வழிபாட்டுக்கு எமக்கு வழி அமைத்துக் கொடுக்கும் நூல்களின் பெயர் யாது?
14. பிறவிக் கடலைக் கடப்பதற்குரிய தெப்பம் என்று எதனைக் கூறுவர்?
15. சண்முக கவசத்தினைப் பாடியவர் யார்?
16. பிரதோசம் என்பதன் பொருள் யாது?
17. இளங்கோ அடிகளாரின் சகோதரன் பெயர் என்ன?
18. இரட்டை மூலஸ்தானம் உள்ள ஆலயங்கள் எவை?
19. இருக்கு வேதத்தின் பத்தாவது மண்டலம் எவை பற்றிக் கூறுகிறது?
20. பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் யாது?
21. பிள்ளைத் தமிழ் பாடிய புலவர் யார்?
22. பட்டினத்தாரோடு கூட இருந்து உணவைப் பகிர்ந்துகொண்ட அடியவர் யார்?
23. வீடுதோறும் பிடியரிசி பெற்று கஞ்சித்தொட்டி அமைத்த பெரியார் யார்?
24. கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி பாடியவர் யார்?
25. கைத்தல நிறைகனி எனும் திருப்புகழ் அருணகிரிநாதரால் எந்த ஆலயத்தில் பாடப்பெற்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.
- 2011ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசிமாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.
- விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக்கப்படமாட்டாது.
- விண்ணப்பங்களை வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு என்ற முகவரிக்கு 16.1 .2012 தைமாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.
- போட்டியின் பெறுபேறுகள் தைமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

## ஞானச்சுடர் சந்தாதாரரின் கவனத்திற்கு

வணக்கம்! தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். ஞானச்சுடர் மலரின் தயாரிப்புச் செலவினங்களும், அஞ்சல் கட்டண உயர்வும் பல மடங்கு உயர்ந்து விட்ட இவ்வேளையிலும், மாதந்தவறாது ஞானச்சுடரினை வெளிக்கொணர்வதில் நாம் மிக்க ஊக்கமாகவே உள்ளோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் உங்களிடம் எதிர் பார்ப்பது ஒன்றுதான்.

2012ஆம் ஆண்டுக்கான நுழை வாசலிலே நாம் நிற்கிறோம். உங்களுடைய வருடாந்த சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் சந்தாப் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும், புதிய ஆண்டில் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான தங்களது சரியான முகவரியைத் தபால் மூலமோ- தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை.


தமிழகத் திருக்கோயில் வரிசை:

# பிள்ளையார் பட்டி

திரு வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

காலத்தால் மிகப் பழமை வாய்ந்த **பிள்ளையார்பட்டி** ஏறக்குறைய 1600 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. காரைக்குடி மாவட்டம், காரைக்குடி- திருப்பத்தூர் செல்லும் சாலையில் குன்றக்குடியை அடுத்து 3 கி.மீ தூரத்தில் வருகிறது பிள்ளையார்பட்டி. **"பிள்ளையார் பட்டி தேசி விநாயகப் பிள்ளையார் திருக்கோயில்"** என எழுதப்பட்ட வீதியை மூடிய பெரிய வளைவு இடது கைப்புறமாக நம்மை வரவேற்கிறது. அந்த இடத்தில் நின்றபடி நாம் வந்த நேர் பாதையைத் திரும்பிப் பார்த்தால், வேலவன் விரும்பி வீற்றிருக்கும் குன்றக்குடிக் குன்று தூரத்தே தெரிகிறது. குன்றக்குடி வேலவனை மனதில் தியானித்தபடி, பிள்ளையார்பட்டியின் பெருவளைவினூடாக (தெற்குநோக்கி) உள்ளே நுழைகிறோம். அகன்ற அப்பெருவீதியின் இரு மருங்கும் பல்வேறு வகைப்பட்ட கடைகளால் நிரம்பியிருந்தன. பல இடங்களிலும் நாம் இனிக்க இனிக்கக் கேட்கின்ற பக்திப் பாடல்கள் 1. ஐயப்பன் பாடல்களும் 2. பிள்ளையார்பட்டிப் பெருந்தெய்வத்தின் பெருமைபேசும் பாடல்களாக உள்ளதை அறிவீர்கள். இங்கும் இரு மருங்கும் நிரம்பியிருந்த கடைகளில் கூடுதலானவை C.D கடைகளாகவே காணப்பட்டன. கருங்கல்லிலும், வெள்ளெருக்கம் வேரிலும் செதுக்கப்பட்ட பிள்ளையார் உருவங்கள் சிறியதும்- பெரியதுமாக பல கடைகளிலும் காணப்பட்டன. ஏனையவை பூக்கடைகள், பட்டுத் துணிக் கடைகள், மணிக்கடைகள், பாத்திரக்கடைகள் என பலவகையாகவும் காணப்பட்டன. கடைகளின் முடிவில்-

நாம் இப்பொழுது பரந்து- விரிந்து நேர்த்தியாகத் திருத்தியமைக்கப்பட்ட படிக்கட்டு களுடனான திருக்குளம் ஒன்றமைந்த கோயில் வளாகத்தின் வடக்குப் பெருவீதியில் தெற்கே பார்த்தபடியே நிற்கிறோம். நீரால் நிரம்பியிருந்த குளத்தின் மறுகரையில் வடக்கு நோக்கிய பெரிய ராஜகோபுரம் தெரிகிறது. இதுவே பிள்ளையார்பட்டிப் பெருந் தெய்வமான "தேசி விநாயகப் பிள்ளையார்" உடைய வாசற்கோபுரமாகும். இக் கோபுரத்தினதும்- கிழக்கு நோக்கிய இன்னொரு கோபுரத்தினதும் (மருதீசர் வாசல்) நிழலானது, அமைதியான குளத்து நீரில் மேலே நிஜமும்- கீழே நிழலு மாகத் தெரியும் அழகுமிகு காட்சி ரம்மியமானது. (படம் பார்க்க) கோயிற் திருவீதியில் நின்றபடி பார்வையை நாற்புற மும் செலுத்துகிறோம். விற் பனை நிலையங்கள் எதுவு மற்று, கோயில் சம்பந்தமான சில கட்டிடங்களும் பருத்த மருத மரங்களுமே அந்தப் பரந்த வீதிகளில் காணப் பட்டன.



வீதியினை வலமாக நடந்துவர கிழக்கு வாயிற் கோபுரத்தின் எதிர்ப்புறமாக கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக அலுவலகம் காணப்படுகிறது. "நிர்வாக அலுவலகம்" என்பது நவீனபாணிக் கட்டிடமல்ல. வேலைப்பாடமைந்த தூண்களுடனான- இரு புறமும் திண்ணைகள் கொண்டு நடுவே வாசலுடன் கூடிய பழைய முறையிலான பெரிய வீடு அது. அதனையும் கடந்து, அகன்ற அந்த வெளிப்பிரகாரத்தைச் சுற்றிவருகிறோம். (காரைக்குடி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும், நுணுக்கமான வேலைப்பாடமைந்த தேக்குமரத் தூண்கள் கொண்ட பழமைபேசும் வீடுகளை இன்றும் காணமுடிகிறது. திருக்கோயிலின் மேற்குப்புறம் இது. பருத்த யானையொன்று படுத்திருக்கும்போது- அதன் பின்புற அமைப்பு எத்தகையதாக இருக்குமோ அதுபோன்ற அமைப்புக்கொண்ட ஒரு மலைக்குன்று கண்ணிற் படுகிறது. இதுவே பிள்ளையார்பட்டிப் பெருமான் குடிகொண்டுள்ள குடைவரைக் கோயிலின் பிற்பக்கம். (விபரம் பின்னர் வரும்) குன்று- இடையே மேலைவீதி- மறுபுறம் ஒரு பெரிய கட்டிடம். தமிழ்நாட்டுக் கோயில்களில் அர்ச்சகர்களாகத் தகுதிபெறும் அனைவரையும் பயிற்றுவிக்கும் மிகப்பெரிய **"குருகுலம்"** அது. பயிற்சி பெறும் பயிலுனர்களிடையே, பூநூல் தரித்து- குடுமி வளர்த்த- நடுத்தர வயதினரான இரண்டுமூன்று வெள்ளைக்காரர்களையும் காண முடிந்தது.

வடக்குக் கோபுர வாசலுக்கும் குளத்துக்கும் இடைப்பட்ட மண்டபத்தினூடாக நடந்து மீண்டும் பழையபடி கிழக்குக் கோபுர வாசல்வரை வந்து உள்ளே நுழைகிறோம். ஏனைய திருக்கோயில்கள் போன்ற வழமையான கட்டமைப்பாக இல்லாமல் சற்று வித்தியாசமான அமைப்புடைய கோயில் வளாகம் இது. அதனால் வாசக அன்பர்கள் இடது- வலது- திக்குத் திசைகளை சற்று ஊன்றிக் கவனித்து நம்மைத் தொடர்ந்து வரவும். இக்கோயில் உள்ளமைப்பு இரு பகுதிகளைக் கொண்டது.

பகுதி:1- திருக்கோயில் வளாகத்தின் தென்புறத்தில் வடக்குத் தெற்காக நீண்டு கிடக்கும் மலையினைக் குடைந்து சமைக்கப்பெற்ற *"குடைவரைக்கோயில்". இந்தக் குடைவரை அமைப்பு 1600 ஆண்டுகளாக எவ்வித மாற்றத்திற்கும் உட்படாமல் இன்றுவரை அப்படியே உள்ளது.

பகுதி:2- லிங்க வடிவில் மருதீசர் அமர்ந்துள்ள கருவறையும்- சுற்று மண்டபமும்- பரிவார மூர்த்தங்களும், பிற்காலத்தய கிழக்குப் பார்த்த கோபுரமும் கொண்ட பகுதி.

கோபுர வாசல் தாண்டியதும் நமது வலது கைப்பக்கமாக பத்துத் தூண்கள் கொண்ட அலங்கார மண்டபமும் (நமது வழக்கில் இதுவே வசந்த மண்டபம்) இடது கைப்பக்கமாக மடைப்பள்ளியும் தெரிகிறது. இன்னும் சற்று எட்டி நடந்தால் (வலது கைப்புறம்) வடகிழக்கு மூலையில் தெற்குப் பார்த்தபடி பள்ளியறையும்- அருகே சிவகாமி அம்பாள் சகிதம் அமர்ந்துள்ள நடராஜ மூர்த்தியையும் தரிசிக்கிறோம். உள்ளே இருபுறமும் எட்டெட்டுத் தூண்களுடன் ஒரே சம அளவிலான இரு திருமுறை மண்டபங்கள் இரு மருங்கும் காணப்படுகின்றன. திருமுறை மண்டபங்களின் நடுவே நால்வர், அகோரமூர்த்தி, சப்த கன்னியர், காட்சி விநாயகர் சந்நிதிகள் உள்ளன.

இப்பொழுதும் நாம் மேற்குத் திசையைப் பார்த்தபடியேதான் நிற்கிறோம். இடது பக்கம்

---

* குடைவரைக்கோயில்கள் என்பவை முற்றாக மலையைக் குடைந்து அமைக்கப்படுவது. இத்தகைய குடைந்த கோயில்கள் மாமல்லபுரத்தில் வெளிப்புறச் சந்நிதிகளாகவும், பிள்ளையார் பட்டியிலும் திருப்பெருங்குன்றத்திலும் குடைந்தெடுத்த கோயில்களாகவும், திருச்சி மலைக்கோட்டையில் மண்டப அமைப்புக்கள் கொண்டதாகவும்- இவ்வாறாகத் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும் குடைவரை அமைப்புக்கள் வித்தியாசமாகக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார்பட்டிப் பெருந்தெய்வத்தின் வடக்குப் பார்த்த கருவறையும், நேராக வலது கைப்புறம் விநாயகரின் வடக்குப் பார்த்த கோபுரத்தையும் (கடைத் தொகுதியைக் கடந்து வந்து குளக்கரையில் நின்றபோது வடக்குப் பார்த்தபடி தெரிந்த அதே கோபுரந்தான் இது) காண்கிறோம். விநாயகருக்கும் நமக்குமுள்ள நேர்கோட்டில் ஸ்தலவிருட்சமான மருதமரம் தெரிகிறது. (கோயிற் சுற்றுவீதியின் பல இடங்களிலும் மருத மரங்களைப் பார்த்தது ஞாபகம் வருகிறதா!)

"பிள்ளையார்பட்டி" என்பதே நாடறிந்த பெயராயினும் (1) எருக்காட்டூர் அல்லது எக்காட்டூர் (2) மருதங்குடி (3) திருவீங்கைக்குடி (4) திருவீங்கைச்வரம் (5) இராசநாராயணபுரம் என வேறு ஐந்து பெயர்களும் இத்திருக்கோயிலுக்குண்டு. (2) மருதங்குடி என்ற ஊரின் பெயரில் "மருதீசரும்", (3) தீருவீங்கைக்குடி என்ற ஊரின் பெயரில் "திருவேங்கைக்குடி மகாதேவருமாக" சிவனின் திருவுருவம் இரண்டிற்கும் ஊர் காரணப்பெயராக இருக்க, பிள்ளையாரின் திருநாமம் கொண்டு விளங்கும் "பிள்ளையார் பட்டி" என்கிற பெயரே மற்றப் பெயர்களைவிட பெருவழக்கில் இன்று மேலோங்கி நிற்கிறது.

எல்லா மந்திரங்களும் பிரணவ கோஷமாகிய "ஓம்" எனும் ஒலியை முதலாகக் கொண்டே ஓதப்பெறுகிறது. எந்த மூர்த்த்தைப் பூசித்தாலும் பிரணவப் பொருளாகிய பிள்ளையாரை முதலில் வணங்கி மேற்செல்வதே நமது மரபு. பல பொதுப் பெயர்கள் கொண்டு விநாயகர் அழைக்கப்பட்டபோதும், "கூப்பிடு பிள்ளையார்"- "மாற்றுரைத்த பிள்ளையார்"- "நுரைப்பிள்ளையார்" என்றவாறு பல சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்.

"கல், மரம், சுதை, உலோகம் இல்லாமலே பல்லவன் கோயில் சமைத்தான்" என்பது வரலாறு. கோயிலிலே காணப்படுகின்ற கல்வெட்டுக்களின் ஆதாரப்படி, மகேந்திர வர்மனால் அமைக்கப்பட்ட முதற்குடைவரைக் கோயில் இதுவென்றே கருதப்படுகிறது. 1600 ஆண்டுகளுக்கு முன்பே பிள்ளையார் பட்டி விநாயகரைக் கல்லில் சமைத்தது அங்கு நடைபெற்ற முதற் திருப்பணி. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் பிள்ளையார் திருவாயில் ராஜகோபுரம்- சுற்றுமதில் ஆகியவை ஏற்பட்டமை இரண்டாவது பணி. 60 ஆண்டுகளுக்கு முன்னர் கோயிற் திருக்குளத்தை வெட்டிக் கட்டியது மூன்றாவது திருப்பணி. மருதீசர் திருவாசல்- இராஜகோபுரம் ஆகியவை வனப்பும் எடுப்பும் கொண்டதாகக் கட்டியமை நான்காவது திருப்பணி. பல தலைமுறைகளாக "நகரத்தார்" வசம் இருந்துவரும் இக்கோயிற் திருப்பணிகள் மட்டுமல்லாமல் கோயில் நிர்வாக முறைகளிலும் பலவிதமான மாறுதல்களைச் செய்துள்ளார்கள்.



பிள்ளையார் பட்டிப் பெருந்தெய்வம்- தேசி விநாயகப் பிள்ளையார்- கற்பக விநாயகர், மகாகணபதி- வலஞ்சுழி விநாயகர் என்றெல்லாம் பெயர் பெற்ற பெருமானின் .கருவறை வாசலை நெருங்கிய தூரத்தில் நிற்கிறோம். அளவானதொரு வாசல் உள்ளே கருவறையில் விநாயகரின் இருபுறமும் 4+4 ஆக எட்டு விளக்குகளும், நடுவே (விநாயகரின் சிரசுப் பகுதிக்கு மேலாக) ஒன்றுமாக ஒன்பது விளக்குகள் கருவறையின் உட்புற மலைச்சரிவில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த விளக்குகளின் ஒளியைத் தவிர வேறு மின் ஒளி எதுவும் கருவறையின் உள்ளே இல்லை. விநாயகரின் இருந்த கோலம் மலையில் வெளிப்புறமான உருவமாகச் செதுக்கப்படாமல் அப்பிய அமைப்புடன் மலையுடன் ஒன்றிய நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணப்படுவதனால், சால்வை- அங்கவஸ்திரம்- மாலை எதுவும் பின்புறமாகச் சுற்றிப் போட முடியாது. இதே காரணத்தால் கருவறையை மட்டும் வலம்வரும் வழமையும் இங்கில்லை.

விநாயகரின் அளவான அலங்காரமும், பிரமிப்பூட்டும் பருத்த உருவமும் பார்ப்பவர் மனதைச் சுண்டி இழுக்கும். கூப்பிய கைகளைக் கீழேவிட மனமில்லாமல் மனது பிரார்த்திக்கும். பிறவிப்பயனை அனுபவித்துவிட்ட ஒரு நிம்மதி ஏற்படும். ஒரு முறையல்ல இருமுறை இம் மகா விநாயகரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தமை நாம் செய்த பெரும்பேறே. திருச்சியிலிருந்து மிகப்பக்குவமாக ஒரு பூக்கூடையில் கொண்டுவந்த 10 அடி நீளமான தடித்த பூமாலையையும், நீளமான வெண்பட்டுச் சால்வையையும், கிழக்குக் கோபுரவாசல் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினையும் கருவறை வாசலில் நின்றிருந்த அர்ச்சகரிடம் ஒப்படைக்கிறோம். சில நிமிட நேரத்தில் அலங்காரம் முடிந்ததும் பஞ்சதீபம் காட்டப்படுகிறது. தீப ஒலியில் ஜொலித்துப் பிரகாசித்த வலம்புரி விநாயகனை வேண்டித்தொழுது மனமுருகி நிற்கிறோம்.

அந்த வாசலிலே நாம் இரண்டு விடயங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது.

(1) முழத்துண்டு ஒன்று விநாயகருக்குச் சாத்துவதாயினும் நிர்வாகத்தினரின் அனுமதி பெறவேண்டுமென்பது-

(2) அங்குள்ள அர்ச்சகர்கள் யாரும் பற்றுச்சீட்டினைத் தவிர பணமெதுவும் வாங்க மாட்டார்கள் என்பது-

(இந்த இரு விடயங்களும் நாம் ஏற்கனவே தரிசித்த பல கோயில்களிலும் பெற்றிருந்த அனுபவத்தோடு பார்க்கையில் முற்றும் வித்தியாசமாக இருந்தது)

பெரும்பாலான இடங்களில் உள்ள விநாயக மூர்த்தங்களைவிட இங்குள்ள விநாயகர் கொண்டிருக்கும் வித்தியாசமான அம்சங்களைக் காண்போம்.

1) விநாயகரின் துதிக்கை வலம் சுழித்ததாக அமைந்திருப்பது.

2) வழமையான நான்கு கரங்களுடன் இல்லாமல் இரு கரங்கள் கொண்டிருப்பது.

3) அங்குச பாசங்கள் இல்லாமல் விளங்குவது.

4) வயிறு, ஆசனத்தில் படியாமல் "அர்த்த பத்ம" ஆசனம் போன்று கால்கள் மடிந்திருக்க அமர்ந்தருளுவது.

5) இடது கரத்தை இடையில் நாட்டி பெருமித கோலத்துடன் பொலிந்திருப்பது.

6) வலக்கரத்தில் மோதகந் தாங்கியிருப்பது.

7) வலது தந்தம் நீண்டும்- இடது தந்தம் குறுகியும் காணப்படுவது.

அவருடைய பெருவயிறு (லம்போதரம்) சர்வ அண்டங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள பெருமையையும், மோதகம் ஏந்திய வலது கரம் அகிலத்தைத் தாங்கும் அருமையையும் உணர்த்தி நிற்கிறது.

(1) விநாயகருக்கு இடதுபுறமாக மலைச்சரிவில் (2) **"சங்கரநாராயணர்"** நின்ற கோலத்தில் காணப்படுகிறார். சற்றுத்தள்ளி மேற்குப் புறத்தின் நடுவில் கிழக்குப் பார்த்த திருவாயிலுடன் கூடிய இன்னுமொரு சந்நிதானம் குடையப்பட்டுள்ளது. இந்தக் குடைந்தமைந்த பகுதியின் மையத்தில் **"மகாலிங்கம்"** பொலிவுடன் அமர்ந்திருந்து அருள்பாலிக்கிறார். இந்த மூர்த்திதான் (3) **"திருவீசர்"** என வழங்கும் திருவீங்கைக்குடி மகாதேவர் ஆவார். இன்னும் சற்று வடக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து, மேற்காகத் திரும்பினால் மலையின் வடபுறச் சுவரில் வடக்குப் பார்த்தபடி அமர்ந்திருக்கும் (4) **"லிங்கோற்பவ"** மூர்த்தியைக் காணலாம். இவ்வாறாக மலையைக்குடைந்தமைந்த நான்கு மூர்த்தங்களும் கொண்ட மலைப்பகுதியும், அதனுடன் தொடர்பாகவே உள்ள- நான்கு பெரும் தூண்கள் தாங்கி நிற்க- மேலே குடைபோன்றமைந்த வடக்குத் தெற்கான நீண்ட மண்டபமும், கிழக்கு மேற்கான அகலம் குறைந்த மண்டபமும் உள்ளடங்கிய பகுதியே (பகுதி:1) குடைவரைக் கோயிலாகும்.

இப்பொழுது நாம் நான்கைந்து படிகள் மேலேறி கிழக்குப் பார்த்தபடியுள்ள **"மருதீசர்"** வாசலில் வந்து நிற்கிறோம். மருதங்குடி நாயனார் (மருதீசர்) சந்நிதி, வாடாமலர் மங்கை (அம்பிகை)யின் சந்நிதி, இரண்டையும் இணைக்கும் மகாமண்டபம்- அர்த்த மண்டபம், சண்டிகேசர் சந்நிதி ஆகியவை மட்டுமே, அகலம் குறைவான இந்த மேற்சுற்று மண்டபத்தில் உள்ளன. கருவறையைச் சுற்றிய கோஷ்ட மூர்த்தங்கள் இங்கில்லை. பிரகாரத்தமைந்த பரிவார மூர்த்தங்கள் (நாம் ஏறிச்சென்ற நான்கைந்து படிகளின் கீழ்மட்டத்திலுள்ள) கீழ்ச்சுற்றிலுள்ள மண்டபத்திலேயே உள்ளன. விநாயகரே இங்கு மூலமூர்த்தமாக உள்ளதால், விநாயகர் இருக்கவேண்டிய தென்மேற்கு மூலையில் தனியம்மன்- சோமாஸ்கந்தர் சந்நிதிகளும், வடமேற்கு மூலையில் தண்டாயுதபாணி சந்நிதி, துர்க்கை- சரஸ்வதி- லட்சுமி மூன்றும் ஒன்றாயமைந்த சந்நிதி ஆகிய நான்கும் கிழக்குப் பார்த்தபடி உள்ளன. அடுத்துள்ள நவக்கிரக மண்டபம் தாண்டி பத்தடி தூரம் நடக்க மீண்டும் பழையபடி பிள்ளையார் வாசல் நேர்கோட்டுக்கு வந்துவிடுகிறோம். (பகுதி:2) விநாயகரும்- ஏனைய மூன்று மூர்த்தங்களும் அமர்ந்துள்ள பழையகால குடைவரைக் கோயிலையும், **இடைக்காலத்திய** மருந்தீசர் (மேல்+ கீழ்) மண்டபங்களையும் இடைவெளி தெரியாதபடி மிக நேர்த்தியாக இணைத்துள்ளார்கள்.

மண்டபத்தின் கிழக்குச் சுவரில் விநாயகரின் வழமையான திருவுருவம் 10'x10' என்கிற பெரிய அளவில் வண்ணக் கலவையில் அழகிய ஓவியமாக வரையப்பட்டுள்ளது. நாம் எத்திசையில் எந்த இடத்தில் நின்று பார்த்தாலும் விநாயகரின் கண்கள் எம்மை நோக்கியபடியே இருப்பது ஓவியத்தின் சிறப்பம்சமாகும்.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் விநாயகர் சதுர்த்தியும் இங்கு விசேடமானதே. ஆண்டுதோறும ஆவணித் திங்களில் வரும் விநாயகர் சதுர்த்திக்குக் காப்புக்கட்டி- கொடியேற்றி திருவிழா தொடங்கினால் 9ஆம்நாள் தேர்த்திருவிழாவும் 10ஆம் நாள் திருக்குளத்தில் நடைபெறும் தீர்த்தோற்சவமும் நடைபெற்று திருவிழா நிறைவுக்கு வருகிறது.

கல்லைக் குடைந்தமைந்த கற்பகமே! என்னெஞ்சக்
கல்லில் உனதுருவைக் காட்டாயோ!- சொல்லரிய
பிள்ளையார் பட்டிப் பெருங்கோயில் கொண்டருளும்
வள்ளலே எனைக் காக்க வா.

-சொ. சொ. மீ. சுந்தரம்.

பி.கு: பிள்ளையார்பட்டிப் பெருந்தெய்வத்தின் பெருமை பேசுவதற்கு அரியது. அந்தக் கற்பகமூர்த்தியின் திருக்கோயில் வனப்பையும்- அமைப்பையும்- அழகையும் கூடுமானவரை தர முயன்றிருக்கிறேன். இருந்தும்கூட, "முழுமையாகத் தந்தேன்" என்கிற பூரணமான திருப்தி சிறியேனுக்கில்லை. அதனால், தமிழ்நாடு செல்லும் வாய்ப்புப்பெறும் அன்பர்கள் அம் மகா விநாயகனின் திருக்கோயில் சென்று அவன் அருளாலே அவன்தாள் வணங்கி அவனருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்பது எனது பணிவான வேண்டுகோளாகும்.

**{(30-12-2011) விநாயக சஷ்டி விரதத்தின் மகிமைகருதி இத்திருக்கோயிற் கட்டுரை விசேடமாகப் பிரசுரமாகிறது}**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழிமாத வாராந்த நிகழ்வுகள்

**02.12.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "கலைநிகழ்வு"

வழங்குபவர்கள் :- காரைநகர் கிழவன்காடு கலாமன்ற பாடசாலை மாணவர்கள்

---

**09.12.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கலியுகத்தில் கந்தனே கண்கண்ட தெய்வம்"

வழங்குபவர் :- திரு இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா அவர்கள்

[யாழ் பல்கலைக்கழக 20 விடுதி காப்பாளர்]

---

**16.12.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**23.12.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "முருகநாம பஜனை"

வழங்குபவர் :- முருகன் அடியார்கள் (பக்கவாத்திய சகிதம்)

---

**30.12.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சோ. பரமநாதன் அவர்கள்

[கிராம சேவையாளர், குப்பிளான்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்


[பிரதிக் கல்விப் பணிப்பாளர்]

**மார்கழி 168ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org